பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 35 கதிர் 188 வைகாசி 22ஆம் நாள் புதன்கிழமை 05 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
Dual MBA in
Marketing | Administration | HR
0777 174 443
BLC CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

மீண்டும் நிறைவேற்று அதிகார - நாடாளுமன்ற அதிகார மோதல்

## பாதுகாப்பு ரகசியங்களை அம்பலப்படுத்துவதை நாடாளுமன்றத் தெரிவுக்குழு நிறுத்தவேண்டும்

சபாநாயகருக்கு அரச தலைவர் அழுத்தம்

கொழும்பு, ஜூன் 5
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுவரும் நிலையில், தேசிய பாதுகாப்பு இரகசியங்களைப் பகிரங்கப்படுத்தும் 07

### ஈகை திருநாள் வாழ்த்துக்கள்!

கொழும்பு, ஜூன் 5
தலை பிறை தென்பட்டுள்ளதால் இலங்கை வாழ் முஸ்லிம்கள் இன்று ஈதுல் பித்ர் எனப்படும் நோன்புப் பெருநாளைக் கொண்டாடவுள்ளனர். கொழும்பு பெரிய பள்ளி வாசலில் நேற்று மஹ்ரிப் தொழுகையின் பின்னர் 21

# ரிசாத்தை உடனே கைது செய்; பிக்குகள் மீண்டும் போராட்டம்

மாத்தறை விகாரை முன்பாக பட்டினியோடு அமர்ந்தனர்

கொழும்பு, ஜூன் 5
முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீனைக் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்திப் பௌத்த தேரர்கள் சிலர் நேற்றுப் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 21



### தேர்தல்களில் இனிமேல் போட்டியிடவேமாட்டேன்

நெருக்கமானோரிடம் மனம் திறந்த மைத்திரி

கொழும்பு, ஜூன் 5
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை 21

### பொதுத் தேர்தல் தொடர்பாக உயர் மட்டங்கள் ஆலோசனை

கொழும்பு, ஜூன் 5
நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு 07

### முஸ்லிம் அரசியல்வாதிகளால் முஸ்லிம் மக்களுக்கு ஆபத்தாம்

கொழும்பு, ஜூன் 5
இஸ்லாமிய அடிப்படைவாதத்தை அழிப்பதற்குப் பதிலாக 21

### முறைப்பாடு பதிய குழு நியமனம்

கொழும்பு, ஜூன் 5
நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன், முன்னாள் 07

### சமுர்த்தி நிகழ்வில் நேற்று விஜயகலாவால் குழப்பம்

பணியாளர்களைத் தரக்குறைவாகப் பேசினாராம்

யாழ்ப்பாணம், ஜூன் 5
சங்கானைப் பிரதேசத்துக்குட்பட்ட சமுர்த்தி வெளிக்களப் பணி 07

### மேல் மாகாண ஆளுநராக முஸம்மிலுக்கு நியமனம்

கொழும்பு, ஜூன் 5
மேல் மாகாணத்துக்கான புதிய 21

### குற்றங்களை நிரூபித்துவிட்டு தூக்கு விதித்தாலும் ஏற்பேன்

என் சமூகத்தை பழி தீர்க்காதீர்கள்
ரிசாத் எம்.பி. நடாளுமன்றில் உரை

கொழும்பு, ஜூன் 4
என் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட் டால் எனக்குத் தூக்குத் தண்டனை விதித்தா 07

### அமைச்சர்கள் விலகல் யானையின் நாடகமே

இப்படிக் கூறுகிறது பொரமுன

கொழும்பு, ஜூன் 5.
அரசில் அங்கம் வகித்த முஸ்லிம் அரசியல்வாதிகள் அனைவரும் பதவி விலகியமை ஐக்கிய தேசியக் 21

### அமைச்சர்களின் பதவி விலகல் உரிய தருணத்தில் தக்க பாடம்

வரவேற்கின்றார் சம்பந்தன்

கொழும்பு, ஜூன் 5
இனவாதிகளிடமிருந்து முஸ்லிம் மக்களைப் பாதுகாக்கும் வகையிலும், குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானோர் 21

### இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு பிக்குகளே தீர்வைத் தரவேண்டும்

ஞானசாரர் வலியுறுத்து; அரசியல்வாதிகளை விலகியிருக்குமாறும் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 5
இஸ்லாமிய அடிப்படைவாதத்தை அடியொட்டி நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குப் பௌத்த 21

இலங்கையில் முஸ்லிம்கள் மீதான வன்முறைக்கு

### முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பு கவலையும் கண்டனமும் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5
இலங்கையில் முஸ்லிம் மக்கள் மீது அண்மையில் நிகழ்த்தப் பட்ட வன்முறைகள் தொடர்பாக ஆழமான 21

### ஹிஸ்புல்லா உள்ள காணொலி பதிவு தொடர்பாக விசாரணை

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தொடங்கியது

கொழும்பு, ஜூன் 5
கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா அரே 21

### ஒரு சிலர் செய்த தவறுக்காக சமூகத்தை தண்டிப்பது பிழை

சபாநாயகர் சாட்டை

கொழும்பு, ஜூன் 5
ஒருசில நபர்களின் நாசகார செயற்பாடுகளுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் 21



# ஸஹ்ரானால் ஆபத்து என்பது முன்னரே தெரியும்

## முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா வாக்குமூலம்

கொழும்பு, ஜூன் 5
முகப் புத்தகத்தில் பதிவேற்றப்பட்ட விடயங்கள் மற்றும் பரப்புரைகள் என்பவற்றைக் கண்காணித்து ஸஹ்ரான் ஹாசீம் என்ற நபருக்கு ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகித்தேன். அவர் எதிர்காலத்தில் நாட்டுக்கு அச்சுறுத்தலான நபர் என்பது குறித்தும் ஆரம்பத்தில் அறிந்துகொண்டேன். ஆனால், அரசியல்வாதிகளுடன் தொடர்பில் இருந்தமை குறித்தோ அல்லது பன்னாட்டுப் பயங்கரவாத இயக்கங்களுடன் தொடர்பில் இருந்தமை தொடர்பிலோ எந்த நேரடி ஆதாரங்களையும் எங்களால் கண்டறிய முடியவில்லை. ஆனால் ஸஹ்ரான் தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு தொடர்ச்சியாக அறிக்கை வழங்கியுள்ளேன்."

இவ்வாறு பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான நாலக டி சில்வா நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன்னிலையில் வாக்குமூலம் வழங்கினார்.

ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதல் குறித்து ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்பிக்க நியமிக்கப்பட்ட நாடாளுமன்றச் சிறப்புத் தெரிவுக் குழுவின் இரண்டாவது விசாரணை நேற்று பிற்பகல் நாடாளுமன்ற குழு அறை 3 இல் இடம்பெற்றது.

நேற்று விசாரணைக்காக பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான நாலக டி சில்வா வரவழைக்கப்பட்டிருந்தார். சக்கர நாற்காலியில் அவர் வாக்குமூலமளிக்க வந்திருந்தார். அவருடனான விசாரணையில் பல்வேறு விடயங்கள் ஊடகங்கள் முன்னிலையில் தன்னால் தெரிவிக்க முடியாது என அவர் ஆரம்பத்தில் தெரிவித்ததை அடுத்து குறித்த சில கேள்விகளுக்கு மட்டும் அவர் ஊடகங்கள் முன்னிலையில் வாக்குமூலம் வழங்கினார். பின்னர் அவர் தனியாக விசாரணைக் குழுவிடம் வாக்குமூலம் வழங்கியிருந்தார். ஊடகங்கள் முன்னிலையில் அவர் வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்ததாவது:

ஸஹ்ரான் தொடர்பாகவும் தேசிய தௌஹீத் ஜமாத் குறித்தும் 2013-2014 ஆம் ஆண்டுகளில் இருந்தே கண்காணிக்கப்பட்டது. ஸஹ்ரான் கையாண்ட முகப் புத்தக கணக்குகள் மற்றும் தளப்பதிவுகள் ஆகியவற்றில் அவர் பதிவேற்றிய விடயங்களை அவதானிக்கையில் அவை அடிப்படைவாத செயற்பாடுகளாக அப்போதே தெரிந்தன. உண்மையில் தௌஹீத் ஜமாத் ஆரம்பத்தில் மதவாத அமைப்பாக இருந்தது. பின்னர் அடிப்படைவாத அமைப்பாகச் செயற்பட்டுள்ளனர். பல குளறுபடிகள் காரணமாக பல்வேறு அமைப்புகளாக இவர்கள் பிளவுபட்டுள்ளனர். அவ்வாறே இவர்களை மேற்பார்வை செய்யப்பட்டது. எவ்வாறு இருப்பினும் இவர்கள் பயங்கரவாத அமைப்பு என்பது 21 ஆம் திகதி தாக்குதலை வைத்துதானே கூறப்படுகின்றது. அதற்கு முன்னர் அவ்வாறு ஒரு செயற்பாடு இருந்ததாகக் கருதப்படவில்லை. சில சில சம்பவங்களை வைத்துக்கூற அப்போது முடியவில்லை.

காத்தான்குடி சம்பவத்தை அடுத்து ஸஹ்ரான் என்ற நபர் தேடப்பட்டு வந்தார். அப்போது ஸஹ்ரான் தொடர்பாக அதற்கு முன்னர் நாம் சேகரித்தும், மேற்பார்வை செய்தும் வைத்திருந்த காரணிகளும் காத்தான்குடி சம்பவத்தையும் ஒப்பிட்டு பார்க்கையில் அவர் நாட்டுக்கு அச்சுறுதலான நபர் என்பதை நாம் அறிந்து கொண்டோம். அதன் பின்னர் ஸஹ்ரான் தேடப்படும் நபராக மாறினார். கிழக்கிலும் ஏனைய சில இடங்களிலும் அவர் தேடப்பட்டபோதும் தலைமறைவாக இருந்தார். ஆகவே அவர் வெளிநாடுகளுக்கு சென்றிருக்கலாம் என்ற நிலைபாட்டுக்கு வந்தோம். எனினும் சஹ்ரான் வெளிநாடு போனதற்கான ஆதாரங்கள் எதுவும் இருக்கவில்லை. கடவுச்சீட்டை விசாரணை செய்தபோதும் வெளிநாட்டு பயணம் மேற்கொண்டமைக்கான ஆதாரங்கள் இருக்கவில்லை. சட்டவிரோதமாக அவர் வெளிநாடு சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது. இந்தியாவுக்கு அவர் சென்றார் என்று கூறப்பட்ட போதும் கூட அதற்கான ஆதாரங்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டு ஸஹரானைத் தேடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் இவை இரகசியமாக முன்னெடுக்கப்பட்டது. ஸஹரானுக்கே தெரியாது அவரை தேடும் திட்டம் இயங்கியது. அதேபோல் பன்னாட்டுப் பொலிஸாரின் உதவியை பெற்றும்கொள்ள தீர்மானம் எடுக்கபட்டாலும் அதற்கு முன்னர் அறிவிப்பு (ப்ளூ நோட்டீஸ்) விடுவிக்க வேண்டும். ஆகவே அதனையும் கையாண்டுள்ளோம். ஸஹ்ரான் மட்டுமல்ல இந்த அமைப்புடன் தொடர்பில் இருந்த பலர் கண்காணிக்கப்பட்டனர்.

ஸஹரானின் முகப் புத்தகதில் பதிவேற்றிய காணொலிகள் அவரது பரப்புரைகள் அனைத்துமே ஐ. எஸ் அமைப்பை நியாயபடுத்தும் வகையில் அமைந்தது. அவர் ஐ. எஸ் பக்கம் சென்றுள்ளார் என்ற நிலைப்பாட்டுக்கு எம்மால் வர முடிந்தது. தவறான பாதையில் இளைஞர்களை அவர் வழிநடத்துகின்றார் என்பதும் எம்மால் கவனிக்க முடிந்தது. அவரது பரப்புரைகள் அனைத்தும் தமிழ் மொழியில் இருந்தாலும் அவற்றைக் கண்காணிக்க எமக்கு தனிக் குழு இருந்தது. 24 மணி நேரம் அவரை கண்காணிக்கும் வேலைத்திட்டம் கையாளப்பட்டது. அதேபோல் ஸஹரானின் குடும்பத்தினர் சார்ந்த தொலைபேசி அழைப்புக்கள் ஒட்டுக் கேட்கப்பட்டன. திறந்த பிடியாணை ஒன்று உள்ளது என்பதை கட்டிகொள்ளாது அவரைக் கண்காணித்தோம்.

ஸஹ்ரான் அரசியல்வாதிகளின் தொடர்பில் இருந்தாரா என்பது உறுதியாகத் தெரியவில்லை. அவ்வாறு இருந்ததாக நான் நினைக்கவில்லை. அது குறித்து நாம் தேடவும் இல்லை. எமது இலக்கு முழுவதும் ஸஹ்ரான் மீதே இருந்தது. அதேபோல் பன்னாட்டு நிதி வருகின்றது. ஐ. எஸ் அமைப்புடன் நேரடியாக தொடர்பில் இருந்தார் என்ற சந்தேகங்கள் இருந்தும் கூட அவை எதுவுமே ஆதாரமாக எமக்குக் கிடைக்கவில்லை. நிதி வருகின்றமைக்கான வங்கிக்கணக்குகள் இருக்கவில்லை. அதனால் அவரை நேரடியாக விசாரனைக்கு உட்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இருந்தது. ஆனால் ஸஹ்ரான் எதிர்காலத்தில் நாட்டுக்கு அச்சுறுத்தலான நபர் என்பது நாம் ஆரம்பத்தில் கண்டறிந்துவிட்டோம்.

இது தொடர்பாக 2017 ஆம் ஆண்டு இறுதியில் இருந்து வாராந்தம் ஒரு அறிக்கையை பொலிஸ்மா அதிபருக்கு வழங்கினேன்.

அதற்கான சகல ஆதாரங்களும் கோப்புகளாக உள்ளன. எனினும் எதிர்பாராத நேரத்தில் என்னை கைதுசெய்தனர். அதன் பின்னர் எனக்கு இந்த நகர்வுகள் தொடர்பாக ஒன்றும் தெரியாது. சுமார் ஏழு மாத காலம் என்னால் இது குறித்து எதையும் அறிந்துகொள்ள முடியாது போய்விட்டது. உண்மையில் ஸஹ்ரான் குறித்து நான் தனிப்பட்ட திட்டம் ஒன்றை வகுத்தேன். என்ன செய்ய வேண்டும் எவ்வாறு முன்னகர்த்துவது என்பது எனது மனதில் இருந்தது. அவற்றை வெளிப்படையாகக் கூற முடியாது. எனது கைதுடன் அவை அப்படியே கைவிடப்பட்டன. ஆனால் நான் கைது செய்யப்பட்டவுடன் விசாரணைகள் அப்படியே கைவிடப்பட்டிருக்கும் என நான் நினைக்கவில்லை. ஆனால் நான் முன்னெடுத்த அளவுக்கு விசாரணைகள் கையாளப்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் என் அளவுக்கு ஏனைய அதிகாரிகள் பன்னாட்டுப் பயங்கரவாத நகர்வுகள் குறித்து அறிந்திருக்கவில்லை. அவர்கள் விடுதலைப்புலிகளின் பயங்கரவாதம் குறித்து தேடுவதில் சிறந்தவர்களாக இருந்தாலும் இவ்வாறான ஒரு விடயம் அவர்களுக்கு புதிது.

நான் வந்தவுடன் பயிற்சிகளை வழங்கி எனது வேலையையும் செய்து கொண்டேன். எனது கைதின் பின்னர் இது குறித்து சிறைந்த விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டிருக்காது. என்றார்.

நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் மூன்றாம் விசாரணை நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் வாக்குமூலமளிக்கவுள்ளனர். (எ-22)

---

## புலனாய்வு அதிகாரிகளுக்கு உயிராபத்து

### பதறுகின்றார் மகிந்த

கொழும்பு, ஜூன் 5
இலங்கையின் புலனாய்வு அமைப்புகளில் பணியாற்றுபவர்களின் உயிர்களுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:
உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் முக்கியமான தகவல்கள் பகிரங்கமாகியுள்ளதால் புலனாய்வு அமைப்புகளில் பணியாற்றுபவர்களின் பாதுகாப்பு குறித்த அச்சம் எழுந்துள்ளது.

இது மில்லேனியம் சிட்டி விவகாரம் போன்று மாறப்போகின்றது. புலனாய்வுத் துறையினரை நாடாளுமன்றதெரிவுக்குழுமுன்னிலையில் தோன்றச்செய்ததன் மூலம் அவர்கள் குறித்த விவரங்கள் பகிரங்கப்படுத்தப்படுகின்றன. இதனால் அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து. அரசியல் ஆதாயங்களுக்காக இவ்வாறான விசாரணைகளை வெளிப்படையாக முன்னெடுக்ககூடாது - என்றார். (இ-5)

---

## இன முரண்பாட்டுக்குக் காரணம் ஐ.எஸ்.ஐ.எஸ். தாக்குதல் அல்ல

### அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5
எமது நாட்டில் உயிர்த்தஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் தோன்றியிருக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் இலாபத்தை பெற்றுக்கொள்ள விரும்பிய சில தீய சக்திகளாலேயே மூன்று வாரங்களுக்குப் பிறகு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை குழப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறு அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
உயிர்த்த ஞாயிறு தாக்குதலை போன்ற பயங்கரவாத தாக்குதலின் பின்னரான காலப்பகுதியில் எந்தவொரு நாட்டிலென்றாலும் இனங்களுக்கிடையில் முறுகல் நிலை ஏற்படத் தான் செய்யும். எமது நாட்டில் தாக்குதலுக்குப் பின்னர் இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் தோன்றியிருக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் இலாபத்தை பெற்றுக்கொள்ள விரும்பிய சில தீய சக்திகளாலேயே மூன்று வாரங்களுக்குப்பிறகு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை குழப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இராணுவத்தினரினதும், பொலிஸாரினதும் விரைவான செயற்பாடுகளின் மூலமாக பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் தீவிரவாத தாக்குதலை நடத்திய தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்



தப்பட்டது.

கைது செய்யப்பட்டுள்ளவர்களிடம் அரசியல் தலையீடுகள் இல்லாமல் சுயாதீனமான முறையில் இரகசிய பொலிஸாரும் குற்றத் தடுப்புப்பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தேசிய பாதுகாப்பு தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் இடம்பெறாமல் நிரந்தரமாக தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் அரசு இழப்பீடுகள் வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது என்றார். (ஓ-5)

---

## கடலுக்குச் சென்ற இளைஞர்கள் இரு நாள்களாக திரும்பவில்லை

### ஊர்காவற்றுறையில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 5
யாழ்ப்பாணம், காரைநகர் கடலில் மீன் பிடிக்கச் சென்ற இரண்டு இளைஞர்களை இரண்டு நாள்களாகக் காணவில்லை என்று ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காரைநகர் மத்தி ஜே/48 கிராம அலுவர் பிரிவில் வசித்துவரும் கோடீஸ்வரன் குகப்பிரியன் (வயது-23), தவராசா சத்தியராஜ் (வயது-26) என்ற இரு இளைஞர்களே கரை திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணியளவில் சுப்பர் யாகர் என்ற படகில் அவர்கள் இருவரும் கடலுக்குள் சென்றுள்ளனர். கரை திரும்பவில்லை. இதனால் சந்தேகம் கொண்ட குடும்பத்தினர் நேற்று அதிகாலை ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பபாடு பதிவு செய்துள்ளனர்.

முறைப்பாட்டை அடுத்து கடற்படையினருக்குத் தகவல் அறிவிக்கப்பட்ட நிலையில் கடற்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். காணாமல்போன மீனவர்கள் பற்றிய விவரம் அனைத்துப் பொலிஸ் நிலையங்கள், கடற்படைத் தலைமையகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காற்று அதிகமாக இருந்தது. மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்லவில்லை. ஆனால் குறித்த இருவரும் கடலுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் பயணித்த படகும் கரை திரும்பவில்லை. இருவரும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். குகப்பிரியனின் தந்தையார் ஒரு மாற்றுத் திறனாளி. குகப்பிரியன் யாழ்ப்பாண நீதிமன்றில் காவலாளியாகக் கடமையாற்றி வந்தார். நேற்று முன்தினம் காலை அவருக்கு இரவுக் கடமையிருந்தது. ஆனால் முதல்நாள் ஞாயிற்றுக் கிழமையே அவர் காணாமல் போயுள்ளனர் என்று உறவினர்கள் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தனர். (எ-21,26)

# தெரிந்து கொள்வோம்

1. உலகில் மக்கள் அமைதியாக வாழ்வதற்கு மிகவும் உகந்த நாடு - நோர்வே
2. உலகில் அதிக மக்களால் தயாரித்து உண்ணப்படும் உணவு - நூடில்ஸ்
3. கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை அறிமுகம் செய்த நாடு - நோர்வே
4. ஒரே நாடாக இருக்கும் கண்டம் - ஆஸ்திரேலியா
5. பழமை வாய்ந்த செய்தி நிறுவனம் - ரொயிட்டர்
6. தனக்கென்று ஒரு தாய்மொழி இல்லாத நாடு - சுவிற்சலாந்து
7. எந்த ஒரு பத்திரிகையும் வெளி வராத நாடு - தீபெத்
8. ஒரு போதும் மலராத பூ - அத்திப்பூ
9. உலகில் அதி வறுமையான நாடு - ருவாண்டா
10. விவாகரத்து செய்ய முடியாத நாடு - அயர்லாந்து

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 629
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.06.04
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 57,106,735/-
வெற்றி இலக்கங்கள்
01 18 49 54 I
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் ▶ 982
சீட்டிழுப்பு திகதி ▶ 2019.06.03 திங்கட்கிழமை
O 39 42 51 71
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 62,594,688/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 04.06.2019
வெற்றி வாரம் 2531
வர்ணம் சிகப்பு
மேடம்
வெற்றி இலக்கங்கள் 13 38 43 51
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 5,082,362 /=
05.06.2019ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 776
சீட்டிழுப்பு திகதி 04.06.2019
வெற்றி இலக்கங்கள்
01 41 49 60 C
அடுத்த வெள்ளி கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 26, 849,716/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
நீல நிற டிக்கெட்டுக்கள் 07.06.2019 ஆம் திகதி வெள்ளிக் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் யாழ்ப்பாணத்துடன் இணைந்த எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையத்தில் NVQ - Level 3 தரத்திலான கீழ்வரும் புதிய பயிற்சிநெறிகள் முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான பயிலுநர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறிகள் (6 மாதங்கள் - உள்ளகப்பயிற்சி, 6 மாதங்கள் - வெளியகப்பயிற்சி)**
1. கணனி பிரயோக உதவியாளர் (Computer Application Assistant)
2. ஆங்கிலக்கற்கை நெறி (English)
3. குளிரூட்டலும் வளிச்சீராக்கலும் (Ref & Air Condition Mechanic)
4. அழகுக்கலை/சிகை அலங்கரிப்பு (Beautician & Hair Dresser)

**பயிற்சி நெறி 2 இற்கான தகைமைகள்**
✢ க.பொ.த சா/தரத்தில் கணிதம், ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சாதாரண சித்தியைக் கொண்டிருத்தல்.

**பயிற்சி நெறி 1, 3, 4 இற்கான தகைமைகள்**
✢ க.பொ.த சா/தரம் வரை கற்றிருத்தல்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டுள்ள 17 - 30 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்களது தொலைபேசி இல. மற்றும் பயிற்சி நெறியினை தெளிவாக குறிப்பிடப்பட்டு 15.06.2019 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம்,**
**219, நாயன்மார்கட்டு,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தொ.பே: 021-221-1342 / 077-7859308**
**மின்னஞ்சல்:**
nanthakumar.mahenthiran@soscvsrilanka.org
jaffna@soscvsrilanka.org

(CS 1699) (4.17)

STUDY , WORK & SETTLE IN
CANADA
GERMANY
FRANCE
LATVIA
EUROPE
செல்ல வழிகாட்டல்
ESL +
BUSINESS ADMINISTRATION
JOURNALISM & MEDIA
HUMAN RESOURCES
TOURISM & HOSPITALITY
(NO IELTS)
BANK BALANCE
SCHENGAN VISA
FULL IN ENGLISH MEDIUM
ROYAL EDUCATION SERVICE
Jampettah street , Colombo 13
0777 911 649 / 0777 216 291
குறைந்த செலவில். விரைவில் பயணம்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்




2018 ஜுலை மாதம் 1ம் திகதி முதல் 2019 ஜுன் மாதம் 30ம் திகதி வரை உங்கள் கணக்கின் வருடாந்த சராசரி தொகைக்கு அமைய சம்பத் வங்கியின் சன்ஹிந்த மருத்துவ பிரதிலாபங்களை இம்முறையும் நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

* இதற்கு தகுதி பெற குறைந்தபட்சம் ரூ. 75000/- வருடாந்த சராசரி தொகையாக இருத்தல் வேண்டும்.

இதற்கு தகுதி பெறுவதற்கு தேவையான குறைந்தபட்ச தொகையை உங்கள் கணக்கில் பராமரிக்குமாறு மதிப்புடன் நினைவூட்டுகின்றோம்.

Sampath Sanhinda Saver
இதயத்தால் இளமையானவர்களுக்காக

0112 30 30 50 www.sampath.lk Sampath Bank Fitch Ratings A+(lka)

DentsuGrant

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 26 . 08 . 1935



ஆண்டவன் அடியில் 06 . 05 . 2019

கடந்த 06.05.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் அப்பாசியர் சின்னத்தம்பி சொக்கலிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.06.2019) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குப்பிளான் வடக்கு, குப்பிளான்.
077 334 3339

குடும்பத்தினர்.

## வேலையாள்கள் தேவை

கட்டட நிர்மாணத்துறையில் வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை.
077 239 7211

## தேங்காய் விற்பனைக்கு

தோலுடன் தேங்காய் மற்றும் நாற்றுத் தேங்காய், உரித்த தேங்காய் மொத்தமாக விற்பனைக்குண்டு.
077 921 3835

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.
257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306/077 138 7596

## தேவை

யூஸ் பொதி செய்வதற்கு வேலைக்கு பெண் தேவை.
077 8336 501

## DMI COMPUTER EDUCATION

யூன் மாதத்திற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

வேலை வாய்ப்புடனான **VIDEO EDITING** கற்கைநெறிகள்


- Int. to Digital Video,
- Adobe Premiere cc,
- Adobe Photoshop cc
- Edius pro, After effects,
- Adobe Audition cc ,Studio Project
- DSLR Camera Handling

TEVC இன் அங்கீகாரத்துடன் கூடிய சான்றிதழுடன் உறுதிப்படுத்தப்பட்ட வேலை வாய்ப்புடனான கற்கைநெறி

APPLY NOW 021 222 4403 / 0777 17 35 17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| No.113, | M.M.V.வீதி | No.174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No.130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19,A9 வீதி, | சீரணிச்சந்தி |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | சண்டிலிப்பாய் |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 | Tel.: 021-225 5556 |

# 33ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## தம்பு கதிரவேலு

(இளைப்பாறிய அதிபர் கம்பர்மலை அரசினர் தமிழ்கலவன் பாடசாலை)

திதி: திருதிகை 05.06.2019

மலர்வு 12.02.1925 — உதிர்வு 10.06.1986

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின்
ஒளிவிளக்காய் திகழ்ந்து எமக்காக வாழ்ந்து
இறைவனடி சேர்ந்து முப்பத்து மூன்று
ஆண்டுகள் மறைந்தாலும் உங்கள் நினைவு
என்றும் எம்மை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நிருவத்தம்பை,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் கோபாலபிள்ளை குகன்



(முகாமைத்துவ உதவியாளர் சேவை - அதிசிறப்புத் தரம்)

கண் மகிழ 30.10.1985 — மண் நெகிழ 18.05.2018

**திதி: திருதியை (05.06.2019)**

ஆண்டொன்று கடந்ததடா
ஆறவில்லை உந்தன் பிரிவுத்துயர்
இறுதிவரை துணையிருப்பாய் என
எண்ணியிருந்த எம் இதயங்களில்
இடியென இறங்கியது உந்தன் இறுதிமூச்சு.

அன்பால் அனைவரையும் கவர்ந்தவனே
அவனியிலே எமைதனியே விட்டு எங்கு சென்றாயோ?
காற்றிலே கலந்து வந்த செய்தி
நேற்றுப் போல் உள்ளதடா
கண்மூடித் திறக்கும் முன் உன்
கனவுகளைச் சிதைத்தானே - உன்சாரதி
கடமை முடித்து மாலைப்பொழுது
மனை திரும்புவேன் என நீ
பகர்ந்த மொழி காற்றிலே கரைந்ததடா

ஒரு நாள் ஒரு பொழுது நாம் பிரிந்ததில்லையே
நித்தமும் பெற்றவர்கள் கலங்கித் துடிக்கின்றார்கள்
நீள் துயில் கொண்டவனே நீயில்லா
எமதில்லம் பொலிவிழந்து போனதடா

மெதுவாகச் செல் என்ற உன்
சொல்லுக்குப் பொருளில்லாமல்
மூர்க்கம் கொண்ட உன் சாரதியின்
செயலால் எம் சந்ததியே அழிந்ததடா

எங்கள் குடும்பத்தின் குலதீபமே - நீயில்லா
எம் வாழ்க்கை அர்த்தமில்லாமல் போனதடா
கன்றை இழந்த தாய்ப்பசுவின்
வேதனை யார் அறிவாரோ?

குகன் எனும் நாமம் சூட்டி அன்போடு
தொட்டிலில் உறங்க வைத்த கரங்கள் துடிக்குதடா
அமரர் எனும் சொல் பொறித்து
ஆணியோடு சுவரிலே மாட்டி வைக்கவா
அன்னையவள் பிள்ளைவரம் வேண்டி நின்றாள்

நிர்வாக உத்தியோத்தர் (Supra) பரீட்சையில்
நீ சித்தி பெற்ற செய்தியினை அறிந்து
நாம் அக மகிழ நீ இங்கில்லையேடா
உன் பதவிக்கான ஆசனம்
உனக்காக காத்திருக்கின்றது
எப்போது வருவாயென - வருவாயாடா?

நீதி, நேர்மை, உண்மை இம்மூன்றும்
உன் பெயரிலுள்ள மூன்று எழுத்தல்லவா குகன்
நிர்வாகக் கட்டமைப்பில் நீ செயல்வீரனாய்
திகழ்வதை நாம் பார்க்க கொடுத்து வைக்காத பாவிகளடா
இறைவா! இது விதியா சதியா
இது தானா உன் நியாயம்

தற்காலிக முகவரி:
42, இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

உந்தன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.
நடராஜா வீதி,
வேலணை மேற்கு, வேலணை - 8

# நோய்க்கு இடம்கொடாதவர்

நோய் என்பது எலகத்தை ஆட்சி செய்யும் ஒரு சர்வாதிகாரி. இது மனிதர்களை வதம் செய்து கொண்டிருக்கிறது. இதனுடன் மனிதன் எப்படிப் போராடினும் இறுதியில் நோய்தான் வெற்றி கொள்கிறது. ஆனாலும் நோய்க்கு இடம்கொடாத சிலரும் உலகில் வாழ்கிறார்கள்.



உருகுவே நாட்டுஅதிபரான 77வயதுடைய முயிகா (mujika)அவர்களை நோய்க்கு இடம் கொடாத மனிதன் எனக் கூறலாம். இவரது உடலில் நோய்தூரவிலகிநிற்பதற்கான காரணங்கள் மிகவும் எளிமையானவை. இவர் வீட்டில் வீட்டுத்தோட்டம் செய்து அதில் கடினமாக உழைக்கிறார்.

மருந்தடிக்காத வீட்டுத்தோட்டக் காய்கறிகளை உணவாக எடுக்கிறார். புரதச்சத்துள்ள தானியங்களை உண்கிறார். முள்ளங்கி, கரட், அவரை, தக்காளி, உள்ளி, வெண்டிக்காய், புடலங்காய், பருப்பு, சோயா, கருணை, வாழைத்தண்டு, வாழைப்பொத்தி, காளான், கீரை, வல்லாரை, பிற்றூட் ஆகியவற்றை வாரத்தில் மும்முறையாவது உணவில் சேர்த்துக் கொள்கிறார்.

கொய்யா, பப்பாளி, திராட்சை ஆகிய பழங்கள் மூன்றில் ஏதாவது ஒன்றை சாப்பாட்டுக்குப் பின்னதாக சப்பாடுகின்றார். நன்கு சுட்டாறிய நீரை பருகுகிறார். தினந்தோறும் காலை மாலை பதினைந்து நிமிடங்கள் பிரார்த்தனை செய்கின்றார். மேலும் தனது நாட்டின் ஒவ்வொரு மனிதனுக்கும் பேச, எழுத, வாசிக்க உரத்துச் சொல்ல எங்கும் வாழ அழகிய அனைத்து ஜனநாயக உரிமைகளையும் வழங்கிய தோடல்லாமல் மதச் சுதந்திரம் மொழிச் சுதந்திரம் எல்லோருக்கும் கிடைக்க வழி செய்துள்ளார். இவர் எளிமையான வாழ்க்கை வாழ்வதோடு ஒரு நாட்டு அதிபருக்கு இருக்கக் கூடிய அதியுச்ச பாதுகாப்புக்கள் அனைத்தையும் துறந்து சாதாரண தர மக்களோடு மக்களாக வாழ்ந்து வருகின்றார். இவர் சகோதரத்துவத்தை பேணி வருகின்றார். ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையைப் பேணி பாதுகாக்கின்றார். நான் என்ற எண்ணம் இவரிடம் அறவே கிடையாது. நாம் என்ற எண்ணத்துடன் தனது குடும்பத்தையல்ல தனது நாட்டை மனதில் பதிவு செய்கின்றார்.

முயிகா தான் உலகத்தில் ஒரு உதாரண புருசர் என்பதை நிரூபித்துக்காட்டி யுள்ளார். ஆண்டிக்கும் அரசனுக்கும் ஆன்மீகவாதிக்கும் அதிகாரவர்க்கத்தினருக்கும் முயிகா ஒரு வழிகாட்டி.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
02 . 08 . 1948

உதிர்வு
09 . 05 . 2019

### அமரர் புவிராஜரட்ணம் விவேகானந்தன்
(இளைப்பாறிய இலங்கை வங்கி முகாமையாளர்)

கடந்த 09.05.2019 அன்று இறைபதமெய்திய எங்கள் குடும்பத் தலைவர் பு.விவேகானந்தன் அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும். தொலைபேசி. மலர்வளையங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் அத்துடன் பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு. எதிர்வரும் 08.06.2019 சனிக்கிழமை நாரஹேன்பிடி Anderson Flats. Community Centre Hall இல் முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இதனை ஒரு தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளும்படி அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.**

077 714 9162 குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



### திருமதி மத்தியூஸ் மாகிரேட் (பூமணி)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மத்தியூஸ் மாகிரேட் (பூமணி) கடந்த (03.06.2019) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-தங்கமணி தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மத்தியூஸின் பாசமிகு மனைவியும். காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை. கந்தையா. சோமசுந்தரம். பூவிலிங்கம். பொன்னம்பலம். இராசேந்திரம். தர்மலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும். மரியதாஸ். கெலன். ராஜன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும். மேரிஸ் ரெலா. காலஞ்சென்ற சோமசேகரம் மற்றும் சுகிர்தா (கனடா) ஆகியோரின் மாமியாரும். கிறேஷியன். யூலியன். கிருஷாந்தி. மயூரன். யூஜின் (லண்டன்). ஜெரின் (கனடா). ஜக்சன் (கனடா). கலிஸ்ரஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.06.2019) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் 183. குருசோ வீதி. யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியைத் தொடர்ந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.183, குருசோ வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**சோ.கெலன் (மகள்)**

**தொ.பே: 077 608 7474**



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20 . 05 . 1950

மறைவு
20 . 05 . 2015

### அமரர் முருகேசு கந்தசாமி
(ராஜன் எலக்ரிக்கல் உரிமையாளர்)

திதி: துதியை (05.06.2019)

எமது அன்புத்தெய்வமே நீங்கள் சிவபதமடைந்து
ஆண்டுகள் நான்கு சென்றாலும் எம் உள்ளங்களில்
என்றும் பசுமையான நினைவுகளுடன் வாழ்கின்றீர்கள்
எம்மை அன்புடனும் பண்புடனும்
வளர்த்து ஆளாக்கி எம்மை வாழவைத்த தெய்வம் நீங்கள்
உங்கள் பிரிவு எங்களையெல்லாம்
ஆறாத்துயருள் ஆழ்த்தியுள்ளது.
என்றும் உங்களின் நினைவுகளுடன் வாழும் நாம்.

4 ஆம் குறுக்குச்சந்தி
தும்பளை வீதி, பருத்தித்துறை.

உங்கள் அன்பு குடும்பத்தினர்.

## UNIVERSITY OF JAFFNA FACULTY OF GRADUATE STUDIES

### WALK -IN - INTERVIEW

**Postgraduate Diploma in Library and Information Science – Batch III**

Walk in interview for the Postgraduate Diploma in Library and Information Science will be held on **08.06.2019 at 9.00** a.m at the Board Room of the Faculty of Graduate Studies, University of Jaffna, palaly Road, Thirunelvely.

**Course duration** :One year
**Medium of instruction** :Tamil
**Course Fee** :Eighty five thousand rupees (Rs.85,000/-)

**Admission Requirements**:

a) A Bachelor's degree from a recognized University or Higher Educational Institution.
b) A satisfactory working knowledge in English.
c) A fair knowledge in Computer applications (preferred).

Preference will be given to applicants who presently associate with work in the Libraries.

Interested candidates with the required qualifications are expected to be present for the interview and bring **Fulfilled Application form (you can download the application form www.grad.jfn.ac.lk this website), Educational certificates & statements, Service certificate ,National Identity card** etc.

**Note: - The Candidates those who registered for this course need not attend to the interview again.**

Registrar
University of Jaffna
03/06/2019.

## PA TO MANAGING DIRECTOR

We are a leading print media organization based in Jaffna, seeking a self-starting PA to the Managing Director. This position is a key hire, and the successful individual will have a passion for organizing / helping others. This is an extremely varied role which requires a high degree of flexibility, a "can do" pro-active attitude as well as being able to demonstrate excellent technical, organizational and co-coordinating skills. The ability to interact and communicate across all levels while maintaining confidentiality.

**MAIN RESPONSIBILITIES**

- Manage Director's electronic diary, assessing priority of appointments and reallocation as necessary.
- Manage Director's travel arrangements (including visas/accommodation).
- Process Director's correspondence, ensuring that incoming correspondence is dealt with by the Director/or on behalf of the Director, or other staff as appropriate.
- Maintain Director's office systems, including data management and filing.
- Maintain records of Director's contacts.
- Screen calls, enquiries and requests, and deal with them when appropriate.
- Assist Director in researching and following up with action on matters which fall within the Director's responsibility – chasing responses, triggering follow-up action.
- Produce documents, briefing papers, reports and presentations for the Director.
- Organize meetings and ensure that Director is well prepared for those meetings, preparing agendas, pre-meeting briefings and meeting papers.
- Meet and greet visitors at all levels of seniority.
- Any other duties as may reasonably be required by the Director.

**PERSON SPECIFICATION**

- Minimum of 3 years' experience in business administration/ personal assistant with experience of providing PA support to senior managers
- Proven ability to research, digest, analyses and present material clearly and concisely
- Excellent oral and written communication skills with a personable, professional approach
- Previous experience of working in a role requiring discretion, tact and diplomacy
- Sensitivity to the management of company and personal confidential information
- Demonstrable flexible, adaptable and positive approach to prioritizing tasks and working under-pressure to meet tight deadlines
- Excellent organizational skills and the ability to multitask whilst maintain high levels of attention to detail
- Excellent skills in Microsoft Office and online management systems

Excellent salary package which will commensurate with the experiences and qualifications.

Retired person may also apply for the job and accommodation will be provided where necessary.

Please email your CV to **mdeskas364@gmail.com** or post it to **P O Box 23, Jaffna** on or before 10.06.2019.

## கவிதைப் போட்டி

2009 மே 18 ஆம் திகதி அழைத்துச் செல்லப்பட்டவர்களில் ஒருவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை. அழைத்துச் செல்லப்படும் போது அவரது மனைவியிடம் விரைவில் விசாரித்துவிட்டு அனுப்பி விடுவோம் என்று சொன்னார்கள்.

பத்து ஆண்டுகள் கழிந்து விட்டன எங்கே மறைத்து வைத்துள்ளார்கள் என்று யாரும் சொல்லமாட்டேன் என்கிறார்கள்

ஞானசாரதேரரை விடுதலை செய்ய அதிகாரம் உள்ள ஜனாதிபதி ஏன் தமிழ் கைதிகள் விடுதலை விடயத்தில் கருணை காட்ட மறுக்கின்றார் ?

கவிஞர் புதுவை இரத்தினதுரை பற்றி உங்கள் எண்ணத்தில் தோன்றுபவற்றை கைவண்ணத்தில் 48 வரிகளுக்கு மேற்படாமல் கவிதை வடித்து அனுப்புங்கள்.

**உங்கள் கவிதைகளை vkevents2019@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது**
**Tamilini**
**90, High Street, London SW19 2BT, United Kingdom**
**என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

***பரிசுகள்***

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூபா 5000.00 |
| இரண்டாம் பரிசு | ரூபா 3000.00 |
| மூன்றாம் பரிசு | ரூபா 1500.00 |
| ஆறுதல் பரிசுகள் பத்து தலா 500.00 | |

(CS 00857) (14,17)

**முடிவு திகதி : 30.06.2019**

இலண்டன் தமிழினி பத்திரிகை நிறுவனத்தால் நடத்தப்படும் இப்போட்டியில் ஆசிரியரின் முடிவே இறுதியானது.

## திருவுருவச்சிலை திறப்பு விழா அழைப்பு

"சிவயோக சுவாமிகளின் அடியவரும் வட இலங்கை சர்வோதய ஸ்தாபகரும் மண் மறவா மைந்தனுமான
தொண்டர் **கந்தையா திருநாவுக்கரசு**
அவர்களுக்கு
**அகவை 80இல் திருவுருவச்சிலை திறப்புவிழா**



**இடம்:-**
வட இலங்கை சர்வோதய சேவை வளாகம், புங்குடுதீவு.
**காலம்:-**
05.06.2019
புதன்கிழமை முற்பகல் 10.00 மணி
**தலைமை:-**
செல்வி.க.புஸ்பமணி
(நிலையப்பொறுப்பாளர், வட இலங்கை சர்வோதயம்)


பிரதம விருந்தினர்:- திரு.இ.இளங்கோவன் அவர்கள்
(ஆளுநரின் செயலாளர், வடமாகாணம்)

இன்று (05.06.2019) புதன்கிழமை நடைபெறும் திருவுருவச்சிலை திறப்பு விழாவிலும் நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வட இலங்கை சர்வோதய குடும்பம்,**
**புங்குடுதீவு.**

## மரணஅறிவித்தல்

### கிருஷ்ணர் பரமநாதன்



சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் பரமநாதன் 04.06.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் கிருஷ்ணர் (பகவான்) மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் மைதிலியின் அன்புக் கணவரும் பரமகிருஷ்ணா (பிரான்ஸ்), மதிகிஷ்ணா ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (மலேசியா), இராசையா (கனடா), நவரத்தினம்(அமெரிக்கா) மற்றும் வள்ளியம்மை, கனகம்மா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற Dr.கமலநாதன் மற்றும் ஸ்ரீதரன்(கனடா), சத்தியவதி காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் சந்திரவதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2019) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு,
**சுழிபுரம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**0777107260**

## விடுகதைகள்

1) கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?

2) உயரத்தில் இருப்பிடம்.தாகம் தீர்ப்பதில் தனியிடம் அது என்ன?

3) வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன?

4) எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுக்க வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னியப்பு அது என்ன?

5) ஏரியில் இல்லாத நீர், தாகத்துக்கு உதவாத நீர், தண்ணீர் அல்ல அது என்ன?

6) கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள் அவள் யார்?

7) ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள் அது என்ன?

8) வெள்ளி ஓடையில கறுப்பு மீனு துள்ளி விளையாடுது?

9) மருத்துவர் வந்தாரு, ஊசி போட்டாரு, காசு வாங்காமல் போனாரு அவர் யார்?

10) ஊரெல்லாம் சுத்துவான், ஆனால் வீட்டிற்குள் வரமாட்டான் அவன் யார்?

1. கரும்பு
2. இளநீர்
3. சிரிப்பு
4. நண்டு
5. கண்ணீர்
6. மெழுகுதிரி
7. பற்கள்
8. கண்
9 நுளம்பு
10. செருப்பு

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவனில்
100 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்புகளுக்கு : 076 697 2287**

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள உணவகம் ஒன்றிற்கு சமையல் வேலை மற்றும் உதவியாளர்களுக்கு ஆண் ,பெண் இருபாலரும் தேவை

**077 855 9604, 070 566 7914**

## மணமகள் தேவை

1987 புனர்பூசம்(2 ஆம்பாதம்) நட்சத்திரமும் 5ஆம் இடத்தில் செவ். கேது. சூரியனை கொண்ட அரச உத்தியோகம் புரியும் மகனுக்கு அரச உத்தியோகம், தனியார் நிறுவனத்தில் தொழில் புரியும் மணமகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

(CS 25849)(04,17)

**077 447 5312**

## கடை வாடகைக்கு

சுன்னாகம் சந்திக்கு அருகில் **K.K.S** றோட்டின் வடக்குப் பக்கமாக சகல வசதிகளுடன் கூடிய கடை நாளாந்த வாடகைக்கு உள்ளது.

**076 058 8889**

## வேலையாள்கள் தேவை

அரச ஒப்பந்த வேலைகளை நிறைவேற்றும் கட்டட நிர்மாணக்கம்பனி ஒன்றிற்கு யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களிலுள்ள எமது வேலைத்தளங்களில் தங்கி நின்று தொழில் செய்யக் கூடிய மேசன்கள் மற்றும் கூலி தொழிலாளிகள் உடன் தேவை.

கூலியாள்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 1300 தொடக்கம் ரூபா 1500 வரையும். மேசன் ஒருவருக்கு ரூபா 1600 தொடக்கம் ரூபா 1800 வரையும் சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்புக்கு : 0762480319/0242224621**

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளராக் கடமையாற்றும் **இராசன் தர்மகுலசிங்கம்** அவர்களின் பாசமிகு தந்தையார்

### தம்பன் இராசன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

**உத்தியோகத்தர் நலன்புரிசங்கம், பிரதேச செயலகம், நல்லூர்.**

## கண்ணீர்க் காணிக்கை

நல்லூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளராக கடமையாற்றும் **இராசன் தர்மகுலசிங்கம்** அவர்களின் பாசமிகு தந்தையார்

### தம்பன் இராசன்

அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தாருடன் துயர் பகிர்வதோடு கண்ணீர்க் காணிக்கையையும் செலுத்தி ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரார்த்தனைகளுடன் : **சமுர்த்தி முகாமையாளர் சங்கம் யாழ் மாவட்டம்.**

(CS 25840) (04.17)

## கூலர்வாகனங்கள் விற்பனைக்கான அறிவித்தல் பகிரங்க மூடிய கூறுவிலை

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்திற்கு சொந்தமான NPLB9111, NPLB9114 இலக்க கூலர் வாகனங்கள் இரண்டு மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பப்படிவத்தை சமாசத்தின் தலைமை அலுவலகத்தில் ரூபா 500/= (ஐந்நூறு ரூபா) மீளளிக்க முடியாத தொகையாகவும் ரூபா 5000 /= (ஐயாயிரம் ரூபா), மீளளிக்க கூடிய தொகையாகவும் செலுத்தி பெற்றுக்கொள்ளமுடியும். கூலர் வாகனங்களின் ஆரம்ப விற்பனைப்பெறுமதி தலா 900000/= (ஒன்பது இலட்சம் ரூபா) ஆகும்.

மேற்கூறிய கூலர் வாகனங்களை பிரதான வீதி, தாளையடியில் அமைந்துள்ள சமாசத்தின் தலைமை அலுவலகத்தில் 04.06.2019 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 17.06.2019 ஆம் திகதி திங்கட்கிழமை வரையும் விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை பார்வையிடலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை **தலைவர் /பொது முகாமையாளர், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், பிரதான வீதி, தாளையடி** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்புவதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கூலர் வாகனங்கள் விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் எனக்குறிப்பிடவும்.

விண்ணப்பம் 04.06.2019 ஆம் திகதி தொடக்கம் 17.06.2019 ஆம் திகதிநண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். மூடிய கூறுவிலைகள் திறக்கப்படும் திகதி கேள்வி மனுதாரருக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

**தலைவர்/பொதுமுகாமையாளர்**
**வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்**
**பிரதான வீதி , தாளையடி**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சரஸ்வதி தேவராசா

தோற்றம் 19.05.1944

மறைவு 27.05.2017

திதி: பூர்வபஷ்ச துதியை (05.06.2019)

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிக நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்மிதயத் தெய்வமே!

புதுவீதி, (நீதிராஜா வீதி),
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
077 615 3877, 021 222 5499

நினைவில்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முறைப்பாடு...

ஆளுநர்களான ஹிஸ்புல்லா, அசாத் சாலி ஆகியோர் தொடர்பாக முறைப்பாடுளைப் பெற்றுக்கொள்ளக் குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளது. இந்தக் குழுவிடம் இன்று (நேற்று) முதல் எதிர்வரும் 12ஆம் திகதிவரையில் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். மூத்த பொலிஸ் அதிகாரி தலைமையில் 3 உறுப்பினர்களைக் கொண்ட குழுவே பொலிஸ் தலைமையகத்தால் நியமிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒரு வாரத்துக்குள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத்தைக் கைது செய்ய வேண்டும் என்று பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்றுமுன்தினம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். (எ)

## சமுர்த்தி...

யாளர்களை அமைச்சர் விஜயகலா தரக் குறைவாகப் பேசினார் என்று கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து சங்கானையில் நேற்று இடம்பெற்ற சமுர்த்தி நிகழ்வில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை சங்கானைப் பிரதேச கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலாவும் கலந்து கொண்டிருந்தார். நிகழ்வின் இடையே மேடையில் ஏறிய குடும்பப் பெண் ஒருவர் தமக்கு சமுர்த்தி உதவித் திட்டம் கிடைக்கவில்லை என்று விஜயகலாவிடம் முறையிட்டார். அதையடுத்து கோபமடைந்த அமைச்சர் 'சமுர்த்தி உத்தியோகத்தர்களாகத் தகுதியற்றவர்களே உள்ளனர். அதனால் கிளிநொச்சியில் சுமார் 4 ஆயிரம் பேர் வரை சமுர்த்தி உதவித் திட்டத்துக்குள் இணைத்துக் கொள்ளப்படவில்லை. அதேபோன்று இங்கும் தகுதியற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்களே உள்ளனர். இதனால்தான் இதுபோன்ற பெண்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் கிடைப்பதில்லை, அரசியல்வாதிகளாலே சமுர்த்திப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர் இதனாலேயே இந்த நிலை' என்று தெரிவித்தார்.

அமைச்சருடைய கருத்தைக் கேட்டுக் கோபடைந்த சங்கானைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவு ரீதியான வெளிக்கள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நிகழ்விலிருந்து வெளியேற முற்பட்டனர். அதனால் நிகழ்வில் குழப்பம் ஏற்பட்டது. சமுர்த்திப் பணியாளர்களைச் சமாதானப்படுத்த சங்கானை பிரதேச செயலர் முயற்சித்தார். எனினும் தம்மை தரக் குறைவாகப் பேசிய அமைச்சர் விஜயகலாவைச் சந்திக்க வேண்டும் என்று சமுர்த்திப் பணியாளர்கள் கோரி நின்றனர். எனினும் நிகழ்வின் நிறைவில் அமைச்சர் பணியாளர்களைச் சந்திக்காது சென்றார்.

"சங்கானைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இதுவரை எந்தவொரு மோசடிக் குற்றச்சாட்டுக்களையும் எதிர்கொள்ளாதவர்கள். அதை மாவட்டச் செயலரே உறுதிப்படுத்துவார். அவ்வாறு இருக்கையில் அமைச்சர் இவ்வாறு தரக் குறைவாக எம்மையும் கிளிநொச்சியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களையும் பேசியமை கண்டிக்கத்தக்கது. இது தொடர்பில் எமது சங்கத்துடன் பேசி மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்போம்" என்று சமுர்த்திப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குற்றச்சாட்டை முன்வைத்த பெண்ணின் குடும்ப சூழல் அறிந்து மாவட்ட செயலக அதிகாரிகளே அவருக்கு சமுர்த்தி வழங்க முடியாது என்பதை அறிந்திருந்தனர். அவருடைய குடும்பத்துக்கு மூன்று வழிகளில் வருமானம் வருகிறது. அவருக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. அவரைவிட வறுமையானவர்களுக்குத்தான் சமுர்த்தி கொடுக்கப்பட்டுள்ளது. அவரைவிட வறுமையானவர்கள் இன்னும் இருக்கிறார்கள் என்று சங்கானை பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-21)

## குற்றங்களை...

லும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருக்கின்றேன். என்னை பழிவாங்குவதாக தெரிவித்து முஸ்லிம் சமுகத்தைப் பழிவாங்கோ முஸ்லிம்களின் பொருளாதார நிலையங்களை தாக்கவோ வேண்டாம்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றில் தேயிலைச் சபை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

நாங்கள் யாருக்கும் பயந்து அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகவில்லை. நாட்டுக்காகவே பதவி விலகினோம். மினுவாங்கொடையில் முஸ்லிம் மக்களின் வீடுகளை அடித்து நொறுக்கி, வர்த்தக நிலையங்களை தீயிட்டுக்கொளுத்தியவர்களுக்கு பிணை வழங்கப்படுகின்றது. ஆனால், கப்பலின் சுக்கான் பொறிக்கப்பட்ட ஆடையை தர்மச் சக்கரம் எனக்கூறி கைதுசெய்த நோயாளித் தாயை 21 நாள்கள் சிறையில் வைத்தீர்கள். இதுதான் சட்டம் ஒழுங்கா?

வாக்குவேட்டைக்காக இனவாதிகள் முஸ்லிம் மக்களின் நெஞ்சைப் பிளக்கின்றனர். இனவாதத்தைக் கக்குகின்றனர். முஸ்லிம்பெண்களுக்கு ஹிஜாப் அணிந்துகொண்டு செல்லமுடியவில்லை. அவர்களை அவமானப்படுத்துகின்றனர். எதற்காக இப்படியெல்லாம் செய்கிறார்கள்? எங்களுக்கே தெரியாமல் உலகப் பயங்கரவாதம் உள்நுழைந்துவிட்டது. அதை அழித்தொழியுங்கள். அதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குகின்றோம். அப்பாவி முஸ்லிம் மக்களை புனித ரமழான் மாதத்தில் தண்டிக்கவேண்டாம். இந்த நாட்டில் சட்டம் இருந்தால் சிங்கள அடிப்படைவாதிகளையும் தடை செய்ய வேண்டும். உலகப் பயங்கரவாதம் இந்த நாட்டில் புகுந்து இலங்கையிலுள்ள சில முஸ்லிம் இளைஞர்களை அதற்குள் சம்பந்தப்படுத்தி இந்த நாட்டில் நாம் எதிர்பார்க்காத பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலுடன் அப்பாவி 22 இலட்சம் முஸ்லிம்களையும் தொடர்புபடுத்தி அடிப்படைவாதிகள், பயங்கரவாதிகள் என்று அழகாக சிங்கள மொழியில் பேசுகின்ற அரசியல்வாதிகள் இந்தப் நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் உருவாகியுள்ளனர்.

முஸ்லிம்களையும் உலமாக்களையும் மிக மோசமான வார்த்தைகளால் திட்டுகின்ற செயற்பாட்டை நாம் பார்க்கின்றோம். அதற்கு சில ஊடகங்களும் துணை போகின்றன. நாடு பாதுகாக்கப்பட வேண்டுமென்ற உணர்வோடுதான் இன்றுவரை முஸ்லிம் சமூகம் உள்ளது.

ஏப்ரல் 21ஆம் திகதி பயங்கரவாத செயலை கண்டித்ததோடு மட்டுமல்லாது அந்த செயலோடு சம்பந்தப்பட்டவர்கள் அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் சொந்தங்களாக, நண்பர்களாக இரத்த உறவுகளாக இருந்தாலும் கூட அவர்களைக் காட்டிக்கொடுக்கும் பணியை முஸ்லிம் சமூகம் செய்துள்ளது- என்றார். (எ-22)

## பாதுகாப்பு...

செயற்பாடுகளைத் தெரிவுக் குழு மேற்கொள்கின்றது. அது நிறுத்தப்பட வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கோரியுள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

அதேவேளை, பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத்துறை அதிகாரிகளை அழைத்து நாடாளுமன்றத் தெரிவுக் குழு விசாரணைகளைத் தொடருமானால் நாடாளுமன்றத்தை இடைநிறுத்த வேண்டி ஏற்படலாம் என்று நேற்றுமுன்தினம் இரவு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது அரச தலைவர் திட்ட வட்டமாகத் தெரிவித்தார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. இந்த நிலமையால் மீண்டும் நிறைவேற்று அதிகாரத்துக்கும், நாடாளுமன்றத்துக்கும் இடையே இழுபறி ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, நாடாளும்ன்றத் தெரிவுக் குழுவின் முன்னிலையில் இனிமேல் பாதுகாப்புத் தரப்பின் உயர் அதிகாரிகள் முன்னிலையாகக் கூடாது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கட்டளையிட்டுள்ளார் என்றும் நேற்றுக் கொழும்பு வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது. இவ்வாறான நிலைப்பாடுகளால் மீண்டும் அரசியல் சிக்கல் நிலமை தோன்றக்கூடும் என்று அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர்.

தெரிவுக் குழுவின் கடந்த அமர்வில் பாதுகாப்புச் செயலர் கோட்டேகொடவும், தேசிய புலனாய்வுத் துறைத் தலைவரும் முன்னிலையாகிச் சாட்சியமளித்தனர். நேற்று முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக்க சில்வா சாட்சியமளித்தார். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் ஆகியோர் எதிர்காலத்தில் சாட்சியத்துக்கு அழைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் தற்போது அரச தலைவர் எடுத்துள்ள நகர்வுகளால் அவர்கள் சாட்சியமளிப்பார்களா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

அதேவேளை, இந்தத் தெரிவுக் குழு அரச தலைவர் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தத் தயாராகின்றது என்று அரச தலைவரின் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர். கடந்த அமர்வில் சாட்சியமளித்தவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கடுமையாக கேள்விகளுக்கு உட்படுத்தியிருந்தார். இந்த நிலமைமையில் தற்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவுக்குக் குழுவுக்கு எதிரான நகர்வுகளை மேற்கொண்டுள்ளமை கொழும்பு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ)

## பொதுத்...

பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வது தொடர்பாக அரச மேல் மட்டங்களில் ஆராயப்படுகின்றது என்று தெரியவருகின்றது. நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுடன் நடந்த சந்திப்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் பேசினார் என்றும், நேற்றுமுன்தினம் இரவு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தும் தலைமை அமைச்சர் நீண்ட நேரம் இது தொடர்பாக ஆலோசித்தார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் தற்போதைய நிலமையில் நிலையான ஆட்சி ஒன்றின் தேவை உள்ளதால் உடனடியாகப் பொதுத் தேர்தலுக்குச் செல்வது நல்லது என்று பல தரப்பினரும் கருதுகின்றனர். அதையடுத்தே இந்த விடயம் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, சிறப்புத் தீர்மானம் ஒன்றை நாடாளுமன்றில் முன்வைத்து நிறைவேற்றுவதன் ஊடாக நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்ல முடியும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(எ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## படுதோல்விடையந்த இன்றைய ஆட்சி!

நல்லாட்சி என்கிற பெருங் கனவை முன்வைத்து வந்த இன்றைய ஆட்சியைப் போன்று இலங்கையில் படுதோல்வியடைந்த ஓர் ஆட்சி இதற்கு முன்னர் எப்போதும் இருந்ததில்லை. 2015 ஆம் ஆண்டில் எந்த இந்த ஆட்சி எந்த இடத்தில் பொறுப்பெடுத்ததோ அதே இடத்திலும் மோசமானதொரு இடத்தில் நாட்டைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது இன்றைய ஆட்சி.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் ஊழல், மோசடிகள் மலிந்து கிடந்தன. மகிந்த குடும்பத்தினரும் அவரது சகபாடிகளும் மக்கள்பணத்தைச்சுருட்டிக்கொண்டோடுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைப் புறக்கணித்து தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிப்பதையும் பௌத்த மயமாக்கலை வடக்கு, கிழக்கில் ஊக்கப்படுத்துவதையும் குறியாகக் கொண்டிருந்தது. முஸ்லிம் மக்கள் பௌத்த அடிப்படைவாத சக்திகளால் இலக்கு வைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டார்கள், நோகடிக்கப்பட்டார்கள். இவற்றில் இருந்தெல்லாம் ஒரு மாற்றம் வேண்டும் என்பதற்காகத்தான் மைத்திரி– ரணில் ஆட்சியைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்தார்கள் பெரும்பான்மை மக்கள்.

அத்தகைய ஒரு பெரு மாற்றத்தை உருவாக்குவோம் என்று வாக்குக் கொடுத்ததுடன் மட்டுமல்லாது நல்லாட்சியையும் மக்களுக்கு வழங்குவோம் என்று உறுதிமொழி வழங்கியே மைத்திரி– ரணில் கூட்டு ஆட்சிக்கு வந்தது. தொடக்கத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நோக்கி முன்னேறுவது போன்றுதான் தோன்றியது. வடக்கு, கிழக்கில் மக்களின் காணிகளில் சில படையினரின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டன. புதிய அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்காக நாடாளுமன்றமே அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டது. உபகுழுக்கள், வழிகாட்டல் குழுக்கள் ஊடாக அதிகாரப் பகிர்வு பற்றி அலசப்பட்டது. முன்னாள் ஆட்சியாளர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன, அவை குறித்த விசாரணைகளும் தொடங்கப்பட்டன. போரின்போது காணாமற்போனோர் தொடர்பாக ஆராய்வதற்காக ஓர் அலுவலகமும் நியமிக்கப்பட்டது. முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் குறைந்தன. நாடு நல்லிணக்கத்தை நோக்கி முன்னேறும் என்கிற தோற்றப்பாடு ஏற்பட்டது.

எல்லாமும் இரண்டு வருடங்களுக்குத்தான். அதன் பின்னர் மெல்ல மெல்லப் பழைய குருடி கதவைத் திறவடி என்பதைப் போன்று சம்பவங்கள் கட்டவிழத் தொடங்கின. இந்த அரசின் மீதும் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டன. அதிகாரப் பகிர்வு தொடர்பான முயற்சிகளில் இருந்து ஆட்சியாளர்கள் மெல்ல மெல்ல நழுவத் தொடங்கினர். முன்னாள் ஆட்சியாளர்கள் மீதான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டன. அவர்கள் மீதான எந்தவொரு குற்றச்சாட்டும் நீதிமன்றங்களில் நிரூபிக்கப்படாமலேயே இருந்தன. காணாமற்போனோர் அலுவலகத்தை அதனால் பயன்பெற வேண்டிய மக்களே நிராகரித்தார்கள். வடக்கு, கிழக்கில் பௌத்த மயமாக்கல் தொடர்ந்தது. ஆட்சியாளர்கள் எவரும் அதைக் கேள்விக்குட்படுத்தவில்லை. காணிகளின் விடுவிப்பு மந்தமாகி கிட்டத்தட்ட நிற்கும் நிலையை எட்டியது. பௌத்தர்களின் முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் மீண்டும் வெடிக்கத் தொடங்கின.

4 வருடங்கள் கடக்கும் நிலையில் இதே பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் கோரப் பசிக்கு முஸ்லிம் அமைச்சர்கள் இரையாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது குற்றம் சுமத்த எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையிலேயே அவர்களின் பதவி விலகலை ஏற்றுக்கொண்டுள்ளது ரணில் தலைமையிலான அரசு. தனது சொந்த அமைச்சர்களையே பாதுகாக்க முடியாது தோல்வி கண்டுள்ள இந்த ஆட்சி அடைந்துள்ள படு தோல்வியைப் போன்று இதற்கு முன்னர் எந்தவொரு ஆட்சியும் தோல்வியடைந்ததில்லை பொருளாதார ரீதியிலும் இந்த ஆட்சி தோல்வியையே தழுவியிருக்கிறது.

# தமிழர்கள் இனியும் அரசை நம்பிக் கொண்டிருக்கலாமா?

இந்துமதி

அரசுக்கு வழங்கி வரும் நிபந்தனையற்ற ஆதரவு தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டிய கட்டாய நிலைக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தள்ளப்பட்டுள்ளது.

மகிந்தவைப் போலன்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குப் பரிவுடன் தீர்வு காண்பார் என்ற நம்பிக்கையின் பேரிலேயே 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களிடம் கூட்டமைப்பின் தலைவர் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார். தமிழர்களும் தமது தலைவரின் வேண்டுகோளை ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். தமது வாக்குகளை தமக்கு அதிகளவில் பரிச்சியமில்லாத மைத்திரிக்கு அள்ளி வழங்கினர். இதனால் தென்பகுதி மக்களால் ஒரு போர் வெற்றி வீரனாகவும் எவராலும் அசைக்க முடியாதவர் எனக் கருதப்பட்ட மகிந்த ராஜபக்சவை எவருமே எதிர்பார்க்காத வகையில் தோற்கடிப்பதற்கு மைத்திரியால் முடிந்தது. அவரது வெற்றிபெரும் எதிர்பார்ப்புடன் தமிழர்களால் வரவேற்கப்பட்டது. அதே ஆண்டு ஓகஸ்ட மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் மைத்திரி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து கூட்டு அரசொன்றை நிறுவின. எதிர்க்கட்சித் தலைவராக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பொறுப்பேற்றுக் கொண்டார். எதிர்க்கட்சி என்ற நிலையில் இருந்து கொண்டே கூட்டமைப்பு அரசுக்கு வெளியில் இருந்து கொண்டு பல விடயங்களில் தனது ஆதரவைத் தெரிவித்தது. இந்த நிலை இன்னும் நீடிக்கிறது. ஆனால் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இல்லையென்பது வேறு விடயம்.



### தமிழர்கள் பிரச்சினை புறந்தள்ளப்படுகின்றது

அரச தலைவர் பதவியில் அமர்ந்து கொண்டதன் பின்னர் மைத்திரி தமிழர்களின் பிரச்சினைகள் எவற்றுக்கும் தீர்வு கண்டதாகத் தெரியவில்லை. அவர் தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் வாக்குறுதிகளாகவே இன்றுமுள்ளன. புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டால் தமது பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு கிடைக்குமெனத் தமிழ மக்கள் நம்பியிருந்தனர். அதுவும் வெறும் கானல் நீராகவே மாறிவிட்டது. இதனால் கூட்டமைப்பின் மீது மக்கள் வெறுப்புணர்வு கொள்வதற்கும் ஏதுவாகிவிட்டது. வடக்கில் படையினர் ஆக்கிரமித்து வைத்திருக்கும் மக்களுக்குச் சொந்தமான காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. அந்த மக்கள் தமது காணிகளைப் பொறுவதற்காகப் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

### அத்துமீறும் வகையில் சிங்கள குடியேற்றங்கள்

தமிழர் பிரதேசங்களில் அரசின் ஆதரவுடனான அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. முல்லைத்தீவில் தமிழர்களின் பாரம்பரியமான இந்துக் கோயில் ஒன்றை ஆக்கிரமித்து அங்கு நிலைகொண்டிருக்கும்



> அரச தலைவர் பதவியில் அமர்ந்து கொண்டதன் பின்னர் மைத்திரி தமிழர்களின் பிரச்சினைகள் எவற்றுக்கும் தீர்வு கண்டதாகத் தெரியவில்லை. அவர் தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் வாக்குறுதிகளாகவே இன்றுமுள்ளன.

பௌத்த பிக்கு ஒருவர் அந்த ஆலயத்தின் பெயரையே மாற்றிய அடாவடித்தனத்தை ஆட்சியாளர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. நீதிமன்றம் இதில் தலையிட்டு நீதியை நிலைநாட்ட வேண்டிய நிலை இங்கு உருவாகியுள்ளது. திருகோணமலையின் கிண்ணியாவில் இடம்பெற்று வருகின்ற சம்பவங்கள் சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் கொடிய முகத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டன. தமிழர்களின் கலாசார சின்னங்களை அழித்து விடுவதற்கான முயற்சிகளே அங்கு இடம்பெற்று வருகின்றன. இது இன முறுகலுக்கும் வழியை ஏற்படுத்திக் கொடுத்துவிடும். அரசு நினைந்தால் உடனடியாகவே இந்த அநீதியைத் தடுத்து நிறுத்த முடியும். ஆனால் அவ்வாறான முயற்சிகள் எவையும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

அரச தலைவரும் ரணில் தலைமையிலான அரசும் பெரும்பான்மையின மக்களுக்கு அஞ்சி நடப்பதையே காணமுடிகின்றது. இந்த நிலையில் சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்குமென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

### நம்பிக்கை இழந்த நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலை

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலையறியாது அவர்களின் உறவினர்கள் அனுபவிக்கின்ற வேதனை மிகக்கொடியது. இந்த விடயம் தொடர்பாக அரசு ஆக்கபூர்வமாக எதையும் செய்ததாகத் தெரியவில்லை. இதைப்போன்றுதான் அரசியல் கைதிகளின் விடுதலையும் நம்பிக்கையிழந்த நிலைக்குச் சென்றுவிட்டது. அரச தலைவர் கைவிரித்த பின்னரும் கைதிகளின் விடுதலை தொடர்பாகப் பேசுவதால் பயனொன்றுமில்லை. இதேவேளை அபிவிருத்தி என்ற பெயரில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பெரும் தொகையான பணம் அரசால் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாகவே அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு அவர்கள் பின்னடிக்கிறார்கள் எனவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. கூட்டமைப்பின் தலைமை இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டும்.

தேர்தல்கள் நெருங்கி வருவதால் ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கான தீர்வு தொடர்பாக அக்கறை காட்டுவார்களென எதிர்பார்க்க முடியாது. அது மட்டுமல்லாது தமது எஞ்சிய பதவிக் காலத்தை முழுமையாக அனுபவிப்பதே அவர்களின் நோக்கமாகவும் இருக்கும். இதனால் எதிர்ப்புக்களைச் சம்பாதிப்பதையும் அவர்கள் விரும்ப மாட்டார்கள். இந்த நிலையில் கூட்டமைப்பி னர் இனியும் அரசை நம்புவதால் எதுவுமே கிடைக்காது என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்
# செய்திகள்

புதன்கிழமை 05 ஜுன் 2019



# மதகுருவுக்காக கொக்கரித்த பேரினவாதம் மக்கள் போராட்டத்தை கவனிக்காதது ஏன்?

## கேப்பாபிலவு மக்கள் கடும் விசனம்

முல்லைத்தீவு, ஜுன் 5

நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்ன தேரர் கடந்த நான்கு நாள்களாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடுகிறார் என்பதற்காக நடுநடுங்கிப்போன அரசும் அரசியல்வாதிகளும், கடந்த மூன்று வருடங்களாக வீதியில் போராடும் தமக்கு நியாயம் வழங்காதது வருத்தம் தருகிறது என்று முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

அவர்கள் நேற்றுமுன்தினம் 829 நாள்களாக நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள்நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:

எமது நிலத்தை விடுவிக்க வேண்டும் என்று கடந்த மூன்று ஆண்டுகளாக எத்தனையோ போராட்டங்களை முன்னெடுத்து வீதியில் தவமிருக்கின்றோம். நல்லாட்சி அரசு என்று சொல்லி ஆட்சிக்கு வந்த அரசு, அதனுடன் சார்ந்த அதிகாரிகள், தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல்வாதிகள் என்று எவரும் எமது பக்க நியாயத்தைப் புரிந்து கொள்ளவில்லை. எமக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கவில்லை, எமது நிலங்களை விடுவிப்பதற்குச் சற்றேனும் முயற்சிக்கவில்லை ஆனால் கடந்த நான்கு நாள்களாகக் கண்டியில் போராட்டத்தில் ஈடுபட்ட பௌத்த மதகுருவுக்கு ஆதரவாக பலர் கோசமெழுப்பியிருந்தனர். இது வேதனைக்குரிய விடயம். நாமும் மனிதர்களே. நாங்களும் இலங்கையர்களே. அவ்வாறிருக்க எமக்கு மட்டும் ஏன் இதுவரையில் தீர்வு வழங்கப்படவில்லை. எங்களது உயிர்களில் அரசுக்கு அக்கறை இல்லையா, நாளாந்தம் வீதிகளிலேயே எமது அன்றாட வாழ்கையை நடத்தி வரும் எம்மைப் பற்றி அரசும், அரசியல் வாதிகளும் ஒருகணமேனும் சிந்திக்க மாட்டார்களா? என்று கவலையுடன் அந்த மக்கள் தெரிவித்தனர்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னர் தென்னிலங்கை சிங்களப்பௌத்த தேசியவாதம் முஸ்லிம் மக்களுக்கு எதிரான தனது வக்கிரத்தை ஏவியுள்ளது. முஸ்லிம் அரசியல் வாதிகளையும் அது விட்டுவைக்கவில்லை. அமைச்சர் றிசாத் மற்றும் ஆளுநர்களான ஹிஸ்புல்லா, அசாத் சாலி ஆகியோரைப் பதவி விலகுமாறு கோசமிட்டது. பௌத்த மதகுருவும், நாடாளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்னதேரர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் குதித்தார். அவருக்கு ஆதரவாக சிங்கள பௌத்த பேரினவாதம் கொந்தளித்தது, காலக்கெடு விதித்தது. முஸ்லிம் மக்களுடைய இருப்பையும், அவர்களுடைய பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்குடன் ஆளுநர்கள், மற்றும் முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் தமது பதவிகளைத் துறந்துள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாகத் தமது நிலத்தை மீட்கப் போராடும் சிறுபான்மை மக்களுக்கு இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. சிறுபான்மை மக்களுக்கு ஒரு நியாயம், சிங்கள பௌத்த தேசியத்துக்கு இன்னொரு நியாயம் என்று பாரபட்சம் காட்டப்படுகிறதா? என்ற கேள்வி தற்போது வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ளது. (த-21)

# தௌஹீத் அமைப்பாளருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது

கொழும்பு, ஜுன் 5

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் என்று தெரிவிக்கப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மொஹமட் பவாஸ்ஸின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

வழக்கு கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவரை 18 ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ.5)

# ஓட்டுமடம், சிவலிங்கப்புளியடி வீதியில் அடிதடிக் கும்பல் தினமும் அட்டகாசம்!

## வழிப்பறி, அச்சுறுத்தல்களும் அதிகரிப்பு பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜுன் 5

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்தியில் இருந்து சிவலிங்கப் புளியடிச் சந்திக்குச் செல்லும் வீதியில் குழு ஒன்று தினமும் அட்டூழியங்களில் ஈடுபடுகின்றது என்று அந்தப் பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழு தனிமையில் செல்பவர்களிடம் வழிப்பறியில் ஈடுபடுகின்றது என்றும், அச்சுறுத்துகின்றது என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடந்த ஒரு மாதகாலத்துக்குள் தனிமையில் சென்ற பெண்ணின் சங்கிலி ஒன்று அந்தப் பகுதியில் அறுக்கப்பட்டுள்ளது. தனிமையில் செல்பவர்களை மிரட்டி, அச்சுறுத்தும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. நேற்றுமுன்தினம் கூலி வேலைக்குச் சென்று அதன் மூலம் பெற்ற பணத்தைக் கொண்டு வீடு திரும்பிய முதியவர் ஒருவரைத் தள்ளி வீழ்த்திய அந்தக் கும்பல் அவர் வைத்திருந்த பணத்தைப் பறித்துச் சென்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் தலையில் காயமுற்ற முதியவர் மருத்துவனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார் என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்தியில் இருந்து சிவலிங்கப் புளியடிச் சந்திக்குச் செல்லும் வீதியால் தனியாகவோ, இரவிலோ பயணிக்க முடியாத நிலையைஅந்தக் குழுவினர் ஏற்படுத்தியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அந்தப் பகுதியில் இருக்கும் மக்களை அச்சுறுத்தும் வகையில் உந்துருளிகளை பெரும் இரைச்சலுடன், வேகமாகச் செலுத்துவது, சத்தமிட்டு கத்திக் கொண்டு வீதியால் செல்வது, தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுவது என இவர்களுடைய அட்டகாசம் தொடர்கிறது என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் கவனம் செலுத்துவதில்லை என்றும், பொலிஸார் நிற்கும் போதும் அந்தக் கும்பல் இவ்வாறு அட்டூழியங்களில் ஈடுபட்ட சம்பவங்களும் உண்டு என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். பொலிஸார் பக்கச் சார்புகள் ஏதுமின்றி நடவடிக்கைகளை மேற்கொண்டு அடிதடிக் குழுவின் அட்டூழியத்தைக் குறைத்து இயல்பு நிலமையை ஏற்படுத்த என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-21)

# 1,537 கிலோ பீடி இலைகள் மன்னாரில் கண்டுபிடிப்பு



யாழ்ப்பாணம், ஜுன் 5

மன்னார் பிரதேசத்தில் சட்டவிரோத பீடி இலைகள் அண்மைக்காலமாக அதிகளவில் மீட்கப்பட்டுள்ளன என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பாதுகாப்புத் தரப்பினரின் சோதனை நடவடிக்கைகளில் இவை தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார், தாழ்வுப்பாடு கடற்கரையில் நேற்று அதிகாலை கடற்படையினர் மேற்கொண்ட திடீர் சோதனைகளின் போது 33 பொதிகளைக் கொண்ட ஆயிரத்து 11 கிலோ 3 கிராம் எடை கொண்ட பீடிசுற்றும் இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கடற்கரையில் கரை ஒதுங்கிய நிலையில் இந்தப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தோட்டவெளி மற்றும் எருக்கலம்பிட்டி பகுதிகளைச் சேர்ந்த இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கடற்படையினர் மற்றும் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து மன்னார் பெரியகாமன் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது மரம் அறுக்கும் ஆலை ஒன்றில் மறைக்கப்பட்டுருந்த 526 கிலோ பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வட மத்திய கடற்படை கட்டளையின் கடற்படையினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையின் போது மன்னார் பெரியகாமன் பகுதியில் மரம் அறுக்கும் ஆலையொன்றில் மறைக்கப்பட்டுருந்த பீடி இலைப் பொதியொன்று கண்டுபிடிக்கப்பட்டது . போக்குவரத்துக்காக பயன்படுத்திய கப் ரக வாகனம் கைப்பற்றப்பட்டதுடன், அந்த மரம் அறுக்கும் ஆலையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. பீடி இல்லை பொதி, வாகனம் என்பவற்றுடன் மரம் அறுக்கும் ஆலையின் உரிமையாளர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, வட மத்திய கடற்படை கட்டளையின் கடற்படையினரால் கடந்த 2 ஆம் திகதியும் தலைமன்னார் கடலிருந்து 451 கிலோ கிராம் பீடி இல்லை மற்றும் 5 ஆயிரத்து 300 புகை தூள் குப்பிகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. (எ-7,56)



போராட்டம் தொடரும் நிலையில்

## கண்ணகை அம்மன் கோவிலுக்கு செயற்பாட்டு நிர்வாகம் தெரிவு

மருதங்கேணி, ஜூன் 6

தென்மராட்சி, வரணி வடக்கு சிமிழ் கண்ணகை அம்மன் கோவிலில் நீதி கோரி தொடர் போராட்டம் இடம்பெற்றுவரும் நிலையில், அதற்குத்தீர்வுகாணும் நோக்கில் செயற்பாட்டு நிர்வாகம் நேற்று முன்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சாதிப் பிரச்சினை காரணமாக வைகாசி விசாக திருவிழா நிறுத்தப்பட்டிருந்த நிலையில்ஆலயத்தில்சமத்துவம் வேண்டியும் திருவிழாவை நடத்தக் கோரியும் கோவில் முன்பாக 7ஆம் மற்றும்9ஆம்திருவிழாஉபயகாரர்கள் கடந்த 28ஆம் திகதிதொடக்கம்போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம்முற்பகல்செயற்பாட்டுநிர்வாகம்தெரிவுசெய்யப்பட்டது.

பரிபாலனசபைத்தெரிவுக்கு இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் முனைவர் மறவன்புலவு சச்சிதானந்தன், முனைவர் மோகன், அகில இலங்கை சைவமகாசபைத்தலைவர் மற்றும் பொதுச் செயலர் மருத்துவர் பரா.நந்தகுமார், வடக்குமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், புதியஜனநாயக மார்சிச லெனினிசக் கட்சியின் வடபிராந்திய செயலர் செல்வம் கதிர்காமர், கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் இன்பநாயகம், சமூக நீதிக்கான மக்கள் இயக்க செயற்பாட்டாளர் அனுசன், க்காரைநகர் பிரதேச சபை உறுப்பினர்கள், மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான தியாகலிங்கம், சி.பிரசாத் உட்படபலரும், மக்கள் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். பலர்பல்வேறுகருத்துக் களைத் தெரிவித்தனர். போராடும்மக்களுக்கு ஆதரவாகஇங்கு உரையாற்றினர். மக்களின் கோரிக்கை நியாயமானது எனக் கூறிய அவர்கள், யாழ்ப்பாண மாவட்டத்தில் பல ஆலயங்களில் சாதி வேறுபாடுகள் காட்டப்படுகின்றனஎன்றும் அது முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இதன் அடிப்படையிலேயே நிரந்தரமான ஆலய பரிபாலன சபையை அமைப்பதற்காகத் தற்காலிகசபைஅமைக்கப்பட்டது.

பரிபாலன சபை அமைக்கும் ஒன்றுகூடலுக்கு சாவகச்சேரிப் பிரதேச செயலர் மற்றும்இந்துகலாசார அலுவலர்கள் ஆகியோருக்கு உத்தியோக பூர்வமாக ஏற்பாட்டாளர்களால் அழைப்பு அனுப்பப்பட்டும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. அதனால் பரிபாலன சபை நேற்று முன்தினம் அமைக்கப்படவில்லை. அது பற்றி பலரும்பலவிமர்சனங்களைமுன்வைத்தனர்என்றும் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் 23ஆம் திகதி நிரந்தர ஆலய பரிபாலன சபை அமைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்காலிக பரிபாலன சபையின் தலைவராக மார்க்கண்டு பாஸ்கரன், செயலராக சதீஸ்வரன் நிர்வாக உறுப்பினர்களாக 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

கோவில் நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கும் ஆலய திருவிழா உபயகாரர்களுக்கும்அறிவிப்பது எனவும்விரைவில் அனைவரையும் உள்ளடக்கிய பொதுக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து அதில் அடுத்தகட்ட விடயங்கள் தொடர்பாக ஆராய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆலயத்தில் கடந்த வருடம் ஜே.சி.பி இயந்திரத்தால் தேர் இழுத்தவர்கள், இந்தவருடம் திருவிழாவை நிறுத்தினர் என்று கூறப்படும் எவரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-63)

# மூளாயில் ஆசிரியர் வீட்டில் 11 பவுண் நகைகள் திருட்டு

*ஆள்கள் உசாரடைந்ததால் அயல் வீடு தப்பியது*

மூளாய், ஜூன் 5

மூளாயில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் நேற்று முன்தினம் இரவு 11 பவுண் நகைகள் திருடப்பட்டன. அயல் வீட்டிலும் திருட முற்பட்டபோது அங்கு ஆள்கள் இருந்துகூச்சலிட்டதால்அந்தவீட்டின்மீதுவைக்கப்பட்ட இலக்குநிறைவேறவில்லை.

சம்பவம் மூளாய் கூட்டுறவு மருத்துவமனைக்கு அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் ஆசிரியையாகக் கடமையாற்றிவரும்ஒருவர்நேற்றுமுன்தினம் நண்பகல்வீட்டில்இருந்துகொழும்புக்குப் புறப்பட்டுள்ளார்.

இந்த நிலையிலேயேநேற்றுமுன்தினம் இரவுவீடுபுகுந்ததிருடர்கள்நகைகளைத் திருடியுள்ளனர். அயல் வீடான குறித்த ஆசிரியையின் சகோதரி வீட்டிலும், வெளிக்கதவைத்திறந்து திருடர்கள் உட்சென்றுள்ளனர். அதை அவதானித்த வீட்டார்சத்தமிட்டுகத்ததிறக்கப்பட்டிருந்த யன்னல்கதவை அடித்துச்சாத்திவிட்டுக் கொள்ளைக் கும்பல் அங்கிருந்து தப்பியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம்தொடர்பில்வட்டுக்கோட்டைப்பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ம-21,26)

வழிபாடு





பாசையூர் கடலில் அமைந்துள்ள அந்தோனியார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் வழிபாடுகள் இடம்பெற்றன. பாசையூர் அந்தோனியார் ஆலயப்பெருவிழாஎதிர்வரும்13ஆம்திகதிநடைபெறவுள்ளது. திருவிழாக்காலத்தில் கடலில் அமைந்துள்ள குறித்த சொரூபத்திலும் வழிபாடுகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-ரீ1)

## அலங்கார உற்சவம்

வடமராட்சி, ஜூன் 5

வடமராட்சி, தென்புலோலி காந்தியூர் கோட்டத்தறை அருள்மிகு பத்திரகாளி சமேத வேம்படி வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து 10ஆம் நாளான நாளை வியாழக்கிழமைஆயிரத்து 8சங்காபிசேகம், பூசைகள் இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும். மாலைதிருக்கல்யாணக்காட்சி, திருஊஞ்சல்என்பனஇடம்பெற்று சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## குறுக்கே ஓடிய நரியால் காயமடைந்த அலுவலர்

சாவகச்சேரி, ஜூன் 5

உந்துருளியில் பயணித்தவேளை குறுக்கே ஓடிய நரியுடன் மோதியதில் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை சரசாலை- துன்னாலை வீதியில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சியில் வசிக்கும் தென்மராட்சிப் பிரதேச செயலக அலுவலர் ஒருவரே இவ்வாறு காயமடைந்தார். வீதியால் உந்துருளியில் பயணித்தவேளை வீதியின் குறுக்கே நரி பாய்ந்துள்ளது. இதனால் உந்துருளியில் இருந்து தூக்கி வீசப்பட்டு வீழ்ந்துள்ளார். இதனால் கையில் காயம் ஏற்பட்டது. அலுவலர் கண்விழித்து எழுந்த போது மோதிய நரி அங்கு நிற்பதைக் கண்டார். வீழ்ந்த இடத்திலிருந்துஎழுந்துஉந்துருளியைத் தூக்கி நிறுத்தும்வரை நரி அங்கு நின்றுவிட்டு காட்டினுள் ஓடியது என்று காயமடைந்தவர் தெரிவித்தார். (ஐ-9)

குண்டுவெடிப்புக்களை அடுத்து

## எளிமையான முறையில் வலயமட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

நாட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களையடுத்து கல்வி வலயங்களால் எளிமையான முறையில் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்ட விளையாட்டுப்போட்டிகள், தமிழ்த்தினப் போட்டிகள் போன்றவை எளிமையான முறையில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. வலயமட்ட விளையாட்டுப்போட்டிகள்கடந்த வாரம்வரணிமத்தியகல்லூரிமைதானத்திலும், வலயமட்ட தமிழ்த்தினப்போட்டிகளின்செய்முறைப்போட்டிகள்நேற்று முன்தினமும்நேற்றும்மட்டுவில்சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்திலும் நடத்தப்பட்டன. (ஐ-9)

பிரிவுபசார நிகழ்வு



யாழ்ப்பாணம், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் கடந்த 4 வருடங்களுக்கும் மேலாக கதிரியக்க மருத்துவ நிபுணராக கடமையாற்றிய மருத்துவர் நளினி ராஜேந்திராவின் பிரிவுபசார நிகழ்வு மருத்துவ அத்தியட்சகர் விமலசேன தலைமையில் நேற்று இடம்பெற்றது. (ப)


## யாழ். மாநகர சபையின் இப்தார் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்ப்பாண மாநகரசபையின் சமய விவகார மற்றும் கலை, கலாசார மேம்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு யாழ்ப்பாணம் பொதுநூலகக் கேட்போர்கூடத்தில்நேற்றுமுன்தினம்இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனல்ட், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் வரவேற்புரை மற்றும் அறிமுகவுரைகளை ஏற்பாட்டுக்குழுவின் தலைவரும் மாநகர சபை உறுப்பினருமான என்.எம்.பாலச்சந்திரன் நிகழ்த்தினார். இப்தார் சிறப்பு உரையை மௌலவி எம்.ஏ.பைசர் (மதனி) நிகழ்த்தினார்.



மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள், மதகுருமார்கள், சமய விவகார மற்றும் கலை கலாசார மேம்பாட்டுக் குழு உறுப்பினர்கள், யாழ்ப்பாண மாநகர பிரதி ஆணையாளர் அ.சீராளன், திணைக்களங்களின் தலைவர்கள், யாழ் மாநகரசபை அலுவலர்கள், பொது அமைப்புக்களின்பிரதிநிதிகள், பொதுமக்களெனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-105)

# காற்றாலை மின் உற்பத்தி மையம் அமையுமா என அச்சத்தில் மக்கள்

## கௌதாரிமுனை, பரமன்கிராய் பகுதியினர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 5

கிளிநொச்சி மாவட்டத்தின் கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் ஆகிய பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்களை அண்டிய வகையில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படவுள்ளதாகக் கூறப்படுவதால் தமது எதிர்காலம் தொடர்பில் அச்சம் ஏற்படுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசசெயலர் பிரிவின் கீழ் உள்ள இரு பூர்வீக கிராமங்களிலும் தற்போது 278 குடும்பங்கள் வாழ்கின்றோம். எமக்கு எந்தவொரு தகவலும் தெரியாமல் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. தற்போது இரு கிராமங்களில் ஆரம்பிக்கும் திட்டம் எதிர் காலத்தில் மேலும் 4 கிராமங்களுக்குப் பரவும் என்றே கூறப்படுகின்றது. தற்போதுதிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ள கௌதாரிமுனையின் கே.என் 67 இலக்க கிராம அலுவலர் பிரிவில் 115 குடும்பங்களைச் சேர்ந்த 378 பேரும், பரமன்கிராயில் 163 குடும்பங்களைச் சேர்ந்த 493 பேரும் வசிக்கின்றோம். இந்தத் திட்டம் ஆரம்பித்தால் எமது வாழ்வாதாரம் என்ன? இங்கிருந்து நாமும் நகரும் நிலைமை ஏற்படுமா? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இவை எதிர்காலத்தில் கிராஞ்சி, பொன்னாவெளி, இரணைதீவு பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்றும் அச்சம் தெரிவிக்கின்றனர். எனவே இந்தத் திட்டத்துக்கான சுற்றுச்சூழல், கரையோர, கடல்வள ஆய்வுகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை. இவற்றின் தாக்கங்கள் தொடர்பிலும் ஐயம் உள்ளது. எனவே இவை தொடர்பில் உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனக் கோருகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் பிரதேச செயலகத்திடம் கேட்டபோது, இலங்கை நிலைபேறான சக்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் எரிபொருளுக்கான மாற்று சக்தி மின் உற்பத்தியின் கீழ் பூநகரியின் பரமன்கிராய், கௌதாரிமுனை ஆகிய பகுதிகளை அண்டிய பகுதிகளில் 6 கிராம அலுவலர் பிரிவுகளின் பகுதிகளை உள்ளடக்கிய வகையில் 2 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் குறித்த காற்றாடி மற்றும் சூரிய மின் கலங்களினாலான மின் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு ஆரம்பிக்கும் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 450 மெகா வாட்ஸ் மின்சாரம் உற்பத்திசெய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான திட்ட ஆய்வுகள் 2019 செப்டெம்பரில் ஆரம்பித்து 2020 செப்டெம்பரில் திட்டத்தை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளனர். இதற்காக காணி சுவீகரிப்போ அல்லது குத்தகை அடிப்படையில் பெறுவது தொடர்பிலோ. எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இதேநேரம் சுற்றுச்சூழல், கரையோர, கடல்வள ஆய்வுகள் இதுவரை இடம்பெறவில்லை எனக்கூறப்பட்டாலும் திட்டம் ஆரம்பிக்க காலம் இருப்பதனால் இனி வாழும் காலத்திலும் இடம்பெறக் கூடும்.

இதற்கான அரசிதழ் அறிவித்தல் 2014ஆம் ஆண்டே வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் எவையும் பிரதேச செயலகத்துக்கு உட்பட்டு இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)

### ஸ்கந்தவரோதய கல்லூரியின் 125ஆவது ஆண்டு கொண்டாட்டம்

வலி.தென்மேற்கு, ஜூன் 5

கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை தொடக்கம் ஒரு வருட காலத்துக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி மண்டபத்தில் நாளை அதிபர் எம்.செல்வஸ்தன் தலைமையில் கேக் வெட்டி நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொள்ளவுள்ளார்.

கல்லூரி வளாகத்திலுள்ள ஸ்கந்த முருகன் ஆலயத்தில் இடம்பெறும் சிறப்புப் பூசையைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு 125 மங்கல விளக்குகள் ஏற்றப்பட்டு விழா நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

ஒரு வருட காலத்துக்குத் தொடர்ந்து இடம்பெறும் நிகழ்வுகளில் கல்லூரி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மறைந்த வி. தர்மலிங்கத்தின் சிலை திறப்பு விழாவும், பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டிகள், கலாசார நிகழ்வுகள், கண்காட்சி உட்படப் பல நிகழ்வுகளும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-115)

## காந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் ஈருருளிப் பேரணி!



யாழ்ப்பாணம், ஜூன் 5

மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஈருருளிப் பேரணி ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்திய கொன்சியூலர் ச.பாலச்சந்திரன் யாழ்ப்பாணம் அரியாலையில் உள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவித்து பேரணியை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து பேரணியானது அரியாலையில் இருந்து கண்டி வீதி வழியாக வந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வீதியின் முன்பாக உள்ள காந்திசிலையடியில் நிறைவு பெற்று சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இ.ஆனல்ட், யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் ஜெயசீலன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-7)

## ஆயிரம் மரக்கன்றுகள் நடும் செயற்பாடு இன்று ஆரம்பம்

தென்மராட்சி, ஜூன் 5

வவுனியா தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான ஏ9 முதன்மை வீதியில் ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது. வடக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் உலக சுற்றாடல் தினமான இன்று மரநடுகை மேற்கொள்ளப்படவுள்ளது.

வவுனியா தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான பகுதிகளில் உள்ள பிரதேச செயலகத்தினர், விவசாயத் திணைக்களத்தினர் உள்ளூராட்சி சபைகள் ஆகியவை இணைந்து மரக்கன்றுகளை நடவுள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் எழுதுமட்டுவாழ் தொடக்கம் நாவற்குழி வரையான பகுதிகளில் மரக்கன்றுகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நடுகை செய்யப்படவுள்ளன.

பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

பிரதேசத்தில் நடப்படவுள்ள 350 மரக்கன்றுகளையும் பராமரிக்கும் பொறுப்பை சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் சாவகச்சேரி நகரசபை ஆகியன ஏற்றுள்ளன. (ஐ-9)



### மாணவர்களுக்கு 'பான்ட்' சீருடைகள்

கிளிநொச்சி, ஜூன் 5

கிளிநொச்சி மாவட்ட சிவபாத கலையகம் அ.த. க பாடசாலை மாணவர்களின் பான்ட் இசைக்குழுவினருக்குச் சீருடைகள் வழங்கப்பட்டன.

உறங்கா விழிகள் (கனடா) தொண்டு நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் இவை வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார் அதன் பொதுச் செயலர் செ .கஜேந்திரன் மற்றும் உறங்கா விழிகள் அமைப்பின் கிளிநொச்சி செயற்பாட்டாளர் ம.விமலதரன், அதன் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் பாடசாலை அதிபர், கிராமஅலுவலர், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-222)

### குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 5

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் வீரகத்தி விநாயகர் ஆலய குடமுழுக்கு நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. நேற்று எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

இதனையடுத்து நாளை ஆலய முதன்மைக் குரு சிவசிறி க.ச.சோமாஸ்கந்த குருக்கள் மற்றும் ஆலய குரு பிரம்மஸ்ரீ மு.ரமணனந்த சர்மா உள்ளிட்ட 30 ஆச்சாரிகள் குடமுழுக்கை நடத்திவைக்கவுள்ளனர். அன்றைய தினத்தில் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என்று ஆலய தர்ம பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-105)

## வடக்கு சுற்றுலா தொடர்பில் ஆளுநர் - மக்கினன் பேச்சு



யாழ்ப்பாணம்,ஜூன் 5

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினன் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை ஆளுநர் செயலகத்தில் நேற்றுச் சந்தித்தார். இந்த சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் வட பகுதி சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்த மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டன. அத்துடன், வடக்கு மாகாண மக்களின் தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் எவ்வகையிலான துறைசார் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இதற்காக கனடா அரசு வழங்க வேண்டிய உதவிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. (ஐ-7)

### பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 5

சிறி ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 11 நாள்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும், மறுநாள் 16 ஆம்திகதிகாலை8மணிக்கு தேர்த்திருவிழாவும், 17 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

திருவிழா நாள்களில் தினமும் 12 மணிக்கு மகேஸ்வரப் பூசை இடம்பெறும் என்று ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் வை.இரகுநாத முதலியார் அறிவித்துள்ளார். (ஐ)

# ஞானசார தேரருக்கு எதிராக மன்.பொலிஸில் முறைப்பாடு

## பிரதேச சபைத் தவிசாளர் பதிவுசெய்தார்

மன்னார், ஜூன் 5

இனவாதியாகச் செயற்படுபவர் என்று குற்றஞ்சாட்டப்படும் ஞானசார தேரருக்கு எதிராக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுற்பகல் பதினொரு மணியளவில் இந்த முறைப்பாட்டைச்செய்தேன் என்று மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் முஜாஹிர் தெரிவித்தார்.

இரண்டு நாள்களுக்கு முன் அமைச்சர் ரிசாத் ஆளுநர்களான ஹிஸ்புல்லா, அசாத்சாலி போன்றோர் பதவி விலக வேண்டும் என்று ஞானசார தேரர் கண்டியில் உரையாற்றியிருந்தார். அந்த உரையில் 12 மணித்தியாலங்களுக்குள் அவர்கள் பதவியிலிருந்து விலகாவிட்டால் இலங்கை எரியும் என்றும் இனங்கள், மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையிலும் சிறுபான்மை இனத்தினரை அடக்கியாளும் தொனியிலும் உரையாற்றியிருந்தார்.

இந்த உரை புரிந்துணர்வுகளுடன் நல்லிணக்கத்துடனும் வாழும் மக்களிடையே பிரிவினையையும் அச்சத்தையும் ஏற்படுத்துவதாக உள்ளது. இலங்கையில் இனக்கலவரமோ மதக்கலவரமோ உருவாகுமானால் அதற்கு முழுக் காரணமும் ஞானசார தேரரே என்றும் க்ண்டியில் ஞானசாரதேரர் உரையாற்றிய இறுவட்டுக்களையும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். நீதிமன்றை அவமதித்த குற்றத்துக்காக அவர் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வந்தார். அரசதலைவரின் பொதுமன்னிப்பில் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தார். (த-213)

# தென்பகுதி மீனவர்களால் எமது தொழில்கள் பாதிப்பு

## முல்லை மீனவர்கள் கவலை

முல்லைத்தீவு, ஜூன் 5

தென்பகுதி மீனவர்களின் வருகையால் தமது கடற்றொழில் நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவின் மாத்தளன் தொடக்கம் பேப்பாரப்பிட்டி வரையான கடற்பரப்பில் நிரந்தரமாகத் தொழில் செய்துவரும் உள்ளூர் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மாத்தளன் சாலைகடற்பரப்பில்தெற்கு மீனவர்களும் கொக்கிளாய் முகத்துவாரத்தில் வந்துதங்கியுள்ள மீனவர்கள் மாத்தளன், பேப்பாரப்பிட்டி முனைப்பகுதிகளில் சட்டவிரோத தொழில் நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றனர் என்று மாத்தளன் பகுதி மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்திடம் தெரியப்படுத்தியபோது அவர்கள் கரையில் சென்று பார்வையிட்டு அத்துமீறி வந்தவர்களை கலைத்துள்ளார்கள்.

ஆனால் கடலில் தொழில் செய்பவர்களைக் கலைக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

வெளி இடங்களைச் சேர்ந்த மீனவர்களின் வருகையால் மாத்தளன் பொக்கணைப் பகுதியைச் சேர்ந்த ஆயிரத்து 200 மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்த மீனவர்கள் கடற்றொழில் சங்கங்களின் எதுவித அனுமதியும் அற்ற நிலையில் வேறு இடங்களில் இருந்து மாத்தளன் சாலை பகுதிகளில் வந்து தொழில் செய்வதை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் என்று மாத்தளன் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இது பற்றி பலமுறை அதிகாரிகளிடம் கேட்கும்போது நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறுகின்றனர். உரிய நடவடிக்கை இதுவரை எடுக்கப்படவில்லை. (த-ரி3)

### தண்ணீர்த் தொகுதி பாவனைக்கு

முல்லைத்தீவு, ஜூன் 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற "நாட்டுக்காக ஒன்றிணைவோம்" திட்டத்தின் நிகழ்வாக மாங்குளம் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைத்த குடிதண்ணீர்த் தொகுதி மாணவர்களின் பாவனைக்காக நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது.

வித்தியாலய முதல்வர் த.யோகானந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு அரச தலைவர் செயலக உதவிச் செயலர் லலித்பண்டார, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளரும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினருமான ச.சத்தியசுதர்சன், புதுக்கு டியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் மு.முகுந்த கஜன், வலயக்கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (த-222)



நாட்டுக்காக ஒன்றிணைவோம் நிகழ்ச்சித் திட்டத்தின் நான்காம் கட்டமாக முல்லைத்தீவு நகரில் பேருந்துத் தரிப்பிடம், அதனோடு இணைந்த சின்ன ஆற்றுப்பகுதி சுத்திகரிப்புப் பணிகளில் துப்புரவு நேற்று நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்ட செயலக அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், படையினர் இந்தப் பணியில் ஈடுபட்டனர். (ரி3)

# முன்னாள் போராளிக்கு கடை அமைக்க உதவி

கிளிநொச்சி, ஜூன் 5

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த முன்னாள் போராளிகளில் ஒருவரான நகுலனுக்கு வாழ்வாதார அபிவிருத்தி உதவியாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கல்விப் பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் செயற்றிட்டங்களில் ஒன்றாக, முன்னாள் போராளிகள் மற்றும் போராளிகள் குடும்பத்தினருக்கான வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் இது வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

மரக்கறி விற்பனைக் கடையில் ஊழியராகப் பணிபுரிந்த இவருக்கு, சொந்தமாக தொழில் செய்யக்கூடிய வகையில் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை கனடாவின் ரொரன்ரோவில் வதியும் தேவபாலன் கஜேந்தினி தம்பதியினர் வழங்கியிருந்தனர். (த-222)

# கையால் சுரண்ட தார் கிளம்புகிறது வீதிச் சீரமைப்பின் தரம் இதுதானா?

## வவுனியாவில் வீதிக்கு இறங்கினர் இளைஞர்கள்

வவுனியா, ஜூன் 5

வவுனியா தவசிகுளம் பிள்ளையார் கோவில் வீதி சீரமைக்கப்பட்டபோதும் அதன் தரம் படுமோசமாகவுள்ளது என்று குற்றஞ்சாட்டிய அங்குள்ள இளைஞர்கள் வீதிக்கு இறங்கினர். அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டது. வீதிச் சீரமைப்பின் தரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று அவர்கள் உடும்புப்பிடியாக நின்றனர். அதனால் வீதிச் சீரமைப்பின் தரம் பற்றி ஆராய்கின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானின் நிதி ஒதுக்கீட்டில் கொழும்பு அரசிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக இரண்டு கோடியே இருபது லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குச் சொந்தமான தவசிகுளம் பிள்ளையார் வீதி செப்பனிடும் பணி இரு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது.

சுமார் 1.5 கிலோ மீற்றர் கல்லிட்டு தாரிடும் பணிகள் நிறைவுக்கு வந்தன. இந்த நிலையில் எஞ்சிய கற்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஒப்பந்தக்காரர் 11 டிப்பர்களில் வவுனியா மதவு வைத்தகுளம் பகுதி கல் ஆலைக்கு எடுத்துச் சென்றுள்ளார். அதை அவானித்த தவசிகுளம் கிராம இளைஞர்கள் குறித்த கல் ஆலைக்குச் சென்று அவற்றை மீள எடுத்த இடத்துக்குக் கொண்டு செல்லுமாறு கோரி கல் ஆலையை முற்றுகையிட்டனர். அதனால் 11 டிப்பர்கள் மூலமாக கற்கள் தவசிகுளத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன.

நேற்றுமுன்தினம்காலை வீதியைச் செப்பனிடும் பணிகளைப் பார்வையிட வந்த ஒப்பந்தகாரர்களை தவசிகுளம் இளைஞர்கள் முற்றுகையிட்டு வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.



பொலிஸார் விசாரணை நடத்தினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர் கா. நந்தகுமாரன் அங்கிருந்த இளைஞர்களுடனும் ஒப்பந்தகாரர்களிடமும் கலந்துரையாடினார். வவுனியா தெற்கு பிரதேச சபையின் தொழிநுட்ப அலுவலரை வரவழைத்து வீதியின் தரத்தை மதிப்பீடு செய்யுமாறு பணித்தார்.

இதேவேளை, அந்தப் பகுதி இளைஞர்களுக்கும், ஒப்பந்தகாரருக்கும் இடையில் முரண்டுபாடுகள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. 'நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் சகோதரர் தன்னை அச்சுறுத்தினார்" என்று குற்றஞ்சாட்டி அந்த வட்டாரத்தைச் சேர்ந்த பிரதேசசபை உறுப்பினர் கா.நந்தகுமாரன் அன்றுமாலை வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்தார். அதற்காக மஸ்தானின் சகோதரர் பொலிஸ் நிலையத்தில் விளக்கம்கூறவேண்டியேற்பட்டது.

அவர் தெரிவித்ததாவது:

'தவசிகுளம் பிள்ளையார் கோவில் வீதியைச் சீரமைக்க பிரதேச சபையிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்று உப ஒப்பந்தகாரர் ஒருவரிடம் வழங்கியுள்ளது.

திருத்த வேலைகள் நடைபெற்றன. அதில் முறைகேடு உள்ளதா, இல்லையா என்பதை தொழில்நுட்ப அலுவலர்களே தீர்மானிக்க வேண்டும். அரசியல் காழ்ப்புணர்ச்சியால் ஒப்பந்தகாரருடன் சிலர் முரண்பட்டனர். அவர் அழைத்தமைக்கு அமைவாக குறித்த இடத்துக்குச் சென்று நிலமையை பார்வையிட்டேன். நான் யாருக்கும் அச்சுறுத்தல் விடவில்லை. எனக்கெதிராகச் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு இன்றுமாலை (நேற்றுமுன்தினம்) பொலிஸில் வாக்குமூலம் வழங்கியுள்ளேன். நான் எவரையும் அச்சுறுத்தவில்லை' என்றார்.

"எமது வீதியைச் செப்பனிடுவதற்கென்று எமது கிராமத்தில் குவிக்கப்பட்ட கற்கள் எவ்வாறு மிஞ்சும்? ஒரு டிப்பர் கற்கள் மிஞ்சினால் பரவாயில்லை. 11 டிப்பர் கற்கள் மிஞ்சுமளவுக்கு வீதியின் தரம் எந்தளவில் உள்ளது? இது பற்றி எமக்குச் சந்தேகமுள்ளது.

மிகுதியுள்ள கற்களை எமது வீதிக்கே பயன்படுத்த வேண்டும். இந்த வீதியில் போடப்பட்டுள்ள தாரை எமது கையால் கழற்றிஎடுக்க முடிகின்றதே! 11 டிப்பர் கற்கள் எஞ்சியுள்ளன. இவற்றை நோக்கும் போது வீதி செப்பனிடும் பணியில் ஊழல் இடம் பெற்றுள்ளது என்றே கருதவேண்டியுள்ளது. இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் தலையிட்டு தீர்வைப் பெற்றுத்தரவேண்டும்" என்றும் கோரினர்.

வீதியின் தரம் பற்றி பிரதேச சபையின் பொறியியலாளர் ஆய்வு செய்தார் என்று கூறப்பட்டது. வீதி தரமின்றியுள்ளதாகக் கூறப்பட்டபோதும் உரிய அதிகாரிகள் ஆய்வுஅறிக்கையைவெளியிடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# சிங்கள, பௌத்த பேரினவாதப் பசிக்கு இரையாகின்றனர் முஸ்லிம் மக்கள்

## அவர்களை ஆரத்தழுவுவதாக விக்னேஸ்வரன் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 5

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பசிக்கு சகோதர முஸ்லிம் மக்கள் இரையாகிவரும் இந்தத் தருணத்தில் தமிழ் மக்கள் அவர்களை ஆதரவுடனும் பாசத்துடனும் ஆரத்தழுவுவதாகவும் அவர்களின் துயரத்தில் பங்குகொள்வதாகவும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமுமான நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்களைப் பல தசாப்தங்களாக பலிகொண்டுவரும் சிங்கள பேரினவாதத்தின் பார்வை தற்போது முஸ்லிம் மக்களின் மீது திரும்பியிருக்கும் இந்த வேளையில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும்கைகோர்த்து, இணைந்த வடக்கு- கிழக்கில் தம்மைத் தாமே ஆளும் அதிகாரக் கட்டமைப்பை உருவாக்குவதற்காகப் பாடுபட வேண்டியதன் அவசியத்தை நடைபெற்றுவரும் நிகழ்வுகள் காட்டுகின்றன. அத்தகைய ஒரு கட்டமைப்பு மட்டுமே இரண்டு சமூகங்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

முஸ்லிம் மக்களின் அரசியல், பொருளாதாரப் பலத்தை இலக்கு வைத்து பௌத்த பேரினவாதம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளின் பேராபத்தை உணர்ந்து கொண்டு வெவ்வேறு கட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையை வெளிப்படுத்தி இருப்பது மகிழ்ச்சியை அளித்துள்ளது. இதனை வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டு தேவையெனில் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் குற்றம் செய்யாதவர்களையும் பெரும்பான்மையினம் தண்டிக்க விளைவது எந்த விதத்திலும் மன்னிக்க முடியாதது.

அரச தலைவரையும், தலைமை அமைச்சரையும் பிக்குகள் வற்புறுத்தி குற்றம் சாட்டப்பட்டுள்ள முஸ்லிம் அமைச்சர் மற்றும் ஆளுநர்களை நீக்கும் அளவுக்கு அரசியலில் பௌத்த சங்கத்தின் செல்வாக்கு வளர்ந்துவிட்டது.

பாதிக்கப்பட்ட எமது உறவுகளின் உணவு ஒறுப்புக்கள் கோரிக்கைகள் எவையும் இதுவரையில் தொடர்ந்து வந்த அரசுகளால் கணக்கில் எடுக்கப்படவில்லை.

பிக்குமாரின் செல்வாக்குச் சட்டம், ஒழுங்கு மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றைக் குழிதோண்டி புதைக்கும் பேராபத்தான ஒரு நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் தம் மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து தமது நிரபராதி தன்மையைப் பாதுகாப்பதற்கான உரிமை மறுக்கப்பட்டு பதிலாக மதவாதம் ஊக்குவிக்கப்பட்டுள்ளமை எதிர்காலத்தில் ஏற்படப் போகும் அழிவுகளை பறைசாற்றி நிற்கின்றது- என்றுள்ளது. (ஒ.5)



## டோவலுக்கு அதிகாரங்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 5

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், கூடுதல் அதிகாரங்களுடன், மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு, பணி நீடிப்புச்செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு மீண்டும் பதவிக்கு வந்துள்ளதை அடுத்து, இந்திய நடுவண் அரசின் அமைச்சரவையின் உயர் பதவிகளுக்கான நியமனக் குழு இதுதொடர்பான தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதற்கமைய, தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அஜித் டோவல், 2019ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு பணி நீடிப்புச் செய்யப்படுவதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

அத்துடன், அவருக்கான அதிகாரங்களும்விரிவுபடுத்தப்பட்டுள்ளன. முன்னர், இணை அமைச்சருக்குரிய அதிகாரங்கள், அந்தஸ்துடன் இருந்த தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் பதவி, தற்போது, அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சருக்குரிய அதிகாரங்கள்கொண்டதாகவிரிவாக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# முஸ்லிம் தலைமைகளைப் போன்று தமிழர் தலைமைகளும் செயற்படுமா?

## கேள்வி எழுப்புகிறார் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, ஜூன் 5

இனத்தின் நலனை முன்னிலைப்படுத்தி முஸ்லிம் தலைமைகள் ஒன்றிணைந்து எடுத்த முடிவு வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்குரியதும் ஆகும். தமிழ் இனம் அல்லற்பட்ட வேளைகளில் தமிழ்த் தலைமைகள் இவ்வாறு ஒன்றுபட்டு செயற்பட்டிருந்தால் இன்று நாம் எமது இனத்தின் விடிவை நோக்கிப் பல மைல்கற்கள் முன்னோக்கி நகர்ந்திருப்போம்.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முஸ்லிம் மக்கள் இன்று ஒரு பெரிய நெருக்கடியைச் சந்தித்திருக்கின்ற சூழ்நிலையில் எவ்வித கட்சிப் பாகுபாடுகளுமின்றி முஸ்லிம் தலைமைகள் யாவரும் ஒன்றிணைந்து தத்தமது பதவிகளைத் துறந்தமையானது தமது இனத்தின் நலன்களை ஏனைய நலன்களை விடவும் முன்னிலைப்படுத்தி செயற்பட்டிருக்கின்றார்கள் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. தேசியக் கட்சியில் போட்டியிட்டு சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகள் மூலமாகத் தெரிவு செய்யப்பட்ட அமீர் அலி போன்றோர்களும் இவ்விடயத்தில் ஏனைய முஸ்லிம் தலைமைகளுடன் இணைந்து தமது பதவியிலிருந்து விலகியுள்ளமை மிகவும் பாராட்டுக்குரியது.

நேற்றைய தினம் மட்டுமல்ல, உயிர்த்த ஞாயிறு தினத்தின் மறுதினமே சகல முஸ்லிம் தலைமைகளும் ஒன்றாக ஆண்டகை மல்கம் ரஞ்சித்தைச் சந்தித்து பயங்கரவாதத்துக்கு எதிரான தமது நிலைப்பாட்டை எடுத்தியம்பினர்.

அண்மையில் முஸ்லிம் தலைமைகள் யாவரும் ஒன்றாக அரச தலைவரைச் சந்தித்து அவசரகால நிலையின் கீழ் பல அப்பாவிகளும் கைதாகியுள்ளனர் என்பதனை எடுத்துரைத்துடன், உண்மையில் பயங்கரவாதத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று அடையாளம் காணப்பட்டோரைத் தவிர ஏனையோரை வீணாகத் தடுத்து வைக்காது விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்திருந்தனர்.

முஸ்லிம் தலைமைகளின் இம்மாதிரியான அரசியற் செயற்பாடுகளைப்போல் தமிழ்த் தலைமைகளாலும் ஒன்றுபட்டு குரல் கொடுக்க முடியாதது ஏன்?

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பல வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டவர்களாக இருக்கலாம், படைகள் வசமிருக்கும் தனியார் காணிகள் விடயங்கள் தொடர்பாக இருக்கலாம். வடக்கு - கிழக்கில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளின் வரம்பு மீறல் செயற்பாடுகளாக இருக்கலாம், போர்க் கால நிகழ்வுகள் தொடர்பாக பொறுப்புக் கூறல் விடயங்களாக இருக்கலாம், இவ்வாறே அடுக்கிக் கொண்டே போகலாம். ஒரு விடயத்தில்தானும் தமிழ்த் தலைமைகள் ஒன்றிணைந்து இதுதான் எமது நிலைப்பாடு என்று அரசுக்கு எடுத்துக் கூறிய வரலாறு உண்டா? இனி மேலாவது இவ்வாறு நிகழ்வதற்கான சாத்தியக் கூறுகள் உண்டா? அடுத்ததேர்தலில்தமது கதிரைகளை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது அல்லது எவ்வாறு கதிரையை எட்டிப்பிடிப்பது என்ற அரசியலுக்கு அப்பால் எமது இனத்தின் நலன்களை முன்னிலைப்படுத்தி தமிழ்த்தலைமைகள் அரசுக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் ஒரே குரலில் அழுத்தம் கொடுக்க முன்வருமா? என்று அந்த அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளார் தவராசா.

(ஒ.5,105)

## இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினரைச் சந்தித்தார் அமெ. உத்வி செயலர்

கொழும்பு, ஜூன் 5

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், அரசியல் இராணுவ விவகாரங்களுக்கான உதவிச் செயலர் கிளார்க் கூப்பர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலர் ஆகியோரை நேற்றுமுன்தினம் சந்தித்து தனித்தனியாகப் பேச்சு நடத்தினார்.

கொழும்பு வந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், அரசியல் இராணுவ விவகாரங்களுக்கான உதவிச் செயலர் கிளார்க் கூப்பர், அரச பிரதிநிதிகள் உள்ளிட்டோரைச் சந்திப்பதில் ஈடுபட்டிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சில், பாதுகாப்புச் செயலரைச் சந்தித்த கிளார்க் கூப்பர், இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவாகாரங்கள் குறித்துப் பேசியுள்ளார்.



இந்தப் பேச்சுக்களில், இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதுவர் றொபேர்ட் ஹில்டன் உள்ளிட்ட அமெரிக்க அதிகாரிகளும் பங்கேற்றனர். அதே வேளை, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன வுடனும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், அரசியல் இராணுவ விவகாரங்களுக்கான உதவிச்செயலர் கிளார்க் கூப்பர், பேச்சுக்களை நடத்தினார்.

இந்தச் சந்திப்பில் அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் மற்றும், தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன் போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து பேசப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

இருதரப்பு பேச்சுக்கள் நடத்தப்பட்டதாக, தெரிவித்துள்ள கிளார்க் கூப்பர், சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்காக, இலங்கையுடன் நீடித்து வரும் பாதுகாப்புப் பங்காளித்தத்தையும், செழிப்பையும் மேம்படுத்துவதற்கு நாங்கள் முயற்சிக்கிறோம், என்று குறிப்பிட்டுள்ளார்.

(ஒ.5)

# பிக்குகளின் அரசியல் தலையீடுகள் சிறுபான்மையினருக்கு ஆபத்தானது

## எச்சரிக்கிறார் பிரபா கணேசன



கொழும்பு, ஜூன் 5

இன்று நாட்டில் நிலவிவரும் சிக்கலான அரசியல் நிலவரத்தில் பௌத்த பிக்குகளின் தலையீடு எதிர்காலத்தில் நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஹிஸ்புல்லா, ரிசாத் பதியுதீன், அசாத்சாலி ஆகியோர் மீது ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுக்கள்சுமத்தப்பட்டன. அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ரிசாத்துக்கு எதிராக பயங்கரவாதத்துக்கு துணை போனார் என்ற குற்றச்சாட்டு மட்டுமல்லாது சொத்துக்குவிப்புவிவகாரத்திலும் இன்றுகேள்வி எழும்பியுள்ளது. போர் நடந்த காலத்தில் பயங்கரவாதத்துக்கு துணைபோனார்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் பல தமிழ் இளைஞர்கள் 20 வருடத்துக்கும் அதிகமாக சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் ஹிஸ்புல்லா, அசாத் சாலி, ரிசாத் ஆகியோருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் மிக்கவர்களாக காணப்படும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டு மக்களுக்கு பதிலளிக்க வேண்டிய கடமை உள்ளது. இவர்கள் இருவரும் சுயலாபத்துக்காகச் செயல்படுவது இன்று மக்களுக்குப் புரிந்துள்ளது. இரண்டு தலைவர்களும் விட்ட தவறால் இன்று பிக்குகள் அரசியலில் தலையீடு செய்ய வேண்டி வந்துள்ளது. எது எப்படி இருப்பினும் பிக்குகளின் அரசியல் தலையீடுகள் தொடருமேயாயின் சிறுபான்மை மக்களுக்கு எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். இவர்கள் தமிழ் மக்களுக்கும் எதிராக திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்படும். நாம் தமிழர்கள், மிகவும் அவதானத்துடன் செயல்பட வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவோ, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவோ எமது தமிழ் மக்களின் நலனை முன்னெடுக்கப் போவதில்லை. மாறாக நாம் தான் எமது மக்களின் நலன் சம்பந்தமாகப் போராட வேண்டி உள்ளது. இன்றைய காலகட்டத்தில் உணர்ச்சிவசப்படாமல் நாம் செயல்படுவோமேயாயின் எதிர்காலத்தில் எமது அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

முஸ்லிம் சமூகத்தின் நலன் கருதி இந்த மூன்று அரசியல்வாதிகளும் தாங்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்காமல் எந்தவொரு பதவியையும் வகிக்கக் கூடாது. அதே நேரம் தமிழ் மக்கள் தங்கள் சமூகம் சார்ந்தவருக்கே வாக்களிக்க வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். எதிர்வரும் பல தேர்தல்களில் தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிப்பதன் ஊடாக தமது நலன்களை பேணி பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் - என்றுள்ளது. (ஒ.5)

# இனவாதத்துக்கு முஸ்லிம் அமைச்சர்கள் இரையாகினர்

## இது வருந்தத்தக்கது என்கிறார் சுமந்திரன்

முஸ்லிம் அமைச்சர்கள் இனவாதத்துக்கு இரையானது வருந்தத்தக்கது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா, மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி ஆகியோருக்கு தொடர்பு இருப்பதாகவும், அவர்கள் பதவிகளிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினரும், பிக்குவுமான அத்துரலிய ரத்ன தேரர் கடந்த வெள்ளிக்கிழமை உணவு ஒறுப்புப் போராட்டத்தை, கண்டி தலதா மாளிகை முன்பாக நடத்தினார். கடும் அழுத்தங்கள் எழுந்ததையடுத்து, முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் ஒன்றாகப் பதவி விலகினர்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கீச்சகத்தில் பதிவிட்டிருந்தார். அதில், நேற்று நாம், இன்று நீங்கள் நாளை இன்னொரு 'மற்றவர்'. முஸ்லிம் மக்களோடு நாம் தொடர்ந்து தோழமையோடு நிற்போம். நேர்ச்சிந்தனையுள்ள அனைத்து இலங்கையரையும் அதையே செய்யுமாறு அழைக்கிறோம், என்று பதிவிட்டுள்ளார். (ஒ.5,22)

# இனத்தின் நன்மைக்காக தியாகம் செய்த முஸ்லிம் அமைச்சர்களை பாராட்டுகின்றேன்

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5

நெருக்கடியான நேரத்தில் ஒற்றுமையாக செயற்பட்டு, இனத்தின் நன்மைக்காக எந்தத் தியாகத்தையும் செய்வோம் என்பதை நிரூபித்துள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகளை பாராட்டுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் அமைச்சர்களின் பதவி விலகல் தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

1983ஆம் ஆண்டு 6ஆவது திருத்த சட்டத்தால், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் இருந்து விலகுவதற்கான நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அந்த நிர்ப்பந்தத்தால் தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் அற்றுப் போகும் நிலையும், தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை ஜனநாயகரீதியில் வெளிப்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டது. தமது ஜனநாயகக் குரல்கள் வலுவிழக்கச் செய்யப்பட்ட நிலையில், ஆயுதப் போராட்டத்துக்கு மக்களின் ஆதரவு பெருகியது.

இன்று நாடாளுமன்றத்தை விட்டு முஸ்லிம் பிரதிநிதிகள் விலக்கப்படாவிட்டாலும், தாம் பழிவாங்கப்படுகிறோம், தமது குரல்கள் முடக்கப்படுகின்றன என்ற எண்ணம் முஸ்லிம் மக்களின் மனங்களில் விதைக்கப்படுவதுபோன்ற சம்பவங்களே நடந்தேறிக்கொண்டிருக்கின்றன. முஸ்லிம் மக்களின் ஜனநாயகக் குரல்கள் அடக்கப்படுவதனூடாக அவர்களை தீவிர நிலைப்பாட்டை நோக்கி தள்ளும் இனவாத செயற்பாட்டை அரசு அனுமதிக்கக்கூடாது. பிரச்சினைகளை நியாயமாக, அரசியல் ரீதியாக கையாண்டு தீர்க்க வேண்டும். முஸ்லிம் அமைச்சர்களின் பதவிவிலகல் தேவையற்றது, இனவாதம் வெற்றியடைந்தது என ஒரு பகுதியினர் குறிப்பிட்டு வந்தாலும், உண்மையில் இந்த விவகாரத்தில் மிதவாத போக்குடைய முஸ்லிம் தலைவர்கள் வெற்றியடைந்திருக்கிறார்கள் என்பதே என்னுடைய கருத்தாகும் - என்றார். (ஒ.5)

# பாய்ந்தது சருகுப் புலி: இளைஞர்கள் சாவு

கொழும்பு, ஜூன் 5

சருகுப்புலி பாய்ந்ததில் ஈருருளி தடம்புரண்டு மைல் கல்லில் மோதுண்டதில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள பதுளை வீதி கொடுவாமடுவில் இந்த விபத்து இடம் பெற்றது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செங்கலடி கணபதி நகரைச் சேர்ந்த பேரின்பராசா ஜெயரூபன் (வயது-19), கௌரீஸ்வரன் விதுசன் (வயது-20) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

ஈருருளியில் பதுளைவீதி வழியாக செங்கலடி நோக்கி வந்து கொண்டிருந்துள்ளனர். அப்பொழுது கொடுவாமடு எனுமிடத்தைக் கடக்கும்போது சருகுப்புலி திடீரென வீதியைக் கடக்க முற்பட்டுள்ளது. வேகமாக வந்த ஈருருளியை சருகுப்புலியை மோதித் தள்ளி தடம்புரண்டு வீதிக்கரையிலிருந்த மைல் கல்லில் சென்று மோதியுள்ளது.

இதனால் இளைஞர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். ஈருருளியில் மோதுப்பட்ட சருகுப்புலியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளது. (ஒ.5)

கேலிச்சித்திரம்




நன்றி: சஜித் பண்டார

# முஸ்லிம்களுக்கு மைத்திரிபால நன்றிக்கடன் செலுத்திவிட்டார்

## கூறுகிறார் இம்ரான் எம்.பி.

கொழும்பு, ஜூன் 5

அரச தலைவர் மைத்திரிபால முஸ்லிம்களுக்கு சிறந்த நன்றிக்கடன் செலுத்திவிட்டார் என்று ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது::

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம்கள் மீதும் அரசியல்வாதிகள் மீதும் தீவிரவாத முத்திரைக் குத்தும் நோக்கில் சில அரசியல்வாதிகளும் பெரும்பான்மை ஊடகங்களும் நன்கு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றன. எமது சமூகத்தின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி நாடு மற்றுமொரு இனக்கலவரத்தை நோக்கிச் செல்லும் சூழ்நிலை உருவாகிறது.

இவர்கள் எம்மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் முடிந்தால் நிரூபித்துக் காட்டுங்கள் என்று அவர்களுக்குச் சவால் விடுகின்றோம். இந்த விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி எமதுசமூகத்தின்மீதுசுமத்தப்பட்டுள்ள அரசியல்நோக்கம் கொண்ட வீண் பழியைப் போக்கவே முஸ்லிம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகியுள்ளனர்.


நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைக்கு முற்றுமுழுதாக பொறுப்புக் கூறவேண்டியவர் அரச தலைவரே.உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின் முஸ்லிம்கள் தொடர்பாக பெரும்பான்மை மக்களிடம் நன்கு திட்டமிட்டு இனவாத பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் இடம்பெற்றன.

இந்த இனவாத பரப்புரைகளைத் தடுக்கவோ, தாக்குதல்களை கட்டுப்படுத்தவோ சட்டம் ஒழுங்கு அமைச்சராகவோ, பாதுகாப்பு அமைச்சராகவோ, அரச தலைவராகவோ அவர் உரிய நடவடிக்கைகள் எதையும் முன்னெடுக்கவில்லை.

அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போது உணவு ஒறுப்புப் போராட்டங்களை முன்னெடுக்க யார் அனுமதி கொடுத்தது?

விரைவில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளை அரச தலைவர் எதிர்பார்த்துள்ளார் என்பதே பதிலாகும். அவரை அரச தலைவராக்க பாடுபட்ட முஸ்லிம்கள் இன்று தாக்கப்படும்போது அதை எதிர்த்து ஒரு வார்த்தை கூட பேச முடியாத அரச தலைவருக்காக நான் உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் அரச தலைவர் தேர்தலின் போது பரப்புரை செய்தேன் என்பதை நினைத்து இப்போது வெட்கித் தலைகுனிகின்றேன்.

அவரை அரச தலைவராக்கிய முஸ்லிம்களுக்கு இன்று அவர் சிறந்த நன்றிக்கடன் செலுத்திவிட்டார் - என்றார். (ஒ.5)



## தேசிய சுற்றாடல் வாரத்தில் மைத்திரிபால மரம் நடுகை

தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு அரச தலைவர் மாளிகை வளாகத்தில் பழ மரத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நட்டார். இன்று கடைப்பிடிக்கப்படும் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மே மாதம் 30ஆம் திகதி இன்று வரையான காலத்தை தேசிய சுற்றாடல் வாரமாக அறிவித்து அதன்கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மே மாதம் 30ஆம் திகதி சுற்றாடலை துப்பரவு செய்தல் மற்றும் சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான தினமாகவும் 31ஆம் திகதி வாயு மாசடைதலையும் அதன் தாக்கங்களையும் குறைப்பதற்கான தினமாகவும் ஜூன் 1ஆம் திகதி மரநடுகைக்கான தினமாகவும் ஜூன் 2ஆம் திகதி நீர் மற்றும் நீர் மூலங்களை பாதுகாப்பதற்கான தினமாகவும் பெயரிட்டு நாடளாவிய ரீதியில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, ஜூன் 3ஆம் திகதி உயிர் பல்வகைமையை பாதுகாப்பதற்கான தினமாகவும் ஜூன் 4ஆம் திகதி பேண்தகு காணி முகாமைத்துவத்திற்கான தினமாகவும் அறிவிக்கப்பட்டு பல வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வளி மாசடைதலே தற்போது மனிதனின் சுகாதாரத்துக்குப் முதன்மையான அச்சுறுத்தலாக விளங்குகின்றது. உலக சனத்தொகையில் 10 பேரில் 9 பேர் உயிர் வாழ்வதற்கு பொருத்தமான வளியோட்டம் அற்ற சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர். புதிய கண்டுபிடிப்புகளுக்கமைவாக அசுத்தமான காற்றை சுவாசிப்பதனால் உலகளாவிய ரீதியில் வருடாந்தம் சுமார் 7 மில்லியன் மக்கள் உயிரிழப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுள் சுமார் 4 மில்லியன் மக்கள் ஆசிய பசுபிக் வலய நாடுகளை சேர்ந்தவர்களென அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இதனாலேயே 'வளி மாசடைதல்' ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் செயற்திட்டத்தின் இவ்வருட சுற்றாடல் தின தொனிப்பொருளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இயற்கையாகவே மரங்கள் வளிமாசடைதலைக் கட்டுப்படுத்தும் தன்மையை கொண்டிருப்பதனால் நாட்டில் சிறந்த சூழலை ஏற்படுத்துவதற்கு வனப் பரம்பலை சிறந்த முறையில் பேண வேண்டியது முக்கியமானதாகும். இதனாலேயே இலங்கையில் இவ்வருடம் சுற்றாடல் தினமானது 'பேண்தகு வன முகாமைத்து வத்தின் ஊடாக வளி மாசடைதலைக் குறைத்தல்' எனும் தொனிப்பொருளில் கடைப்பிடிக்கப்படுகின்றது. (ஒ.5)

# எங்களின் பொறுமை எல்லை தாண்டுகிறது

## முஸ்லிம் பிரதிநிதிகள் அரசிலிருந்தும் வெளியேற வேண்டும் என்கிறார் ஹசன் அலி

அம்பாறை, ஜூன் 5

முஸ்லிம் மக்கள் நொந்து நொடிந்து விரக்தி நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளதுடன், முஸ்லிம்களின் பொறுமையும் எல்லைதாண்டிப் போய்க்கொண்டிருக்கின்றது. சகல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசை விட்டும் வெளியேறி, எதிர்த்தரப்பில் ஒரே அணியாகத் தனித்துவத்துடன் செயற்பட உடனடியாக முன்வர வேண்டும்.



இவ்வாறு, ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் செயலர் நாயகமும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹஸனலி தெரிவித்தார்.

முஸ்லிம் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் கூண்டோடு பதவி விலகியமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்சமயம் இந்த நாட்டு முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள நிலமை பெரும் கவலையுடன் குருதிக் கண்ணீர் வடிக்கும் நிலைக்கும் தள்ளியுள்ளது. நடக்கும் சம்பவங்களாலும், முஸ்லிம்களென்ற காரணத்துக்காக முன்னெடுக்கப்படும் இனவெறிச் செயல்கள் காரணமாகவும், முஸ்லிம் மக்கள் நொந்து நொடிந்து விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுமுள்ளனர். அதே வேளை முஸ்லிம்களின் பொறுமையும் எல்லை தாண்டிப்போய்க் கொண்டிருக்கின்ற நிலையுமுள்ளது.

நாம் என்ன ஐ.எஸ். பயங்கரவாதி ஸஹ்ரானுக்கு ஆதரவாக நின்றோமா? இல்லையே. அப்படியிருக்க ஏன் இன்று முஸ்லிம் சமூகத்தை வதைத்து, வாட்டமுனைந்துள்ளனர்? முஸ்லிம்களின் உண்மை நிலமையைப் புரிந்து கொண்டு செயற்பட்ட பெருமகனாக நாம் மல்கம் ரஞ்சித் ஆண்டகையையே காண்கிறோம். முஸ்லிம் சமூகம் அவரை என்றுமே மறந்து விட முடியாது.

ஆனாலும் இன்று சிலர் மனச்சாட்சியையே விற்று, புடவைக்கு மேல் சொறிவது போலும் நடந்து கொள்வது வருத்தமளிப்பதாகவுள்ளது. இதனால் தான் முஸ்லிம்களை இலக்குவைத்து சில நிகழ்ச்சி நிரல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்று அடித்தவன் வெளியேறிவிட்டான், அடிபட்டவன் உள்ளேயிருக்கிறான். இந்த நிலைப்பாட்டிலேயே சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன். இனவெறி பிடித்த பேரினவாதத்தின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் முடியுமட்டும், முஸ்லிம் சமூகத்தின் மீதான வீண்பழி தொடரவே செய்யும்.

இவற்றையெல்லாம் அடியொற்றியதாக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியரத்ன தேரரின் உணவு ஒறுப்புப் போராட்டம், இந்த நாட்டில் பெரும்பான்மை சமூகம், சிறுபான்மை சமூகங்களை எவ்வாறு கையாள்கிறது என்பதற்குப் பெரும் எடுத்துக்காட்டாகவே அமைந்துள்ளது.

சுதந்திரம் கிடைத்த போது சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அரசமைப்பின் 29 ஆவது சரத்தை பிரிட்டிஸ் அரசு புகுத்தியது. ஆனால் இந்தச் சரத்தில் கைவைத்து வைத்து இன்று எங்கோ போய் நிற்கின்றது. சட்டங்கள் தெளிவாக இருக்க வேண்டும். இந்த நிலை மாறி நடக்கும் சம்பவங்களைப் பார்த்தால் இன்று பெரும்பான்மையினருக்கு ஒரு சட்டமும், சிறுபான்மை முஸ்லிம்களுக்கு ஒரு சட்டமும் நடைமுறைப்படுத்துவதான சந்தேக நிலைப்பாடே தென்படுகின்றது.

இந்த இக்கட்டான, நொந்து நொடிந்து போயுள்ள நிலையிலுள்ள முஸ்லிம் மக்களும் வகை சொல்ல வேண்டிய நிலமைகளுக்கு அரசுடனிருக்கும் மற்றும் சகல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களே பொறுப்பேற்கவேண்டும். முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக அரசிலிருந்து வெளியேறுவதுடன், சகல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஓரணியாக எதிர்தரப்பிலிருந்து தனித்துவமாக செயற்பட முன்வர வேண்டும்.

முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள இன்றைய அவல நிலையை எடுத்துக்காட்டவும், ஏன் பன்னாட்டுச் சமூகத்தின் பார்வையையும் எம்பக்கம் திரும்புவதற்காகவும் இந்த செயற்பாடு வழிவகுக்கும் - என்றார். (ஒ.5,30)

# ஞானசாரரின் விடுதலைக்காக குரல் கொடுத்த முஸ்லிம் தலைமைகள் அதன் பிரதிபலனை அனுபவிக்கிறார்கள்

## சாடுகிறார் மனோகணேசன்

கொழும்பு, ஜூன் 5

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக விசாரணைகளின்றி சிறைகளில் வாடும் தமிழ் இளையோரின் விடுதலைக்காக குரல் கொடுக்காத முஸ்லிம் தலைமைகள் குறிப்பாக அசாத் சாலி மற்றும் ஹிஸ்புல்லா போன்றவர்கள், ஞானசார தேரரின் விடுதலைக்காக குரல் கொடுத்தார்கள். இன்று அதன் பிரதிபலனைக் கண்டு கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கலந்தாலோசனையின் போது, முஸ்லிம் அமைச்சர்கள் ஒட்டுமொத்தமாக பதவி விலகப்போவதாக அறிவித்தார்கள். அதை நானும், அமைச்சர் மங்கள சமரவீரவும் ஏற்றுக்கொள்ள மறுத்தோம். இது இனவாதிகளுக்குப் பணிந்து இடம் கொடுக்கும் ஒரு பிழையான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என நாம் கூறினோம். முஸ்லிம் அமைச்சர்கள் தம் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார்கள்.

அங்கே பேசும்போது நான் ஒரு விடயத்தை சொன்னேன். இன்று காலை, பொலிஸ் புலனாய்வு துறைக்கு பொறுப்பாக உள்ள மூத்த பிரதி பொலிஸ் மாஅதிபர் ரவி செனவிரத்னவுடனும், அதே புலனாய்வு துறையின் பணிப்பாளர் சானி அபேவிக்கிரமவுடனும் நான் உரையாடினேன். அமைச்சர் ரிசாத் உள்பட முஸ்லிம் அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டுகள் இருப்பதாகவும், அவற்றை நீங்கள் விசாரிக்கவில்லை எனவும் எதிரணியினரும், பல பௌத்த துறவிகளும் கூறுகிறார்கள். உங்கள் நிலைப்பாடு என்ன என கேட்டேன்.

அமைச்சர் ரிசாத் மீது இங்கே வந்து எம்மிடம் முறைப்பாடு செய்பவர்கள் எவரும் அவருக்கு எதிரான சாட்சியங்கள் எதையும் முன்வைக்கவில்லை. அவர்கள் எம்மிடம் தந்துள்ளது வெறுமனே முறைப்பாட்டுக் கடிதங்கள் மட்டுமே. அவற்றை வைத்துக்கொண்டு எவரையும் எம்மால் கைது செய்யவோ, விசாரணைக்கு அழைக்கவோ, வாக்குமூலம் பெறவோ முடியாது. அவற்றில் ஒன்றும் இல்லை. இங்கே வந்து இப்படியான கடிதங்களைத் தருபவர்கள், வெளியே போய் ஊடகங்களிடம் வீராவேசமாக கதைக்கிறார்கள். ஆனால், இப்படிக்கதைப்பவர்கள் முதலில், கைதுசெய்ய, விசாரிக்க உருப்படியான தடயங்களைத் தர வேண்டும். எங்களிடம் எதுவும் தரப்படவில்லை. எங்களால் எந்த ஒரு முஸ்லிம் அமைச்சருக்கு எதிராகவும் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது, என்று என்னிடம் கூறினார்கள்.

முஸ்லிம் அமைச்சர்கள் மீது முறைப்பாடுகளும், சாட்சியங்களும் இருக்குமானால், நடவடிக்கை எடுங்கள். இல்லாவிட்டால் எந்த ஒரு சாட்சியமும் இல்லை என்று அறிவியுங்கள். ஜூலை முதலாம் திகதிவரை காலக்கெடு வழங்குகின்றேன் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும் என நான் யோசனை கூறியுள்ளேன். இதை கலந்துரையாடலில் கலந்துகொண்ட அமைச்சர்கள் மங்கள சமரவீர, ரவி கருணாநாயக்க, சம்பிக்க ரணவக்க ஆகியோரும் கூறினார்கள். இன்று முஸ்லிம் அமைச்சர்களை பதவி விலக கூறி ஊர்வலம் போய், ஆர்ப்பாட்டம் செய்து, உபவாசம் இருக்கும் பௌத்த துறவிகள் நாளை மீண்டும் ஒரு முறை, தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதிராகவும், பிறகு தமிழ்சிங்கள கத்தோலிக்க அரசியல்வாதிகளுக்கு எதிராகவும், பின்னர் தாம் விரும்பாத சிங்கள பௌத்த அரசியல்வாதிகளுக்கு எதிராகவும், அவர்களை பதவி விலக்க கூறி சிங்கள மக்களை தூண்டி விட்டு குரல் எழுப்புவார்கள். இந்த பேரினவாதிகளுக்கு ஆதரவாக மறந்தும் போய் எவரும் ஆதரவு தெரிவித்துவிடக்கூடாது. இது மோசமான முன்னுதாரணம் ஆகிவிடும் என்று நான் ஏற்கனவே கூறியுள்ளேன்.

இந்தப் பேரினவாத இயக்கத்துக்கு அரசியல்ரீதியாக ஒரு முடிவு காணப்பட வேண்டும். இல்லாவிட்டால், இந்நாட்டின் அனைத்துத் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளும் வீதிக்கு வர வேண்டிய நிலைமை விரைவில் ஏற்படும் - என்றார். (ஒ.5)



# இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் பேச்சில் மங்கலத் தன்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி ஏற்படும்; உபரி பணவருமானம் கிடைக்கும். குடும்ப உறுப்பினர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**இடபம்:** சிறிய செயலும் கடினமாகத் தோன்றலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கையைத் தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பயன் அறிந்து வெளியூர்ப்பயணம் மேற்கொள்ளவும்.

**மிதுனம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபார முன்னேற்றத்துக்குத் தகுந்த மாற்றம் செய்வீர்கள். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாக இருக்கும்.

**கடகம்:** செயல்களில் கவனச் சிதறல் ஏற்படலாம்; மனைவியின் ஆலோசனை நன்மை பெற உதவும். தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும். வரவை விடச் செலவு அதிகரிக்கும்.

**சிம்மம்:** நல்லவர்களின் நட்பு மனநிறைவைத் தரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்பட்டு, தாராள பணவரவு கிடைக்கும். மனைவி ஒற்றுமையுடன் நடப்பார்.

**கன்னி:** ஒவ்வொரு செயலிலும் உங்களின் தனித்திறமை வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் ஏற்படும் திடீர் வளர்ச்சி மன மகிழ்வைத்தரும். உபரி பணவருமானம் கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** நிதானித்துச் செயற்படுவது நல்லது. நண்பர்களிடம் வீண் விவாதங்களில் ஈடுபடக் கூடாது. தொழில், வியாபாரத்தில் வழக்கத்தை விட பணிச்சுமை அதிகரிக்கும். சீரான அளவு பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** நீங்கள் உணர்ச்சி வசப்படும் சூழல் ஏற்படலாம். குடும்ப விடயங்களைப் பிறரிடம் விவாதிக்க வேண்டாம். கடின உழைப்பு தொழில், வியாபார வளர்ச்சிக்கு உதவும்.

**தனுசு:** விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் உருவான இடையூறு விலகும். உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். உபரி பணவருமானம் கிடைக்கும்.

**மகரம்:** உங்களின் தனித்திறமையை நண்பர் பாராட்டுவர். முயற்சிக்கு உரிய பலன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபாரம் செழித்து மன நிறைவை உருவாக்கும்.

**கும்பம்:** செயல்களில் ஒருமுகத்தன்மை அவசியம். தொழிலில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும். குடும்பச் செலவுகளுக்குச் சேமிப்புப் பணம் பயன்படும்.

**மீனம்:** சிலர் உங்களுக்கு நெருக்கடி நிலையை உருவாக்குவர். தொழில், வியாபாரம் செழிப்பதற்குக் கூடுதல் நேரம் பணி புரிவீர்கள். உறவினர் ஆதரவு மனதில் நம்பிக்கையை வளர்க்கும்.





பிரிட்டனுக்குப் பயணம் மேற்கொண்டிருக்கின்ற அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பிரிட்டனின் மகாராணியைச் சந்தித்தார். மகாராணியுடன் பேச்சுக்களில் ஈடுபட்ட அவர், மகாராணியின் இல்லத்தில் நடந்த விருந்துபசாரத்திலும் பங்கு கொண்டார்.

# போராட்டக்காரர்கள் மீது சூடு சூடானில் 13 பேர் சாவு

## ஐ.நா.கண்டனம் தெரிவிப்பு

கர்த்தூம், ஜூன் 5

மக்கள் ஆட்சியைஏற்படுத்தவலியுறுத்திச் சூடானில் போராட்டம் நடத்தியவர்கள் மீது அந்த நாட்டு இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதனால் 13 பேர் சாவடைந்தனர். இதற்கு ஐக்கிய நாடுகள் சபை தனது கண்டனத்தைத் தெரிவித்தது.





சூடானின் தலைநகர் கர்த்தூமில் உள்ள இராணுவத் தலைமையகத்துக்கு முன்பாக நடந்த போராட்டத்தின்போதே இவ்வாறு போராட்டக்காரர்கள் மீது சூடு நடத்தப்பட்டது. சுமார் ஒரு வார காலம் வரையில் குறித்த இராணுவ முகாமுக்கு முன்பாகப் போராட்டம் நடந்து வந்த நிலையிலேயே போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடுநடத்தப்பட்டது. இதில், ஒரு குழந்தைஉள்ளிட்ட 13 பேர்கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

அத்துடன் தலைநகர் கர்த்தூமில் உள்ள அனைத்து இடங்களிலும் இருந்து போராடியவர்கள்விரட்டியடிக்கப்பட்டனர். அந்த இடங்களில் ஏராளமான அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டனர்.

போராட்டக்காரர்களைஒடுக்குவதைச் சூடான் இராணுவம் நிறுத்த வேண்டும் என அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் வலியுறுத்தி உள்ளன. அத்தோடு ஐக்கியநாடுகள்சபையும் சூடான்இராணுவத்தினரின் செயலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

**பின்னணி**

சூடான் நாட்டில் அந்த நாட்டு அதிபருக்கு எதிரான போராட்டம் உச்சமடைந்த நிலையில், இராணுவப்புரட்சி காரணமாக ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதிபர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். புதிய அதிபராக அந்த நாட்டு இராணுவத் தளபதி பதவியேற்றார். மக்களின் எதிர்ப்புக்காரணமாகஓரிருநாள்களில் அவர் பதவியைத் துறந்தார். பின்னர் மக்களாட்சியை ஏற்படுத்த வலியுறுத்தினர். இது தொடர்பாகப் போராட்டக் குழுவினருக்கும் இராணுவத்துக்கும் இடையே நடந்த பேச்சுக்களில் தீர்வு எட்டப்படவில்லை. அந்தநாட்டுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.



# ஆஸியில் துப்பாக்கிச் சூடு 4பேர்சாவு - 2 பேர்காயம்

சிட்னி, ஜீன் 5

ஆஸ்திரேலியாவில் இனம் தெரியாத நபர் ஒருவர் நடத்தியதுப்பாக்கிச்சூட்டில் 4பேர் சாவடைந்தனர். ஆஸ்திரேலியாவின்வடக்குப்பகுதியில் அமைந்தடார்வின்நகரில் இந்தச் சம்பவம் நடந்தது. இந்தச் சூட்டில் 2 பேர் காயமடைந்தனர். குறித்த நகரிலுள்ள விடுதி ஒன்றுக்குள் துப்பாக்கியுடன் புகுந்த நபரே இந்தத் தாக்குதலை நடத்தினார். குறித்த விடுதியிலிருந்த ஒவ்வொரு அறைகளுக்குள்ளும்புகுந்து அவற்றுக்குள் எவரேனும் இருக்கிறார்களா என்றுகவனித்துக்கவனித்துச்சுட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டவரான 45 வயதுடைய குறித்த நபரைக் கைது செய்த பொலிஸார் அவரைவிசாரணைக்குட்படுத்தினர். இந்தத்தாக்குதல் சம்பவம் குறித்து ஆஸ்திரேலியாவின் தலைமை அமைச்சர்ஸ்கொட்மோரிசன் கூறும்பொழுது, இதுதீவிரவாதத்துடன்தொடர்புடையதாக்குதல் அல்லஎன்றார்.

ஹிந்தி மொழிக் கல்வி விவகாரம்

# திணிப்பும் தவறு - எதிர்ப்பும் தவறு இந்தியத்துணை அதிபர்தெரிவிப்பு

புதுடெல்லி, ஜூன் 5

ஹிந்திமொழியைக்கட்டாய பாடமாகப் பரிந்துரை செய்தமைஇந்தியமாநிலங்களில் எதிர்ப்புகளைச் சம்பாதித்து வரும் விடயமாக இருக்கிறது.

இந்த நிலையில் ஹிந்தி மொழியை எதிர்ப்பதும் தவறு அதைத் திணிப்ப தும் தவறு என்றார் இந்தியத்துணை அதிபர் வெங்கய்ய நாயுடு.

ஆந்திர மாநிலத்திலுள்ள திருப்பதி காதங்கிப் பகுதியில் உள்ள தேசிய சுற்றுச்சூழல் பரிசோதனை மையத்தில் சென்று ஆய்வுகளை மேற்கொண்ட பின்னரே அவர் இவ்வாறு செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

“மக்களின் அன்றாட வாழ்வு மேம்படும்வகையில்விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொள்வது அவசியம். மக்களின் ஆரோக்கியம், நாட்டின் அமைதி ஆகியவற்றின் மீது கவனம் செலுத்த வேண்டும். இயற்கையைப் பாதுகாக்கத் தவறியதால்தான் மழை குறைந்து, வேளாண் உற்பத்தியும் குறைந்து வருகிறது. நாடு சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள் ஆன பிறகும் 20 சதவீதம் பேர் வறுமையில் உள்ளனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகமாகவே உள்ளது.

இதற்கு மக்களின் உழைப்புத்தான் காரணம். கற்றுக்கொள்வது என்பது நம் வாழ்க்கையின் ஓர் அங்கம். இதைஎதிர்ப்பது சரியல்ல. அதேநேரம் ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் எனத்திணிப்பதும் சரியல்ல” என்றார்.

புதன் பொய்கை
உதயன்
UthayanPrint
ஜூன் 05, 2019

இரு கரங்களைக் கூப்பி
கடவுகளைத்
தொழுவதை விடவும்
ஒரு கையை நீட்டி
உதவி செய்வது
மேலானது

**அன்னை திரேசா**

# லவென், குசன்

## இராம கதையில் இழையோடும் பாத்திரப் படிமங்கள்

இராமபுரத்தூர் நிஷாந்தன்

இராமாயணம் எனும் இதிகாசத்தில் இழையோடுகின்ற பாத்திரக் கூறுகளில், லவன் மற்றும் குசன் எனும் இரு ஆத்மார்த்தமான பாத்திரப் படிமங்கள் இடம்பெறுகின்றன. யார் இந்த லவனும் குசனும் என்றால் அவர்கள் வேறு யாருமல்லர். இராமன் மற்றும் சீதை ஆகியோரின் பிள்ளைகளே இந்த லவன், குசனாவர். ஆம். இராமாயண காவியத்தில் லவ, குசன் வரலாற்றைக் கூறுவதற்கு என்றே உத்தரகாண்டம் எனும் ஓர் பகுதி அமைவுற்றுள்ளதை நாம் காண முடிகின்றது. ஆக லவன் குசன் பற்றி நாம் இதுவரை அறிந்திராத சில சிறப்பம்சங்களை இங்கு கண்ணுறுவோம்.

**லவன் மற்றும் குசனின் பிறப்பு**

இராவணவதம் முடிந்து சீதையை சிறை மீட்ட இராமபிரான் அயோத்தி திரும்பி மன்னனாக முடிசூடினான். சில் காலம் இராமனும், சீதையும் இல்லறம் தனிலே மகிழ்வோடு இருந்தனர்.

இந்த நிலையில் விதி வசத்தால் அயோத்தி வாழும் மக்கள் இராமன் மீது பழி சுமத்தவே, அதனால் ஏற்பட்ட களங்கத்தைப் போக்கிடவே அரச நியதியின் படி சீதையைத் தன் நாட்டிலிருந்து நீக்கி அவளைக் காட்டில் கொண்டு சென்று விடுமாறு தம்பி இலக்குவனுக்கு ஆணையிட்டான்.

இலக்குவனும் அண்ணன் ஆணை ஏற்று சீதாப் பிராட்டியாரைக் கடும் வனத்திடையே தனித்து விட்டு மீண்டான். அவ்வேளை சீதையே கர்ப்பிணியாக இருந்தாள். வனத்திலே கடவுள் சித்தமாக வால்மீகி முனிவர் சீதையைக் கண்ணுற்று அவளைத் தன் ஆச்சிரமத்தில் அடைக்கலமாக்கிப் பாதுகாத்து வந்தார். அங்கேதான் சீதை லவன் மற்றும் குசன் எனும் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். ஆனால் சில இடங்களில் சீதை முதலில் ஒரு பிள்ளையை மட்டுமே பெற்றாள் எனவும் அப் பிள்ளை குசன் எனவும், வால்மீகி முனிவர் தன் தவ வலிமையால் உருவாக்கிய குழந்தை லவன் எனவும் கதையாடல்கள் அமையப் பெறுகின்றன. எது எப்படி இருப்பினும் லவன் மற்றும் குசன் ஆகிய இருவரும் சீதையின் தவப் புதல்வர்களாக அந்தக் காட்டிலேயே வளர்ந்துவருகின்றனர். சீதையோ இராமரே அவர்களின் தந்தை என்பதையோ, தானே சீதை என்கின்றஉண்மையினையோ குழந்தைகளுக்கு வெளிப்படுத்தாமல் அவர்களை அன்புருக வளர்த்து வந்தாள்.

**லவ குசன் கல்வி மற்றும் கலைகளைக் கற்றல்**


லவ குசனவர் கல்விப்பருவத்தை எட்டியதும் வால்மீகி முனிவர் அவர்களுக்கு குருவாக இருந்து சகல கலைகள், மற்றும் கல்வி ஞானங்களை உபதேசித்தார். இராமன் மற்றும் சீதையே லவ குசனரின் தந்தையும், தாயும் என்பதை அவர்களுக்கு கூறாமல் இராமனது வரலாற்றினை முழுமையாக அவர்களுக்கு சொல்லிக் கொடுக்கின்றார். இவ்வாறு வால்மீகி முனிவரிடம் கல்வி கற்றமையால் சிறு வயதிலே சகல கலைகளிலும் ஆற்றல் பெற்றவர்களாக திகழ்ந்தனர் லவனும், குசனும்.

இது மட்டுமல்ல, சீதையும் அவர்களுக்கு குருவாக இருந்து அறிவுரைகளை கூறி அவர்களை நல்வழிப்படுத்தினாள். லவனும், குசனும் தாயின் அறிவுரைகளையும் கேண்மையுற்று அதன்படி செயலாற்றியும் வந்தார்கள்.

**லவ குசன் தாயின் மீது கொண்ட பேரன்பு**

இவ்வாறு வனத்திடையே தம் அன்னை சீதையின் அரவணைப்பில் வளர்ந்து வந்தனர் லவனும், குசனும். தம் தாய் மீது அளவு கடந்த அன்பைப் பொழிந்தனர். தாய் சொல் மிக்க மந்திரமில்லை எனும் படிக்கு தாயின் சொல்லும் வார்த்தைகளைக் கேண்மையுற்று செயலாற்றினார்கள். அதுபோக சகோதரர்கள் இருவரும் ஒற்றுமையோடு ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழந்து வந்தனர்.

சில சமயங்களில் தாயே தஞ்சமென அவள் மடி தனில் அடைக்கலமாவர். சீதையானவள் புரியும் வேலைகளுக்கு உதவியாக இருவரும் இருந்திடுவர். இது கண்ட சீதையும் அக மகிழ்ந்து தம் குழந்தைகள் இருவரையும் ஆரத் தழுவி முத்தமிடுவாள்.



**அயோத்தியின் அரச சபையில் இராம சரிதத்தை அரங்கேற்றுதல்**

ஒரு முறை வால்மீகி முனிவர் லவ குசனரை அழைத்து, அவர்கள் கற்றுக் கொண்ட இராம சரிதத்தை அயோத்தியின் அரச சபை சென்று அங்கு பாடலாகவும், கதையாகவும் கூறி வரும்படி கட்டளையிட்டார். குருதேவரின் ஆணையை ஏற்று தம் தாயின் ஆசியுடன் லவனும் குசனும் அயோத்திக்குச் சென்றனர். அங்கு நிறைந்த சபை தனிலே இராம சரிதத்தை பாடத் தொடங்கினர். அவர்களது பாடலையும், கதையையும் அங்கிருந்தோர் மெய்மறந்து கேண்மையுற்றனர். ஆனால் இராம கதையைப் படித்து முடிக்கும் போது கர்ப்பிணியாக இருந்த சீதையை இராமன் தனியே காட்டிற்கு அனுப்பி வைத்தமை பெருந் தவறாகும் என்பதை லவனும், குசனும் கோபத்துடனும், கவலையுடனும் அங்கு வெளிப்படுத்தினர். இது கேட்ட இராமனும் எதுவும் கூறிட முடியாது திகைத்திருந்தான். இவ்வாறு இராம சரிதத்தை சிறப்புற அரங்கேற்றி அங்கிருந்தோர் அனை வரது பாராட்டுக்களையும் பெற்று மீண்டும் தாயிடம் வந்து சேர்ந்தனர் லவனும் குசனும்.

ஒரு முறை இராமன் தன் அயோத்தி நாட்டின் செழிப்பிற்காக அஸ்வமேத யாகம் ஒன்றை மேற்கொண்டான். அந்த யாகத்தின் நியதியாக யாகத்தில் முதன்மை பெறுகின்ற குதிரையினை பல நாடுகளுக்கும் ஊர்வலமாக அனுப்பி வைப்பது வழக்கம். அந்தக் குதிரை எங்கெல்



லாம் செல்கின்றதோ அந்த இடமெல்லாம் யாகம் புரியும் அரசனுக்கே சொந்தமாகும்.

மாறாகக் குதிரையை யாராயினும் சிறைப்பிடித்தால் அவர்கள் யாகம் செய்யும் அரசனோடு போர் செய்திட வேண்டும். இது இவ்வாறிருக்க. இராமனது அஸ்வமேத யாகத்தின் குதிரையானது ஒரு கட்டத்தில் லவ குசன் வசித்து வந்த வனத்திடையே வந்து விட்டது. குதிரையின் கழுத்தில் பட்டயம் ஒன்றும் தொங்க விடப்பட்டிருந்தது.

குதிரையைக் கண்ணுற்ற லவ குசனவர்கள் அதன் கழுத்தில் கட்டியிருந்த பட்டயத்தில் எழுதப்பட்டிருந்ததை படிக்கத் தொடங்கினர்.

இந்தக் குதிரை அயோத்தி அரசன் இராமனது அஸ்வமேத யாகத்தின் குதிரை எனவும். குதிரையை யாவர் சிறைப்பிடிக்கின்றனரோ அந்தச் செயல் அயோத்தி மன்னன் இராமனை தம்மோடு யுத்தம் புரிவதற்கு அறை கூவல் விடுப்பதாகும் எனவாறு எழுதப்பட்டிருந்தது. இதைப் படித்த லவனும், குசனும் குதிரையை சிறிதும் அச்சமின்றி சிறைப்பிடித்து தாம் வசிக்கும் ஆச்சிரமத்தின் அருகில் கட்டி வைத்தனர்.

**லவ குசனவர் அயோத்தியின் மாவீரர்களை தோற்க்கடித்தல்**

இந்த நிலையில் தாம் அனுப்பி வைத்த அஸ்வ மேத யாகத்தின் குதிரையானது நீண்ட நாள்கள் கடந்தும் மீண்டும் நாடு திரும்பி வராமை கண்ட இராமபிரான். அது குறித்து அறிந்து வரும்படி தன் இளைய தம்பியாகிய சத்ருக்கனை அனுப்பி வைத்தான்.

அதன்படி பெரும் படையோடு குதிரையைத் தேடி வந்த சத்ருக்கனன் வால்மீகி முனிவரின் ஆச்சிரமத்திற்கு அருகில் கட்டப்பட்டிருப்பதையும். அதன் அருகில் லவ குசனவர் நிற்பதையும் கண்டு அவர்களிடம் குதிரையைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு வேண்டினான்.

ஆனால் அதனை லவனும் குசனும் மறுத்து விடவே சத்ருக்கனன் அவர்களோடு போர் புரியலானான். ஆயினும் லவ குசனவரின் ஆற்றலுக்கு முன்பாக சத்ருக்கனும் அவன் படையும் தோல்வியத் தழுவியது. அடுத்து இராமன் தன் இன்னொரு தம்பியான இலக்குவனை குதிரையை மீட்டுவர அனுப்பினான். ஆனால் இலக்குவனுக்கும் தோல்வியே கிடைத்தது.

இவ்வாறு பரதன், சுக்ரீவன், விபிஷணன் என மாவீரர்கள் எல்லோரும் லவ குசனுடன் போரிட்டு வரிசையாக தோல்வியைத் தழுவினர். அடுத்து இராம பக்தன் அனுமன் யாகத்தின் குதிரையை மீட்டுவர வனம் வந்தடைந்தார். அங்கு அனுமன் வேண்டியும் லவ குசன் குதிரையை ஒப்படைக்க மறுக்கவே அனுமனும் அவர்கனோடு போர் புரிய வேண்டிதாயிற்று. ஆனால் லவ குசனவர்களின் போர் ஆற்றல் கண்டு திகைப்படைந்த அஞ்சனை மைந்தன் அனுமன் தன் தெய்வீக ஆற்றல் துணை கொண்டு தான் வணாங்கும் இராமன், மற்றும் சீதையின் பிள்ளைகளே இந்த லவ, குசன் என்பதை உணர்ந்து கொண்டார்.

இருப்பினும் தன் வலிமையை அவர்களிடம் வெளிப்படுத்தாது தானும் அவர்களிடம் தோல்வியைத் தழுவியதைப் போல நடித்தார். அனுமனும் தோல்வியடைந்ததை அறிந்த இராமபிரான் தானே யாகத்தின் குதிரையை மீட்டு வர வனம் நோக்கிப் புறப்பட்டார். அதன்படி லவ குசன் இருக்கும் இடத்தை அடைந்த இராமன் லவ குசனவர் தம் பிள்ளைகள் என்பதையும். லவ குசன் இராமனே தம் தந்தை என்பதையும் அறியாதவர்களாக போரிட்டனர். இத்தகு அசம்பாவிதத்தை உணர்ந்து கொண்ட வால்மீகி முனிவர் அவர்களிடையே குறுக்கிட்டு போரினை நிறுத்தினார். பின் லவ குசன் குறித்த உண்மை நிலையை இராமனுக்கு கூறினார்.



**லவனும். குசனும் தம் தந்தை. தாய் குறித்த உண்மை நிலை அறிதல்**

வால்மீகி முனிவர் வாக்கின் படி இராமபிரான் தம் தந்தை என்பதை லவனும் குசனும் அறிந்து கொண்டனர். அது போக தம் தாயே சீதை என்பதையும் அறிந்தனர்.

தாம் புரிந்த செயலுக்குத் தந்தையாகிய இராமனின் பாதங்களில் வீழ்ந்து மன்னிப்பு வேண்டினர்.

இராமனும் தன் புதல்வர்களை எடுத்து மார்போடு அணைந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

இந்த நிலையில் சீதையும் அவ்விடம் வந்தடைந்தாள்.

இராமனைக் கண்டு பேரானந்தம் அடைந்த சீதாப்பிராட்டி லவன் மற்றும் குசனை இராமனிடம் ஒப்படைத்து விட்டு அக்கணமே தன் அன்னை பூமா தேவியை அழைத்து அவளோடு பூமிக்குள் சென்று மறைந்துகொண்டாள்.

இதன் பின்பு இராமனும் தன் புதல்வர்களை அயோத்திக்கு அழைத்து சென்றார்.

இதுவே லவ. குசனின் அற்புதமான வரலாறாகும். படிக்கும் போது இன்பம் தரும் வரலாறல்லவா இது.





கே.எஸ்.சிவஞானராஜா

# இவர்களால் முடியாதா?

இலங்கை ஒரு அழகான நாடு மாத்திரமல்ல அதிசயமான நாடும் கூட! அதை விடமேலுமொரு சிறப்பு யாதெனில் அதற்கு சிவபூமி என்ற பெயரும் உண்டு. அத்தகு சிவ வல்லமையும் தவ வலிமையும் கொண்ட இலங்கையில் காலத்தின் கோலமறிந்து மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. பழைமையைக் கொண்டாடுகின்ற பழைமைவாதிகள் கூட நவீன சிந்தனைவாதிகளாக மாறி சிவமயமான சகவாழ்வைக் கட்டியெழுப்பியுள்ளார்கள்.

இந்த நிலையில் தென்மராட்சியில் அருள்பாலிக்கும் வரணி வடக்கு சிமிழ் கண்ணகை அம்மன் ஆலய வழிபாட்டில் அனைவருக்கும் சமத்துவம் வேண்டியும், வருடாந்தம் திருவிழா நடைபெறுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் மேற்படிக் கோவிலில் சத்தியாக்கிரகப் போராட்டம் இடம்பெற்றுள்ளது. சரி, பிழை ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் அது ஒரு தனிப்பட்ட கோவிலாக இருக்குமாயின் அது ஏகபோக உரிமையையும் கொண்டிருக்குமாயின் அதில் பிறர் தலையிட எந்தவித தாற்பரியமும் இருக்க வாய்ப்பில்லை.



அது ஒரு பொதுக்கோவிலாக இருக்குமாயின் அங்கே சமத்துவம் என்பது ஒரு பொது வான சட்டமாகிறது. அடியவர் எவராயினும் உரிய நேரத்தில் உரிய ஆசாரத்தோடு உடை நடை பாவனைகளை மீறாவண்ணம் வழிபடலாம். இறைவன் அடியவர் எவராயினும் எல்லோரையும் சமமாகவே அரவணைக்கின்றான். அவன் ஆண்டியாக இருந்தா லும் அரசனாக இருந்தாலும் பட்டம் பதவி பெற்றிருந்தாலும் ஆலயத்தின்முன் அனைவருமே சமமாகவே கருதப்படுகிறான். யாரையும் ஒதுக்கவோ ஒடுக்கவோ முடியாது. இது இவ்வாறு இருக்கும்போது ஒரு சாராரின் நிலைப்பாட்டுக்காக திருவிழாவையே நிறுத்துவது ஏற்புடையதல்ல. தலையிடாமல் மௌனமாயிருப்பது ஏற்புடையதல்ல. இவர்களால் முடியாதா? இப்பிரச்சினையை வளரவிடுவது எம்மண்ணுக்கு அழகல்ல!



## சமாதான நீதிவான்

யாழ்ப்பாணம், ஜூன் 5 மாகாண மேல் நீதி மன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் ப.ஜோயல் பியசீலன் அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் பதவியேற்றார். இவர் கிளிநொச்சி இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் அதிபராவார். அத்துடன் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

# சயனைட் கலாசாரத்துக்கு வித்திட்ட தியாகி பொன் சிவகுமாரன்

சி.தவராசா


எதிரியின் கைகளில் சித்திரவதைக்குள்ளாவதனை விட தன்னுயிரை தானே மாய்த்துக்கொள்வதே சிறந்தது எனும் நோக்கில் சயனைட் அருந்தி தன்னுயிரை மாய்த்துக்கொண்ட தியாகி பொன் சிவகுமாரின் 45ஆவது நினைவு தினம் இன்றாகும். இந்த நாள் இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் கறைபடிந்த நாளாகக் காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தை இறுதியாக ஆண்ட ஏழாம் செகராசசேகரன் சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரினால் சிறைபிடிக்கப்பட்டதும் இன்றைக்கு 400 வருடங்களுக்கு முன் ஜூன் 5ஆம் திகதி என்றே கூறப்படுகிறது. அது திதிக் கணக்கீட்டின்படி வைகாசி பொர்ணமியில் இருந்து எட்டாவது நாளாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. இலங்கைப் நாடாளுமன்றத்தில் தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் தமிழர்களின் சமத்துவத்தை இந்த நாட்டில் இல்லாமல் செய்ததும் 1956ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதியில் தான்.

உரும்பிராயில் பொன்னுத்துரை அன்னலட்சுமி தம்பதியினரிற்கு 1950ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 26ஆம் திகதி நான்காவது புதல்வனாக உதித்த சிவகுமாரன் செல்லமாக 'திரவியம்' என எல்லோராலும் அழைக்கப்படுவார். ஜனநாயகப் பாரம்பரிய வழியில் எமது உரிமைகளை வென்றெடுக்க எடுத்த முயற்சிகள் பயனளிக்காத நிலையில். ஆயுதப் போராட்டத்தின் மூலமே அதனை அடைய முடியுமென்று 1970களிலேயே ஆயுதப் போராட்டத்துக்கான வித்தினை இட்டவர் தியாகி சிவகுமாரன். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமென்பது பரிணாம வளர்ச்சி. அந்தப் பரிணாம வளர்ச்சியில் ஆயுதப்போராட்டமென்ற திருப்பு முனையின் வித்தகர் சிவகுமாரன் என்றால் அது மிகையாகாது. சிவகுமாரனின் இறப்பின்போது ஏற்பட்ட அதிர்வலைகள் பல்லாயிரக் கணக்கிலான இளைஞர்களை ஆயுதப்போராட்டத்தை நோக்கி கவர வழிவகை செய்தது.

### மதமாற்றங்களுக்கு எதிராக தீவிரமாகச் செயற்பட்டவர்

ஜனநாயக வழியிலான போராட்டங்களினால் எமது இனத்தை சிங்கள அரசு தனது படைப்பலத்தினால் அடக்குகின்றது. இவ்வாறான சூழலில் நாமும் வன்முறை செயற்பாட்டின் மூலமாகத்தான் அதற்கு ஈடு கொடுக்க முடியும் என்ற கருத்து அவரது உரையாடல்களின்; கரும் பொருளாக எப்போதும் அமைந்திருக்கும். அந்தக் காலக்கட்டத்தில் புத்தூர் போன்ற பிரதேசங்க ளில் அரசின் அனுசரணையுடன் மத மாற்றச் செயற்பாடுகள் நடைபெற்றிருந்தன. சிவகுமாரன் அவ்வாறான மதமாற்றச் செயற்பாடுகளை கண்டித்தது மட்டுமல்லாமல் அவற்றிற்கெதிராக தீவிரமாகச் செயற்படவர்.

சிறிமா அரசில் கலாசார அலுவல்கள் பிரதியமைச்சராக இருந்த சோமவீர சந்திரசிறி உரும்பிராயில் உள்ள பாடசாலையொன்றின் நிகழ்வொன்றிற்காக வந்திருந்தார். அவரது காரின் பின் ரயரிற்கு கீழே குண்டை வைத்துள்ளார் சிவகுமாரன். பிரதியமைச்சர் மேடையில் பேச்சை முடித்ததும், சாரதி காரை இயக்கி, பின்னால் செலுத்த முயல, குண்டு வெடித்துள்ளது. ஆனால் பிரதியமைச்சர் காயங்கள் எதுவுமின்றி தப்பிவிட்டார். அதனைத் தொடர்ந்து பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட சிவகுமாரன் பல மாதங்களின் பின் பிணையில் விடுவிக்கப் பட்டார்.



சிறிமாவோ பண்டாரநாயக்க அரசினால் இனரீதியான பல்கலைகழகத் தரப்படுத்தல் முறை அறிமுகமானதைத் தொடர்ந்து தரப்படுத்தலிற்கு எதிராக உயர்தர மாணவர்கள் பலரை ஒன்றுதிரட்டி மாணவர் பேரவை என்ற அமைப்பினை உருவாக்க முன்னின்று உழைத்தவர்களில் சிவகுமாரனும் ஒருவர். கட்டமைப்பு ரீதியாக ஒருங்கமைக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தினை ஆரம்பித்து வைத்தது இந்த மாணவர் பேரவை அமைப்பேயாகும்.

> தியாகி சிவகுமாரனின் உருவச்சிலை உரும்பிராயில் மூன்று தடவைகள் அமைக்கப்பட்டு உடைக்கப்பட்ட நிலையில் வெண்கலத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட நான்காவது சிலையே இன்று உரும்பிராய் சந்தை வளாகத்தில் காணப்படுகின்றது. பல்லாயிரம் மக்களின் கண்ணீருக்கு மத்தியில் அவரது உடல் தகனம் செய்யப்பட்ட வேம்படி மயானத்திலும் ஓர் நினைவுத் தூபி அமைப்பட்டுள்ளது. அவரது சிலைகள் உடைக்கப்படலாம் ஆனால் அவர் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தின் வரலாற்றுச் சின்னமாக என்றும் திகழ்வார் என்பது நிச்சயம்.




சிங்கள அரசுடன் சேர்ந்து நடக்கும் தமிழ் அரசியல்வாதிகளை எதிர்க்க வேண்டுமென்ற நோக்கில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் பரவலாக்க அனுசரணையாகச் செயற்பட்ட யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவினைக் கொலை செய்வதற்கு யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசலையின் முன்பு எடுத்த முயற்சியும் வாகனம் சேதமடைந்ததோடு துரையப்பா காலதாமதமாக வந்ததால் உயிர் பிழைக்க வைத்தது. இந்தக் கொலை முயற்சியைத் தொடர்ந்தும் சிசவகுமாரன் யாழ் சிறையிலும், அனுராதபுரம் சிறையிலும் ஒன்றரை வருடங்களுக்கு மேலாகக் கைதியாக இருந்தார்.

### உலகத் தமிழர் மாநாட்டில் தீவிரமாகச் செயற்பட்டவர்

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் தீவிர தொண்டனாகக் கடமையாற்றிய சிவகுமாரன் அந்த மகா நாட்டின் இறுதி நாளன்று பொலிசாரினால் நடாத்தப்பட்ட அடாவடித்தனத்தினை நேரில் பார்வையிட்டார். அதற்குப் பொறுப்பானவர்களைப் பழி வாங்கியே தீருவேனென்று அன்றே சபதமெடுத்துக் கொண்டார். அவ்வுள்ளக் கொதிப்பின் விளைவே தமிழ் ஆராய்ச்சி மாகா நாட்டு அசம்பாவிதத்திற்குப் பொறுப்பதிகாரியாக இருந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசிறி மீது சிவகுமாரன் குண்டு வீச்சு நடத்தி சுட முற்பட்டமைக்குக் காரணமாகும். அச் சம்பவம் வெற்றியளிக்காவிட்டாலும் எப்படியோ பழி வாங்கியே தீருவேன் என்ற முனைப்புடன் செயற்பட்டதன் விளைவே சிவகுமாரன்- அந்தத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடைபெற்று ஆறு மாதத்திற்குள்ளேயே தன்னுயிரைக் காவு கொடுக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது.

### உயிர்பிரிந்த சந்தர்ப்பம்

பொலிஸ் தேடுதல்களிலிருந்து ஒழிந்து வாழ வேண்டிய நிலை மற்றும் தனது தீவிர செயற்பாடுகளிற்கு நிதி ஒரு தடையாக இருந்த சூழலில் பலரிடம் சென்று நிதியுதவி கேட்டும் எல்லோரும் கைவிரித்த நிலையிலேயே கோப்பாய் கிராமிய வங்கியில் பணத்தைத் திருடுவதற்கு சிவகுமாரன் முடிவிற்கு வந்தார். அதுவும் அந்த வங்கியில் வேலை செய்த ஒரு ஊழியரின் தகவல்களின் அடிப்படையில்தான் அங்குள்ள பணத்தைக் கொள்ளையிடுவதற்குத் திட்டமிட்டார். இருந்தும் அந்தச் செயற்பாடு அவரிற்குக் காலனாக மாறிவிட்டது. அந்தக் கொள்ளைச் சம்பவத்துக்கு முன்பே தன்னிடமிருந்த சயனைட்டினைப் பாணில் நனைத்துக் காகத்திற்குக் கொடுத்து ஒத்திகை கூட சிவகுமாரன் பார்த்திருக்கின்றார்.

தினமும் தவறாது உடற்பயிற்சியில் ஈடுபடும் சிவகுமாரன் ஒரு நாள் காலை உயர்த்தித் தூக்கி உடற்பயிற்சி செய்யும் போது கதவின் மேற்புறத்திலிருந்த திறாங்கு அவரின் காலில் குற்றி ஓர் காயத்தை ஏற்படுத்தியிருந்தது. வங்கியில் கொள்ளையிட முற்பட்ட போது உசாரடைந்த ஊழியர்களின் செயற்பாட்டினால் இவர் வங்கியிலிருந்து ஓடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பொலிசாரும் பின் தொடரவே தோட்டங்களிற்கூடாக ஓடிய சிவகுமாரன் காலில் ஏற்கனவே இருந்த காயத்தில் மரவள்ளிக் கட்டை ஏறியதன் விளைவாகத் தொடர்ந்து ஓட முடியாமல் நின்ற போது பொலிசார் அவரை நெருங்கிய போது சிவகுமாரன் பொலிசினுடைய தன்னியக்கத் துப்பாக்கியினைப் பறித்து அவரைச் சுட முயன்றிருக்கிறார். அப்போது அந்தப் பொலிஸ் அதிகாரி தனக்கு மூன்று பெண் பிள்ளைகள் என்றும் அவர்களுடைய தாயாரும் இறந்து விட்டதாகவும் தானும் இறந்தால் அப்பிள்ளைகள் அநாதைகளாகி விடுவார்களென்று கெஞ்சியதன் அடிப்படையில் (சிவகுமாரன் அனுராதபுர சிறையிலிருந்த காலங்களில் சிங்களம் பேசுவதற்கு நன்கு கற்றுக் கொண்டவர்) சிவகுமாரன் அவரைச் சுடாது தன்னிடமிருந்த சயனைட்டை தானே அருந்தித் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

சிவகுமாரன் வைத்தியசாலையில் இறந்த பின்பு அவரது கைக் கடிகாரம் மற்றும் அவரது காற்சட்டைப் பையிலிருந்த பணம் ஆகியவற்றை சிவகுமாரனின் தந்தையிடம் கையளித்துவிட்டு 'உங்கள் மகன் ஓர் தெய்வப் பிறவி நினைத்திருந்தால் என்னைச் சுட்டிருக்கலாம்' எனக் கூறி அவரது காலில் வீழ்ந்து வணங்கியுள்ளார் அந்தப் பொலிஸ் அலுவலர்.

### சாதிக்கொடுமையை எதிர்த்து வந்தவர்


சிவகுமாரன் ஓர் ஆயுதப் போராளி மட்டுமல்ல. தமிழர்கள் மத்தியிலிருந்த சீர்கேடுகளை, குறிப்பாக சாதிக் கொடுமைகளை இள வயதிலுருந்தே எதிர்த்து வந்த ஒருவர். தன் இளம் வயதிலேயே உரும்பிராய் வைரவர் கோவிலில் சமபந்தி போசனத்தை நடாத்தி இளைஞர்களிடையே எழுச்சியை உருவாக்கியவர். அத்துடன் சாவு வீடுகளில் பறை மேளம் அடிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற முயற்சியில் உரும்பிராயிலுள்ள அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடி பறை மேளங்களை உரும்பிராய் சந்தியில் போட்டு உடைத்து எரித்தார்.

தியாகி சிவகுமாரனின் உருவச்சிலை உரும்பிராயில் மூன்று தடவைகள் அமைக்கப்பட்டு உடைக்கப்பட்ட நிலையில் வெண்கலத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட நான்காவது சிலையே இன்று உரும்பிராய் சந்தை வளாகத்தில் காணப்படுகின்றது. பல்லாயிரம் மக்களின் கண்ணீருக்கு மத்தியில் அவரது உடல் தகனம் செய்யப்பட்ட வேம்படி மயானத்திலும் ஓர் நினைவுத் தூபி அமையப்பட்டுள்ளது. அவரது சிலைகள் உடைக்கப்படலாம் ஆனால் அவர் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தின் வரலாற்றுச் சின்னமாக என்றும் திகழ்வார் என்பது நிச்சயம்.

# 'வெறியாட்டு'

எழுதப்படாத நாடக வரலாறு - 03

■ தேவநாயகம் தேவானந்த்





கவிஞர் முருகையன்

இலங்கை வரலாற்றில் கறைபடிந்த நிகழ்வாகத் தென்னாசியாவிலேயே சிறந்த அறிவுப்பொக்கிசமாகக் காணப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப்பட்ட நிகழ்வு பதிவாகியது. தமிழ்த் தேசியப் போராட்டத்தை இது உத்வேகப்படுத்தியது. நூல்கள் கட்டுக்கட்டாகச் சாம்பலாகிக் கிடந்த காட்சிகள் நெஞ்சை உருக்கின. ஒரு பண்பாடுமிக்க மனித சமூகத்துக்கான செயலாக இதனைப் பார்க்க முடியாது என்பது வெள்ளிடை மலை. மனித சமூகம் செய்யமுடியாத செயலொன்றைக் கட்டவிழ்த்து விட்டு மாறாத வடுவை அப்போதைய அரசு இலங்கை மீது ஏற்படுத்தியது. இதன் பின்னர் தமிழரின் தனிநாட்டுப் போராட்டத்துக்கான நியாயமானதாகத் தோற்றப்பாடு உலகளவில் ஏற்பட ஆரம்பித்தது எனலாம்.

இலங்கை வரலாற்றை யாழ்ப்பாண நூலக எரிப்பை தவிர்த்து எழுதிவிட முடியாது. அதேபோல ஈழத்து தமிழ்நாடக வரலாற்றில் யாழ்ப்பாண நூலக எரிப்பைப் பதிவு செய்த நாடகங்களைத் தவிர்த்து அதன் வரலாற்றையும் எழுத முடியாது எனலாம். இந்தக் காலத்தில் பல நாடகங்கள் நூலக எரிப்புப் பற்றி பேசியிருப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. அவ்வாறான பதிவுகளைத் தேடிய பயணங்கள் தொடரப்பட வேண்டும். இருப்பினும், தற்போது கையில் கிடைப்பது கவிஞர் முருகையனின் 'வெறியர்ட்டு' என்ற நாடகமாகும். இது நூலக எரிப்புக்கான முதன்மையான முத்தாய்ப்பான ஒரு படைப்பு எனலாம்.

★ ★ ★ ★

'கலைஞன் காலத்தைப்பதிவு செய்பவன்' என்பார்கள். தான் வாழ்ந்த காலத்தின் பட்டறிவை, பட்டுணர்ந்ததை தனது கலையூடாகப் பதிவு செய்பவனாக இருத்தல் வேண்டும். அது வெறும் சுவரொட்டிப் பரப்புரையாக இருக்காமல் மனதில் பதியும் பக்குவம் கொண்ட படைப்பாக உருப்பெற வேண்டும். கலைஞனின் மனதில் காயத்தை ஏற்படுத்தும் ஒரு காலத்தின் சம்பவம். அதுவே பின்னர் அவனுள் மெல்ல அடைகாக்கப்பட்டு ஒரு படைப்பாக வெளிவரும். அப்போது அது உலகப்பொதுமையானதாக மானுடத்தின் மனச்சாட்சியை உலுக்குவதாக அமைந்து விடும். அவ்வாறு மானிடத்தின் மனச்சாட்சியோடு பயணித்து தாக்கத்தை ஏற்படுத்துகின்ற படைப்புக்கள் காலத்துள் வாழும். எந்தக் காலத்திலும் சமகால நிலைமைகளோடு ஒத்துப் போகும். பல தலைமுறை கடந்தும் வாசிக்கும் வாய்ப்பைப்பெறும். அதற்கான அர்த்தங்களைக் கொடுத்து ஒரு வகையான ஈர்ப்பு சக்தியைக் கொண்டிருக்கும். மனிதப்பொது வாசிப்புப்பெறும் படைப்புக்கள் புதிய புதிய அர்த்தங்களைக் கொடுத்து மேலும் மேலும் உயிர்பெற்று வியாபிக்கும்.

'வெறியாட்டு' நாடகமும் அவ்வாறான ஒரு படைப்பு எனலாம். கலை காலத்தின் கண்ணாடி என்பதை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி நிற்கிறது. பச்சையான பரப்புரை நெடில் இதில் இல்லை. சுவரொட்டிகள் போன்று வெளிப்படையான பரப்புரையும் கிடையாது.

மிகுந்த பொறுப்புணர்வோடும், மக்களுக்கு நம்பிக் கையூட்டும் விதமாகவும், சரியான திசையைத் தொட்டுக் காட்டக்கூடிய வகையில் உண்மையின் தரிசனங்களை வழங்குவோராகவும் மிகுந்த நிதானத்துடன் பணியாற்றும் பொறுப்பு கலைஞர்களுக்கு உண்டு என்பதை இந்தப்படைப்பு உறுதிப்படுத்துகின்றது எனலாம். மிக ஆழமாகச் சிந்தனையைத் தூண்டும் விதமாகச் சித்தாந்தத் தெளிவோடு தரப்பட்டிருக்கிறது.

"யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப்பட்ட அந்த அழியாத வடுவை, அந்த எரியூட்டலை நிகழ்த்தி வெறியாட்டம் ஆடி மகிழ்ந்த வெறிக்கூட்டத்தைத் தோலுரித்துக்காட்ட, மிகுந்த நிதானத்தோடும், கலை இலக்கிய கோட்பாட்டடிப்படையில் ஆழமான கவித்துவத்தால் அந்த நாடக பின்னப்பட்டுள்ளது" என்று இந்த நாடகத்தை நெறிப்படுத்திய வீ.எம். குகராஜா குறிப்பிடுகிறார்.

'வெறியாட்டு' பாட்டுக் கூத்து என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது பாட்டு விரவிய கூத்து என்று அர்த்தம் கொள்ளலாம். பொதுவாக நடிக்கப்படுபவை நாடகம் என்றும் ஆடப்படுவதுகூத்து என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. இவை திட்டவட்டமான வரையறைகள் இல்லை என்பதும், வேறுபடும் அர்த்தங்களில் இவை உபயோகிக்கப்படுகின்றன என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும். ஆனால் வெறியாட்டை கூத்து என்று வரையறுக்க முடியாது என்று இதன் ஆசிரியர் முருகையன் குறிப்பிடுகின்றார். ஆட்டங்களையும் பாட்டுக்களையும் கவிதைகளையும் கொண்டதொரு கவி நாடகம் என்று இதனை வரையறுக்க முற்படலாம்.

கவிதைகளால் உரையாடல்களும் பாடல்களுமாக மிக கலைத்துவத்துடன் 'வெறியாட்டு' நாடகம் நெய்யப்பட்டுள்ளது. இதனை ஈழத்தின் மூத்த கவிஞர் முருகையன் 1981ஆம் ஆண்டு எழுதியுள்ளார். அதனை வி.எம். குகராஜா நெறிப்படுத்தியிருந்தார். பட்டப்படிப்புககள் கல்லூரி தயாரித்திருந்தது. தேசிய கலை இலக்கியப் பேரவை 1986ஆம் ஆண்டு இதனை நூலாக வெளியிட்டுள்ளனர்.

முருகையனின் கவிதைகள் காட்சிப்பெறுமானம் உடையவை படிமங்களால் நிறைந்தவை. பல அர்த்தங்களைக் கொடுப்பவை. இதனால் மேடையில் அவை செறிவுமிக்க காட்சிகளாக பார்வையாளரை ஆக்கிரமிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன. இதனை கவிஞர் முருகையன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்,

"பலதளங்களிலும் சென்று பொருள்பயக்கும் இயல்பு கவிதைப்படிமங்களுக்கு உண்டு 'வெறியாட்டிலே' நாம் சில கவிதைப் படிமங்களை மேடை மீது காட்டுகின்றோம். படிமங்கள் என்றால் என்ன? உவமையும் உவமையின் வழி வந்த உருவகங்களும் குறியீடுகளுமே படிமங்கள் ஆகும். இவை பெரும்பாலும் ஐம்புல நுகர்ச்சிக்கு இடமாவன. புலநுகர்ச்சிப்படிமங்களைக் கருவியாக்கித் தன் எண்ணங்களையும் உணர்வுகளையும் பிறருக்குத் தொற்ற வைப்பதற்குக் கூர்மையான சிறப்பு வகைப்பட்டதோர் உணர்திறன் வேண்டப்படுகிறது. இந்த உணர்திறன் புலநுகர்ச்சிப் பண்பின் பக்குவப்பாட்டினால் உண்டாவது. ஆகையால் இதனை நாம் புலன்மை (sensibility) என்னும் பதத்தினாலே குறிக்கலாம். புலன்மை உடையவன் புலவன். புலவன் இயற்றுவன பாட்டுக்கள் ஆகையினால் தான் இந்த அரங்க நிகழ்வைப் பாட்டுக் கூத்து என்று கூறுகின்றோம்."

(தொடரும்)

## முஸ்லிம் அரசியல்...

அரசில் பதவி வகித்த அனைத்து முஸ்லிம் அரசியல்வாதிகளும் தற்போது அடிப்படைவாதத்தை மிக சூட்சமமான முறையில் பாதுகாத்துள்ளார்கள். இவர்களின் முறையற்ற செயற்பாடுகளால் சாதாரண முஸ்லிம் மக்களே பாதிக்கபடுவார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

குருநாகல் மருத்துவர் ஷாபி தொடர்பாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை இலங்கை மருத்துவ சபைக்கு முறைப்பாடு செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:-

மனித உரிமை மீறல்களுக்கு அப்பாற்பட்டுப் பெரும் குற்றம் செய்துள்ளார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ள குருநாகல் மருத்துவமனை மருத்துவர் சேகு சிஹாப்தீன் மொஹம்மட் ஷாபி விவகாரத்தில் இலங்கை மருத்துவ சபை தமது பொறுப்புக்களை மீறியுள்ளது.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தால் முஸ்லிம் மக்கள் உட்பட அனைத்து மக்களும் தற்போது பாதிக்கப்பட்டுள்ளார்கள். மூல காரணியாகவுள்ள அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக மாத்திரமே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தோம்.

குற்றச்சாட்டுக்கள் போலியானவை என்று நிரூபியுங்கள் என்று அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு ஆலோசனை வழங்குவதை விடுத்து முஸ்லிம் அமைச்சர்கள் அவருக்குச் சார்பாக செயற்பட்டுள்ளமை அரசியல் ரீதியில் அவர்கள் செய்த தவறாகும்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிப்பதற்கு பதிலாக இன்று அனைத்து முஸ்லிம் அரசியல்வாதிகளும் அடிப்படைவாத்தை பாதுகாக்க முற்பட்டுள்ளமை பொறுப்பற்ற செயற்பாடாகும்.

இவர்களின் செயற்பாடு எதிர்காலத்தில் ஏற்பட கூடிய விளைவுகளுக்கு தற்போதே அடித்தளமிட்டுள்ளது. நாட்டு மக்களே அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க ஜனநாயக ரீதியில் பலமான அரசை ஏற்படுத்த வேண்டும். என்றார். (எ)

## தேர்தல்களில்...

என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுள்ளது. அதன்பின்னர் தனிப்பட்ட முறையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சில அமைச்சர்களுடன் பேசியுள்ளார். அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என்று தெரியவந்தது.

இனித் தேர்தலில் போட்டியிட மாட்டேன். அதேசமயம் மகிந்த தரப்புக்கும் ஆதரவளிக்க மாட்டேன். ஐக்கிய தேசிய முன்னணி புதிய வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் - கிரமமான அரசியல் வேலைத்திட்டத்தை முன்வைத்தால் அதற்கு ஆதரவளிப்பது பற்றிப் பரிசீலிப்பேன். இல்லாவிட்டால் நடுநிலைமை வகிப்பேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார் என்றும் தெரியவருகின்றது. (எ)

## அமைச்சர்கள்...

கட்சியின் அரசியல் நாடகம் என்று விமர்சித்துள்ளார் மகிந்த ராஜபக்ச ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான அனுர பிரியதர்சன யாப்பா.

பொது மக்கள் முன்னணியின் (பெரமுன) கொழும்பு அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குற்றஞ்சாட்டப்பட்ட 3 பேரைத் தவிர ஏனைய எவருக்கும் பதவி விலக வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்படவில்லை. இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும் என்பதே எமது நோக்கம். தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படவேண்டும். குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளாதவர்களும்கூட இன்று தமது தரப்பினருடன் கூட்டாகப் பதவி விலகியமையால் எந்த மாற்றமும் ஏற்படாது.

இலங்கையின் தேசிய கொள்கைக்கும், கலாசாரத்துக்கும் அப்பால் செல்லும்போது பிரச்சினை தோற்றம் பெறவே செய்யும். பிரச்சினைகளுக்குத் தீர்வை காண்பதை விடுத்து அரசு போலியான அரசியல் நாடகங்களையே அறிமுகப்படுத்துகின்றது - என்றார். (எ)

## முஸ்லிம்...

கவலையையும், கடுமையான கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளது முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பு.

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அந்த அமைப்பு முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கை அரசு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பின் 14 ஆவது பன்னாட்டு மாநாடு சவூதி அரேபியாவில் நடந்துள்ளது. கடந்த 31ஆம் திகதி அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இலங்கை விவகாரமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு மீது அண்மையில் நடத்தப்பட்ட வன்முறைகளை அந்தக் கூட்டமைப்புக் கடுமையாகக் கண்டித்துள்ளது. இந்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்களைப் பொறுப்புணர்வோடு நீதிக்கு முன் கொண்டுவரவேண்டும் என்றும், இலங்கை முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் அந்தக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. (எ)

## இஸ்லாமிய...

பிக்குகளே தீர்வை முன்வைக்க வேண்டும். தமது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அரசியல்வாதிகள் நெருக்கடிகளைத் தீவிரப்படுத்தாது விலகிக் கொள்வதே பொருத்தமானது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பொதுபல சேனா அமைப்பின் தலைவரும், அண்மையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வழங்கிய பொது மன்னிப்பில் சிறையில் இருந்து வெளிவந்தவருமான கலகொட அத்தே ஞானசார தேரர்.

பொதுபல சேனா அமைப்பின் கொழும்புத் தலைமையகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரிசாத் பதியுதீன், அசாத் சாலி, ஹிஸ்புல்லா ஆகியோர்பதவி விலகியமைபிரச்சினைக்குத் தீர்வாகாது. ஏப்ரல் 21ஆம் திகதி அடிப்படைவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இனங்களுக்கிடையிலான தேசிய நல்லிணக்கம் சீர்குலைந்துள்ளது. இனங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிளவைச் சரி செய்வதற்கு அரசியல்வாதிகள் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. மாறாகத் தேவையற்ற கருத்துக்களை தெரிவித்துப் பிரச்சினைகளைத் தீவிரப்படுத்தியுள்ளார்கள்.

விடுதலை புலிகள் அமைப்பை விடவும் கொடிய போக்கை இஸ்லாமிய அடிப்படைவாதம் கொண்டுள்ளது. விடுதலை புலிகள் ஒரு கோரிக்கையை முன்வைத்துப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். அவர்களின் போராட்டம் வலுப் பெறுவதற்கு அப்போதைய அரசும் ஒரு காரணியாக அமைந்தது. அரசியல் கொள்கையைக் கொண்டமையால் விடுதலைப் புலிகளின் கோரிக்கை அரசியல் மட்டத்தில் விவாதிக்கப்பட்டு தீர்வைக் காண வழிமுறைகள் வகுக்கப்பட்டன. இஸ்லாமிய அடிப்படைவாதம் விடுதலைப் புலிகளுக்கும் அப்பாற்பட்டது. மதத்தை அடிப்படைவாதமாகக் கொண்ட போராட்டத்துக்கு மத ரீதியிலேயே தீர்வைக் காணமுடியும். இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கும் வல்லமை பௌத்த பிக்குமார்களிடமே காணப்படுகின்றது.

தற்போது அரசியல்வாதிகள் பிரச்சினைகளைத் திசை திருப்பி விடுகின்றார்கள். இந்த விடயத்தில் அரச தலைவர், தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் முறையான ஒரு தீர்வை முன்வைக்கவில்லை. பௌத்த பிக்குகளால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க முடியும். அதற்கு அனைத்து மக்களும் தனிப்பட்ட அரசியல் வேறுப்பாடின்றி ஆதரவு வழங்கவேண்டும். எதிர்வரும் 7ஆம் திகதி பொதுபல சேனா அமைப்பின் புதிய கொள்கைத் திட்டங்கள் வெளியிடப்படும். அரபு நாட்டின் கலாசாரங்கள் எமது நாட்டுக்குப் பொறுத்தமற்றவை என்பதே எமது முதன்மைக் கொள்கையாகும். நாட்டில் தேசிய நல்லிணக்கத்தோடு வாழும் முஸ்லிம்கள் பாரம்பரியமாகப் பின்பற்றிய கலாசாரங்கள் தற்போது மறக்கடிக்கப்பட்டுள்ளன. சிறந்த முஸ்லிம் தலைவர்களும், சாதாரண மக்களும் அன்று ஏனைய இனங்களுடன் ஒருமைப்பாட்டுடன் தேசிய கலாசாரத்துக்கு அப்பால் செல்லாமல் வாழ்ந்தார்கள்.

காலப்போக்கில் சிறந்த மனிதர்களின் செயற்பாடுகள் மழுங்கடிக்கப்பட்டு அடிப்படைவாதிகளின் செல்வாக்கு அரசியல்வாதிகளால் ஊக்குவிக்கப்பட்டன. நாட்டின் கல்வி முறைமைக்குப் பொருத்தமற்ற மத்ரஷா உள்ளிட்ட அடிப்படைவாதப் பாடசாலைகள் முழுமையாக இல்லாதொழிக்கப்படவேண்டும். அப்பாவி இளைஞர்களை தற்கொலைக் குண்டுதாரிகளாக மாற்றுவதே இந்த அடிப்படைவாதப் பாடசாலைகளின் முக்கிய நோக்கம். முஸ்லிம் சமூகமும் முதலில் தங்களின் பிள்ளைகளுக்கு நாடு பற்றிப் போதிக்க வேண்டும். தேசிய கலாசாரத்தையும், குரானில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மை தன்மைகளையும் முறையாகப் போதிக்கவேண்டும். - என்றார். (எ)

## அமைச்சர்களின்...

தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் முகமாகவும் முஸ்லிம் அமைச்சர்கள் சகலரும் கூண்டோடு பதவி துறந்தமை வரவேற்கத்தக்க விடயம். இதனூடாக இனவாதிகளுக்கும் குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க முயலும் கும்பலுக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் தக்க பாடம் புகட்டியுள்ளனர். சரியான நேரத்தில் உரிய தருணத்தில் இந்தப் பாடம் புகட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற கொடூரத் தாக்குதல்களை முஸ்லிம் அரசியல்வாதிகள் அனைவரும் மிகவும் வன்மையாகக் கண்டித்தனர். ஏன் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலும் அவர்கள் உறுதியாக இருக்கின்றார்கள். நாமும் இதில் உறுதியாக இருக்கின்றோம்.

அதேவேளை, தாக்குதலுடன் தொடர்புபடாத அப்பாவிகள் கைதுசெய்யப்படக்கூடாது எனவும், அவ்வாறு கைதுசெய்யப்பட்ட அப்பாவிகள் விடுவிக்கப்படவேண்டும் எனவும் முஸ்லிம் சமூகம் வலியுறுத்தி வருகின்றது. இது நியாயமானது.

இந்த நிலையில், தாக்குதல்கள் தொடர்பில் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் மீதும், முஸ்லிம் ஆளுநர்கள் இருவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை நடத்தி வருகின்றது.

அதற்கிடையில், இந்த விவகாரத்தை இனவாதிகளும், குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க முயலும் கும்பலும் கையிலெடுத்து நாட்டில் மீண்டும் ஓர் இனக்கலவரத்தைத் தூண்டும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இவர்களின் செயற்பாடுகளுக்கு உரிய தருணத்தில் தக்க பாடம் புகட்டப்பட்டுள்ளது. இனவாதிகளிடமிருந்து முஸ்லிம் மக்களைப் பாதுகாக்கும் வகையிலும், குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானோர் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் முகமாகவும் முஸ்லிம் அமைச்சர்கள் சகலரும் கூண்டோடு பதவி துறந்துள்ளனர். இது வரவேற்கத்தக்க விடயம் - என்றார். (எ-22)

## ரிசாத்தை...

மாத்தறையில் உள்ள விகாரை ஒன்றின் முன்பாகவே இவர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனுக்கும், உயிர்த்த ஞாயிறு தினத்தில் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியவர்களுக்கும் இடையே தொடர்பு உள்ளது என்று தேரர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அமைச்சுப் பதவியிலிருந்து விலகியுள்ள ரிசாத் பதியுதீனுக்கு எதிராக உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும், அவர் கைது செய்யப்படும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

முன்னதாக அமைச்சுப் பதவியில் இருந்து ரிசாத் பதியுதீன் விலக்கப்பட வேண்டும் என்று மகிந்த ராஜபக்சவும் அவர் தரப்பு அரசியல்வாதிகளும் வலியுறுத்தியிருந்தனர். எனினும் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அடிப்படை ஆதாரமற்றவை என்று ரிசாத் பதியுதீன் தெரிவித்திருந்தார். ரிசாத் பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை என்று தலைமை அமைச்சர் ரணில் உட்பட ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முக்கியஸ்தர்கள் பலரும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரெலிய ரத்ன தேரர், ரிசாத் பதியுதீனை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பதவி நீக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கண்டியில் உணவு தவிர்ப்புப் போராட்டம் மேற்கொண்டார். இதையடுத்து ரிசாத் பதியுதீன் உட்பட அனைத்து முஸ்லிம் அரசியல் தலைவர்களும் தமது அமைச்சுப் பதவிகளைத் துறந்தனர். இந்த நிலையில் தற்போது ரிசாத் பதியுதீனைக் கைது செய்ய வேண்டும் என்று கோரி தேரர்கள் சிலர் பட்டினிப் போராட்டத்தைக் கையில் எடுத்துள்ளனர். (எ)

## ஈகை...

நடைபெற்ற தலை பிறையை தீர்மானிக்கும் மாநாட்டில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. புனித ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்ற முஸ்லிம் மக்கள் இன்று நோன்புப் பெருநாளை கொண்டாடவுள்ளனர்.வாசகர்கள் அனைவருக்கும் இன்பம் பொங்கும் ஈகை திருநாள் ஈதுல் பித்ர் நல் வாழ்த்துக்கள்!

## மேல்...

ஆளுநராக ஏ.ஜே.எம். முஸம்மில் நேற்று நியமிக்கப்பட்டார். அவர் அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.மேல் மாகாண ஆளுனராகப் பதவி வகித்திருந்த அசாத் சாலி நேற்று முன்தினம் பதவியில் இருந்து விலயிருந்தார். அதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே ஏ.ஜே.எம். முஸம்மில் நியமிக்கப்பட்டுள்ளார். கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயரான ஏ.ஜே.எம். முஸம்மில், இறுதியாக மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றியிருந்தார்.

அதேவேளை, கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவும் நேற்றுமுன்தினம் பதவியில் இருந்து விலகியிருந்தார். அந்த வெற்றிடத்துக்கு இன்னமும் புதிய ஆளுநர் நியமிக்கப்படவில்லை. (எ-22)

## ஹிஸ்புல்லா...

பியர்கள் சிலரைச் சந்தித்து இரகசியமாக நடத்திய கலந்துரையாடல் என்று கூறப்படும் காணொலிப் பதிவுகள் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகத் தொடங்கியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு மறுநாள் 22ஆம் திகதி, கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாசிக்குடாவில் உணவகம் ஒன்றில் சில சவூதி அரேபியர்களைக் கிழக்கு முன்னாள் ஆளுநர் சந்தித்தார் என்று தெரிவித்து கண்காணிப்புக் கமராப் பதிவுகள் வெளியாகியிருந்தன. அது தொடர்பாகப் பல்வேறு தரப்பினர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.அந்தக் காணொலிப் பதிவுகள் தொடர்பான விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தற்போது ஆரம்பித்துள்ளது.அதேவேளை, காணொலிப் பதிவுகளில் காணப்படும் சந்திப்பு உத்தியோகபூர்வமானது என்று தெரிவித்திருந்த கிழக்கு முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா, அது தொடர்பாக விசாரணைகளை நடத்தலாம் என்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அவர் கூறியிருந்தார். (எ)

## ஒரு...

தண்டிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது எனத் தெரிவித்த சபாநாயகர் கரு ஜயசூரிய, இந்தச் சந்தர்ப்பத்தில் இடம்பெறும் அரசியல் செயற்பாடுகள் இன அடிப்படையிலான பிளவுகளை ஏற்படுத்தும் விதமாக அமையக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் ஆளுநர்களான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, அசாத் சாலி ஆகியோரைப் பதவி விலக்கக் கோரி போராட்டங்கள் வலுவடைந்திருந்த நிலையில் அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமது பதவிகளைத் துறந்ததுடன் நாடாளுமன்றத்தில் பின் வரிசை உறுப்பினர்களாக இருந்து அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவோம் என்றும் அறிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து தனது கீச்சகப் பதிவொன்றின் ஊடாகவே சபாநாயகர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். (ஒ-5)

## சென். மேரிஸ், கொலின்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 5
வடமாரட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் வே.நகுலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இரண்டு அணிகளும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் எந்தவித கோலையும் பதிவு செய்யாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தகர்ப்பு உதையில் மூலம் வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜூன் 5
மற்றுமோர் ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அருணோதயா விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## பளு தூக்கல் போட்டி

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண்களுக்கான பளு தூக்கல் போட்டி நாளை, நாளை மறுதினம் கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.
இதில் ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டி நாளை புதன்கிழமையும் பெண்களுக்கான பளுதூக்கல் நாளை மறுதினமும் நடைபெறும் என வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் இ. ராஜசீலன் அறிவித்துள்ளார். (422)





20 வயதுக்குட்பட்ட எறிபந்தில்

# கிண்ணத்தை வென்றது தெல்லிப்பழை யூனியன்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட ஆண், பெண்களுக்கான எறிபந்தாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது.
வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் ஆண், பெண்களுக்கான எறிபந்தாட்ட இறுதியாட்டங்கள் நேற்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து முல்லைத்தீவு கோட்டைகட்டியகுளம் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 25:20, 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. மூன்றாம் இடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணி பெற்றது.
பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் முதலாவது சுற்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 25:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இரண்டாவது சுற்றில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது. மூன்றாவது சுற்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 25:17 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாம் இடத்தை வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணி பெற்றது. (422)

17 வயதுப் பிரிவு எறிபந்தில்

# மு/கோட்டைகட்டிய குளம் கிண்ணத்தை சுவீகரித்தது

கரணவாய், ஜூன் 5
வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்தில் 17 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் மாகாண சம்பியனாகியது துணுக்காய் கோட்டைகட்டிய குளம் அ.த.க பாடசாலை.
குறித்த போட்டியின் இறுதியாட்டம் நேற்று கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரியும் கோட்டைகட்டிய குளம் அ.த.க பாடசாலையும் மோதின. மூன்று செற்களைக்கொண்ட இந்தப் போட்டியில் 25:18, 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் இந்த வருடத்துக்கான மாகாண சம்பியனாகியது கோட்டை கட்டிய குளம் அ.த.க. பாடசாலை
இதில் மூன்றாமிடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பெற்றது. (108)



கரம் போட்டியில்

# கிண்ணத்தைக் கைப்பற்றியது வ/வீரபுரம் மணிவாசகர் ம.வி.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற 17 வயதுப்பிரிவுக்குட்பட்ட கரம் போட்டியில் வவுனியா வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலய அணி சம்பியனானது.
இதன் இறுதியாட்டம் நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் வவுனியா வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.



இதில் வவுனியா வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலய அணியினர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை வென்றனர்.

## தாச்சித் தொடரில் இளங்கதிர் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன்5
கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மராட்சி ரீதியாக நடத்தும் மின்னொளியிலான தாச்சித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் குமரநகர் விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 8:3 என்ற புள்ளி அடிப்படையில் இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 5
வடமாரட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் வே.நகுலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.பீலிப் நேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஜூன் 5
ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முரசு மோட்டை விளைபூமி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஜூன் 5
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் சூசையப்பர் விளையாட்டுக்கழகம் நடத்தும் தூயஒளி வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளயாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஜூன் 5
யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் காலை 8.30 மணிக்கு இடம் பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செலயக அணியை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலக அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம் பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச செலயக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதவுள்ளது. (23)

# பும்ராவுக்கு ஊக்கமருந்து பரிசோதனை

இந்திய அணி உலகக்கிண்ணத்தொடரின்தனது முதல் ஆட்டத்தில்இன்று தென்னாபிரிக்கா அணியை எதிர் கொள்கிறது.
இந்த நிலையில், இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான பும்ராவுக்கு நேற்று ஊக்க மருந்து சோதனை நடத்தப்பட்டது. இதன்போது பன்னாட்டு ஊக்க மருந்து தடுப்பு அமைப்பு அதிகாரிகள் பும்ராவிடம் ஊக்க மருந்து பரிசோதனை நடத்தினர்.
பும்ராவின் சிறுநீர் மற்றும் ரத்த மாதிரிகள் எடுத்து பரிசோதிக்கப்பட்டது.
இதன் முடிவுகள் இன்னும் வெளியிடப்படாத நிலையில், ஊக்கமருந்து சோதனை செய்ததால் பும்ரா சற்று பதற்றத்துடன் காணப்படுவதாக கூறப்படுகிறது.




# முகமது நபி சாதனை

நடப்பு உலகக் கிண்ணப் போட்டியில் நேற்று இடம்பெற்ற போட்டியில் இலங்கை - ஆப்கானிஸ்தான்அணிகள்மோதின.இந்தப்போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி வீரர் முகமது நபி ஒரே பந்துப்பரிமாற்றத்தில் 3 இலக்குகளைக் கைப்பற்றிய பெருமையைப் பெற்றார்.
முகமது நபி வீசிய 22ஆவது பந்துப்பரிமாற்றத்தின் 2, 4, 6ஆவது பந்துகளில் திரிமன்னே, மெண்டிஸ், மத்யூஸ் ஆகியோரை ஆட்டமிழப்பு செய்தார். இதன் காரணமாக 1999ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்குப் பிறகு ஒரே பந்துப்பரிமாற்றத்தில் உலகக் கிண்ணத்தில் 3 இலக்குகளைச் சாய்த்த பெருமையைப் பெற்றார் நபி. 1999ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் சிம்பாப்வேவுக்கு எதிராக பாகிஸ்தான் அணி வீரர் சக்லைன் முஷ்டாக் ஹாட்ரிக் சாதனை புரிந்தது குறிப்பிடத்தக்கது.

# தெ.ஆபிரிக்கா - இந்தியா இன்று மோதல்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இன்று இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதுகின்றன. இந்தப் போட்டி இந்தியாவுக்கு இந்த உலகக் கிண்ணப் போட்டியின் முதலாவது போட்டியாகக் காணப்படுகின்றது. தென்னாபிரிக்கா அணி ஏற்கனவே இரண்டு போட்டிகளில் விளையாடி இரண்டு போட்டிகளிலும் தோல்வியைச் சந்தித்தது. தோல்வியின் ரணத்தை ஆற்றிக் கொள்ள தென்னாபிரிக்கா அணி வேட்டையாடும் புலியாகத்தான் களமிறங்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் வேகப் பந்து வீச்சாளர் லுங்கி நிகிடி, டேல் ஸ்ரெய்ன் காயம் காரணமாக இந்தப் போட்டியில் ஆட மாட்டார்கள் என அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. இருவரும் இல்லாதது இந்திய அணிக்கு சாதகமே. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அம்லா முதல் போட்டியில் காயமடைந்து இரண்டாவது போட்டியிலும் விளையாடவில்லை. எனினும் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் அவர் ஆடுவார் என்று கூறப்படுகின்றது. இந்திய அணியைப் பொறுத்த வரை தனது முதல் போட்டியில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அத்துடன் தென்னாபிரிக்கா அணியை கடந்த போட்டியில் பங்களாதேஷ் அணி வீழ்த்தி வெற்றி பெற்றது. ஒரு சிறிய ஆசிய அணி அந்த அணியை வீழ்த்தும் போது இந்திய அணி கட்டாயம் தென்னாபிரிக்காவுடனான போட்டியில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. உலகக் கிண்ணப் போட்டிகளில் இரு அணிகளும் 4 முறை மோதியுள்ளன. இதில் தென்னாபிரிக்கா அணி 3 முறை வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்திய அணியைப் பொறுத்த வரையில் துடுப்பாட்ட, பந்து வீச்சு என சமபலம் நிறைந்த அணியாகவே காணப்படுகின்றது. கோக்லி தலைமையில் அணி காணப்பட்டாலும் டோனி அணியில் இருப்பது அணிக்குப் பலமே. எனவே போட்டி ரசிகர்களுக்கு விருந்தாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. தென்னாபிரிக்காவா ? இந்தியாவா? பொறுத்திருந்து பார்ப்போம்.




# இலங்கை அணிக்கு முதலாவது வெற்றி




12ஆவது உலகக் கிண்ணப் போட்டியின் 7 ஆவது லீக் ஆட்டத்தில் இலங்கை- ஆப்கான் அணிகள் மோதின. இரு அணிகளுமே தலா ஒவ்வொரு போட்டியில் தோல்வியடைந்த நிலையில் இந்தப் போட்டியில் வெற்றி பெறும் கனவுடன் களமிறங்கியன.
இலங்கை அணி 35 ஓட்டங்களால் தனது முதலாவது வெற்றியை பதிவு செய்தது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கான் அணி முதலில் இலங்கை அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.
இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான ஆரம்பத்தை கொடுத்திருந்தனர். அணி 92 ஓட்டங்களைப் பெற்ற போதே முதலாவது இலக்குச் சரிக்கப்பட்டது. அந்த இலக்கு சரிக்கப்பட்டதும் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் வந்த வேகத்திலேயே பவிலியன் திரும்பிக்கொண்டிருந்தனர். ஆப்கான் அணியின் சுழற் பந்து வீச்சுக்கு எதிர் கொள்ள முடியாமல் திணறினர். அணி 182 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்தது. 33 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது.
இதனால் ஆட்டம் 41 பந்துப்பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டது. மீண்டும் களமிறங்கிய இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது. குசல் பெரேரா மற்றும் திமுத் கருணாரத்னவைத் தவிர ஏனைய வீரர்கள் பொறுப்புணர்ந்து ஆடவில்லை. மத்தியூஸ் ஏமாற்றம் அளித்திருந்தார். ஆப்கான் பந்துவீச்சாளர்கள் கலக்கியிருந்தனர். அவர்களில் முகமது நபி ஒரே பந்துப்பரிமாற்றத்தில் 3 இலக்குகளைக் கைப்பற்றி அசத்தியிருந்தார்.
பின்னர் டக் வேர்த் லூயிஸ் முறைப்படி களமிறங்கிய ஆப்கான் அணிக்கு 41 பற்றுப்பரிமாற்றங்களில் 187 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. மழை பெய்த காரணத்தால் ஆப்கான் அணிக்கு துடுப்பெடுத்தாடுவதில் சிக்கல் நிலையே காணப்பட்டது. அணி 57 ஓட்டங்களைப் பெற்ற போது 5 இலக்குகளை இழந்தது. நஜிப்புல் சட்ரன் தனியொருவராகப் போராட ஆரம்பித்தார். இலங்கை அணியின் பந்து வீச்சாளர்களில் பிரதிப் சிறந்த பந்துப்பரிமாற்றங்களை வீசி 4 இலக்குகளைச் சரித்தார். மலிங்கவும் கை கொடுத்தார். இறுதியில் ஆப்கான் அணி32.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

# சக வீரர்கள் மீது மலிங்க பாய்ச்சல்



தோல்விகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளாமல் ஒரு தோல்வியிலிருந்து இன்னொரு தோல்வி என இலங்கை அணி சென்று கொண்டிருக்கிறது என்று இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க சக இலங்கை வீரர்களைச் சாடியுள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
கடந்த ஒன்று அல்லது 2 ஆண்டுகளாக தோற்க வேண்டியது பிறகு தோல்வியை மறப்போம் அடுத்த போட்டிக்கு நகர்வோம் அதில் நன்றாக ஆடுவோம் என்போம் இப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறது. கிரிக்கெட்டை இவ்வாறு ஆட முடியாது.
தோல்விகளிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர தோல்விகளை மறப்பதில் எந்த ஒரு பயனும் இல்லை. நான் 4 உலகக் கிண்ணத் தொடர்களில் விளையாடியுள்ளேன், இருந்தும் எனக்கு ஆப்கான் அணிக்கு எதிரான போட்டி குறித்த பயம் இருக்கிறது. இது போன்று பயம், பதற்றம் இல்லாத வீரர்களிடமிருந்து நூறு சதவீத பங்களிப்பு எதிர்பார்ப்பது கடினம். இதை அவர்கள் யோசிக்க வேண்டும். நூறு சதவீத பங்களிப்பு செய்யவில்லையா நாம் அணிக்கு நியாயமாக நடக்கவில்லை என்பதை அவர்கள் உணர வேண்டும்.
அனைத்து வீரர்களும் தங்கள் தவறுகளை உணர வேண்டும். செய்த தவறுகளையே திரும்பத் திரும்பச் செய்தால் எப்படி? அணியின் மூத்த வீரராக நான் கூறுவதெல்லாம் ஒவ்வொருவரும் கடமையைச் சரியாகச் செய்யாத போது பயம் ஏற்படவேண்டும். தோல்வி குறித்து வெட்கப் படவேண்டும். நாம் சிறப்பாக ஆடியே ஆக வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும், இல்லையெனில் நம் அணி முன்னேறாது.
நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்ய தேர்வு செய்யப்பட்ட சிறந்த 15 வீரர்கள் இவர்கள். ஆகவே இவர்கள் இனி பயத்துடன் ஆடுவார்கள் என்று நினைக்கிறேன். பலதரப்பட்ட ஆட்டச்சூழல்களை கருத்தில் கொண்டு களத்தில் ஆடும்போது ஒருவரை ஒருவர் அனுசரித்து ஒத்துழைப்புடன் ஆடுவது அவசியம்.
வீரர்களுக்கு தன்னம்பிக்கை அவசியம், இந்தத் தருணத்தில் நாம் திறன்களை வளர்த்துக் கொள்ள முடியாது, ஆனால் மனரீதியாக கடினமாக வேண்டும் - என்றார்.

## கார் விற்பனைக்கு

Toyota YARIS, Silver Colour, Full option, Auto, Dual Air bags, A/C, Power mirrors, Power shutters, reverse camera, remote key(Doctor used car)

(CS 25846)(4.17)

**Contact - 0718175823**


# 2019 உலகக் கிண்ணத்தில் முதல் சதத்தை பதித்தார் ரூட்



உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் சதம் பெற்று இந்த உலகக் கிண்ணத்துக்கான முதல் சதத்தைப் பதிவு செய்தார்.

இந்தப் போட்டியில் சிறப்பாக ஆடிய ஜோ ரூட் சதம் 97 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டம் , 10 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக சதம் பெற்றார். இதே போட்டியில் பட்லரும் சதம் கடந்து தனது இந்த உலகக் கிண்ணத்தின் இரண்டாவது சதத்தைப் பதிவு செய்தார். எனினும் இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகக்கிண்ணப் போட்டியில் 2007ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா அணியின் ரிக்கி பொண்டிங்கும், 2011ஆம் ஆண்டு இந்திய அணி வீரர் சேவாக்கும், 2015ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய அணி வீரர் ஆரோன் பின்ஞ்சும் அந்தந்த உலகக் கிண்ணத் தொடர்களில் முதல் சதங்களைப் பதிவு செய்தனர்.


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 06.05.2019 திங்கட்கிழமை சிவபதமடைந்த

எமது தாயார்

### அமரர் குலத்துங்கம் பூரணம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.06.2019) புதன்கிழமை காலை 05.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 07.06.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும். மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்**

சூசையப்பர் வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

**குடும்பத்தினர்.**

## வேலையாள்கள் தேவை

திருமண சேவை நிலையத்திற்கு
பெண் வேலையாள்கள் மட்டும் தேவை.
**070 440 2718**

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கிநின்று வேலை செய்வதற்கு அனுபவம் உள்ள பணிப் பெண் தேவை.
**ஊதியம் 20,000/= - 25000/=**
**077 788 5175, 077 908 4950**

## நந்தூஸ் கிச்சன் திறப்புவிழா

இங்கே சைவ, அசைவ உணவுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இடம் : இல.147, பலாலி றோட், திருநெல்வேலி
காலம் : 06.06.2019 (வியாழக்கிழமை)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**021 222 0101**

(CS 25845) (4.17)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 | 01 |
| 07 | 06 |
| 1946 | 2019 |

### ஆரூரையா சண்முகரட்ணம்

**(ஓய்வுபெற்ற ஊழியர் யாழ். போதனா வைத்தியசாலை )**

தெல்லிப்பளை தென்மேற்கு வல்லுவத்தையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆரூரையா சண்முகரட்ணம் கடந்த (01.06.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆரூரையா அன்னலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக்கணவரும் ஷஷிகலா(UK), கம்சினி(UK), காலஞ்சென்ற கல்பனாமற்றும்மகிழ்றாஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌரிதாசன் (UK), சிவதயாளன் (UK) ஆகியோரின்பாசமிகுமாமனாரும்அபூர்வன்(UK), ஆரூஷன்(UK), ஆஹர்சன் (UK) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற நவரத்தினராசாவின் அன்புச்சகோதரனும் கிரிஜாந். பிரசாந். ஆகியோரின் பெரிய தந்தையும் திலகவதி மற்றும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி. பரமேஸ்வரி. இராஜபூபதி. லோகநாதன். இராசேந்திரம். ஆனந்தராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2019) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**20/5, "அபூர்வ வாசா"**
**சுன்னாகம் கிழக்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 6187400**

## வடஇந்திய பத்திரிநாத் கேதார்நாத் கங்கோத்திரி ஜமுனோத்திரி யாத்திரை

நாள்கள் : 16 | ஆரம்பம் : 16.07.2019 | யாத்திரீகர் : 20

செல்லுமிடங்கள் சுருக்கமாக :
டெல்லி. ஆக்ரா. தாஜ்மகால். ரிஷிகேஸ், சிவானந்த ஆச்சிரமம். தொங்குப்பாலம். ராமர்கோயில். லக்சுமணர் கோயில். ஹரித்துவார். கங்காபூசை. மானுசாதேவி. மந்திர் சண்டிதேவிமந்தி இவை இரண்டு ஆலயங்களும். தொங்கு ஊஞ்சல்(விஞ்சில்) பயணம். கங்கோத்தி. அம்மன் ஆலயம். ஜமுனோத்திரி. அம்மன் ஆலயம்.பத்திரிநாத் 108 வைஸ்ணவ ஆலயங்களில் முதன்மையான ஆலயம். மானா. சரஸ்வதி நதி உற்பத்தியாகும் இடம். கேதாநாத் திருக்கயிலாயமலைக்கு சமமான ஆலயம். வேறு இடங்களும் காணலாம். சென்னையில் ஒரு நாள் சொப்பிங்

NB கேதார் நாத் கெலிக்கொப்ரர் பயணம்.

தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை
4விமானரிக்கட், இந்தியாவில் சுற்றிப்பார்க்க A.C வாகன வசதி. மடப்பள்ளி ஆள்கள் மூலம் உடனுக்குடன் சமைத்த மூன்று வேளை உணவு. காப்பி. ரீ. மினரல்வாட்டர் (குடிநீர்) 2பேருக்கு கட்டில். மெத்தை. வெஸ்ரன் கொமட் குளியலறை. இணைந்த அறைகள் இவை அனைத்தும் எமது சேவை. விருப்பமுடையவர்கள் விபரத்தை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

எந்துளர்களைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.

**விபரங்களுக்கு : கலாநிதி. T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்**
**59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11**
sriranganathan2601@gmail.com | sridevisriranganathan.thuraiappa
**077 768 0102/ 077 736 2154**

(N 10331) (4.17)

## தமிழ்நாடு, கேரளா ஊடான இன்பச் சுற்றுலா

ஆரம்பம்:- 20.06.2019 | நாள்கள் :- 07

செல்லுமிடங்கள் :- சென்னை. மகாபலிபுரம் வேறு இடங்களும். கொடைக்கானல். படகுச்சவாரி. பூந்தோட்டங்கள். அருவிகள் காணலாம். மூணாறு ஏரிகள் சுற்றுலா இடங்கள் காணலாம். தேக்கடி. படகுச்சவாரி. ஊட்டி. பூந்தோட்டங்கள். ஆலப்புளா (கவுசிங்போட்). கொச்சின். சுற்றுலா இடங்கள். வேறு இடங்களும் காணலாம். சென்னையில் ஒருநாள் சொப்பிங். ஆடித்தள்ளுபடியில் சொப்பிங் செய்யலாம்.

இருவழி விமான ரிக்கட்:- மூன்றுவேளை சைவ உணவு. காப்பி. ரீ. குடிநீர். மினரல் வாட்டர். 2 பேருக்கு கட்டில் மெத்தை. வெஸ்ரன் கொமட் குளியலறை இணைந்த அறைகள். **A.C** வாகன வசதி

**N.B.** யாழ்ப்பாணம். கொழும்பு. யாழ்ப்பாணம்:- வீட்டில் இருந்து விமான நிலையம் வரவும். திரும்ப யாழ்ப்பாணம் திரும்பிச் செல்லவும் வாகன வசதி செய்து தரப்படும். விருப்பமானவர்கள் பதிவு செய்யவும்.

விவரங்களுக்கு:-
**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்**
No. 59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு, 11
Email :sriranganathan2601@gmail.com
Facebook : sridevisriranganathan.thuraiappa


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.